இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 252
ஆடி 20 ஆம் நாள்
சனிக்கிழமை
05 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

# கூட்டாட்சி கோருவது பிரிவினை அல்ல

## தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான வழக்கில் தலைமை நீதியரசர் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 5

கூட்டாட்சிக் கோரிக்கை பிரிவினை அல்ல என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராகச் சிங்களக் கடும்போக்குவாத அமைப்புக்களின் பிரதிநிதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்து தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் தீர்ப்பு வழங்கினார்.

'இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இலங்கைக்குள் தனிநாட்டை உருவாக்கும் கொள்கையுடன் செயற்படவில்லை' என்றும் தனது தீர்ப்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பு மற்றும் 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபைத் தேர்தலின்போது அந்தக் கட்சியினால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கை என்பன, 6ஆம் திருத்தத்துக்கு விரோதமாகப் பிரிவினையைக் கோரும் வகையில் உள்ளன என்று 2014ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனோடு தொடர்புடையதாக 6 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

முதலாவது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது. >> 25

## முச்சந்தி முரளி



நீதிமன்றம் சொன்னாப் போல கேக்கவே போயினம்...

## விடாமல் துரத்தும் விபத்துக்கள்



யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்புறமாகவுள்ள தொடருந்துக் கடவையில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் காரொன்று தூக்கி வீசப்பட்டுக் கடும் சேதங்களுக்குள்ளானது. எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. கடவையின் குறுக்கே நின்ற காரை காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியது. (செய்தி பக்கம்–2)

# சம்பந்தன்-விக்கி இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வர னுக்கும் இடையேயான சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள முதலமைச்சரின் இல்லத்தில் இன்று பிற்பகல் 4.30 >> 24

## மூவின மக்களுக்கும் பாகுபாடின்றித் தீர்வு

### ரணில் நேற்று உறுதி

கொழும்பு, ஓக. 5

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குத் துளியளவேனும் பாகுபாடு காட்டாத வகையிலான அரசியல் தீர்வொன்றை இந்த நாடாளுமன்றத்துக்குள் அடைய வேண்டும் எனத் தலைமை அமைச்சர் ரணில் >> 25

## யாழ். நிலவரம் குறித்து மைத்திரியுடன் பேச்சு

### விரைவில் நடத்தும் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணத்தின் தற்போதைய குளறுபடிச் சூழல் குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர அவசிய பேச்சு நடத்தவுள்ளது. இதற்கான நேரத்தை ஒதுக்கித்தருமாறு கூட்டமைப்பு கேட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமைக்குப் பின்னர் ஓரிரு தினங்களுக்குள் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு மாத காலத்தினுள் பல்வேறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. பொலிஸார் சுட்டு ஒருவர் இறந்தார். அதேபோன்று ஒருவர் சுட்டு பொலிஸ் உப பரிசோதகர் ஒருவர் >> 06

## பொலிஸாரைத் தாக்கியோரை புலிகள் என்று கூற முடியாது

[illegible]

>> 23

## வடமராட்சியில் இளைஞனைச் சுட இதுதான் காரணமாம்

விரிவு பக். 02

## சத்தியலிங்கம், டெனீஸ் விவகாரத்தை மீண்டும் கையிலெடுக்கும் விக்கி

யாழ்ப்பாணம், ஓக. 5

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான மீள் விசாரணை, அமைச்சரவை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் ஓய்ந்திருந்த - அடங்கிப் போயிருந்த நிலையில் அவற்றை மீள >> 25

## மாணவர்களுக்கு வந்த சீருடைத் துணிகளால் அதிகாரிகள் அதிர்ச்சி

விரிவு பக். 06

## கூட்டமைப்புக்குள் தனி அணி ஒருபோதும் ஏற்காது ரெலோ

யாழ்ப்பாணம், ஓக. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைத் தவிர்த்து, ஏனைய மூன்று கட்சிகளும் கூட்டமைப்புக்குள்ளேயே ஒரு தனி அணியாகச் செயற்படுவது >> 25

# உலகத் தமிழ் மாநாடு இன்று யாழ். பல்கலையில் ஆரம்பம்

### இரு நாள்களுக்கு ஆய்வுகள், அமர்வுகளுடன் கோலாகலம்

யாழ்ப்பாணம், ஓக. 5

13ஆவது உலகத் தமிழ் மாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது. உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வந்துள்ள 300 க்கும் மேற்பட்ட அறிஞர்களின் பங்கேற்புடன் இரு நாள்கள் மாநாடு நடைபெறவுள்ளது. >> 23

## மேற்குலகின் தேவைப்பாடு கூட்டாட்சியே

விரிவு பக். 12

## புரிந்துணர்வில் ஒப்பமிடாமல் ஓடி ஒழிந்தது தமிழ் அரசல்ல

### கூட்டமைப்புப் பதிவு விவகாரத்தில் சித்தார்த்தனுக்கு மாவை பதிலடி

யாழ்ப்பாணம், ஓக. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளலாம் என்று முயன்றபோது ஓடி ஒழிந்து கொண்டது தமிழ் அரசுக் கட்சியல்ல >> 25

## நியமன உறுப்பினர் பதவியை புளொட் கேட்கவேயில்லை

### பிறகெப்படி குற்றங்காண முடியும் என மாவை பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஓக. 5

வடக்கு மாகாண சபையின் நியமன உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் வழங்கப்படுகையில் தமது கட்சிக்கு வழங்குமாறு புளொட் அமைப்பு கேட்கவும் இல்லை, வழங்குவதாக உறுதியும் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா.

அந்த நியமன உறுப்பினர் பதவியைத் தனது கட்சிக்குத் தராமல் ஈபிஆர்எல்எவ் கட்சியைச் சேர்ந்தவரான யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரனுக்கு வழங்கிவிட்டதாக புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அண்மையில் பிரச்சினை கிளப்பியிருந் >> 25

see more news in newuthayan.com

## மைத்திரி – ரணில் தொடர்ந்தும் இணைந்தே செயற்படவேண்டும்

### சம்பந்தன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 5

தேசிய இனப்பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன. இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரச தலைவர் மைத்திரிபாலவும் தலைமை >> 23



# நிறுத்தாது சென்ற ஹன்ரரை தடுக்கவே சூடு நடத்தப்பட்டது

## வடமராட்சி கிழக்குச் சூடு தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் வாக்குமூலம்

வடமராட்சி, ஓக.5

இவ்வாறு வடமராட்சி கிழக்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள உபபொலிஸ் பரிசோதகர் சஞ்சீவன் வாக்குமூலம் வழங்கினார்.

ஹன்ரரை நிறுத்துவதற்கு முயன்றோம். பின்னுக்கு இருந்தவர்களை நோக்கி ஹன்ரரை நிறுத்துமாறு கத்தினேன். ஆனால் ஹன்ரரை நிறுத்தவில்லை. உடனே முபாரக்கை நோக்கி ஹன்ரரை நோக்கி வடிவாகப் பார்த்து ரயரை நோக்கி - கீழ் நோக்கிச் சுடுமாறு கூறினேன். அவர் ஒரு வெடியை ஹன்ரரை நோக்கிச் சுட்டார்.

யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்களில் ஒருவரான உப பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவன், உயிரிழந்தவரின் தாய் மற்றும் சகோதரி ஆகியோர் நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கினர்.

உப பொலிஸ் பரிசோதகர் வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:

வாகனமொன்றில் மணலுக்குள் புதைத்து கஞ்சா கடத்தப்படுகின்றது என்று இரகசியத் தகவல் கிடைத்தது. பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தேன். பொலிஸ் சீருடையுடன் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை வருமாறு கூறினேன். பொலிஸ் சீருடையுடன் வந்த முபாரக் என்ற கொன்ஸ்டபிளை அழைத்துக் கொண்டு வல்லிபுரக் கோயில் முதன்மை வீதியூடாக நாகர் கோயில்வரை சென்றோம்.

முபாரக்கின் கையில் ரி56ரக துப்பாக்கி கொண்டுவரப்பட்டது. அங்கு சென்ற நாம் தகவல் தொடர்பிலான சில கடமைச் செயற்பாடுகளை மேற்கொண்டோம். பின்னர் நாகர் கோயில் - குடத்தனை முதன்மை வீதியூடாகச் சென்று வீதியோரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி நானும், முபாரக்கும் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி நின்றோம்.

அப்போது நீல நிறத்திலான ஹன்ரர் ஒன்று வந்தது. அதன் முன்பக்கத்தில் மூன்று பேரும், பின்பக்கத்தில் நான்கு பேரும் இருந்தனர். வீதியின் மத்திக்கு வந்து கையைக் காட்டி வாகனத்தை நிறுத்துமாறு சைகை காட்டினேன். ஹன்ரர் என்னை இடிப்பது போல் வந்தது. நான் வீதியோரமாகப் பாய்ந்தேன். ஏன் நிறுத்தாமல் செல்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்து ஹன்ரரைத் துரத்தினோம்.

ஹன்ரரை நிறுத்துவதற்கு முயன்றோம். பின்னுக்கு இருந்தவர்களை நோக்கி ஹன்ரரை நிறுத்துமாறு கத்தினேன். ஆனால் ஹன்ரரை நிறுத்தவில்லை. மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கூட்டி ஹன்ரருக்கு அருகில் 750 மீற்றர் அண்மையாகச் சென்று ஹன்ரரை நிறுத்துமாறு கூறினேன். நான் நெருங்கிய சமயம் ஹன்ரர் மண் பாதை ஒன்றுக்குள் சடுதியாகத் திரும்பியது. உடனே முபாரக்கை நோக்கி ஹன்ரரை நோக்கி வடிவாகப் பார்த்து ரயரை நோக்கி, கீழ் நோக்கிச் சுடுமாறு கூறினேன். அவர் ஒரு வெடியை ஹன்ரரை நோக்கிச் சுட்டார்.

ஹன்ரர் நிறுத்தப்பட்டு அதில் இருந்தவர்கள் குதித்துப் பற்றைக்குள் ஓடினர். மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். முபாரக் அவர்களைச் துரத்திச் சென்றார். நான் ஹன்ரரில் திறப்பு இருக்கின்றதா என்று பார்ப்பதற்காக ஆசனப் பக்கம் சென்றேன். அப்போதுதான் ஹன்ரருக்குக் கீழ் ஒருவர் காயத்துடன் விழுந்து கிடந்தார்.

முபாரக்கை கூட்பிட்ட நான் காயப்பட்டு விழுந்து கிடந்த அவரைத் தூக்கி எமது மோட்டார் சைக்கிளில் ஏற்றி நான் மோட்டார் சைக்கிளைச் செலுத்த அவரை எனக்கும் முபாரக்குக்கும் இடையில் வைத்து அம்பன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அங்கு அம்புலன்ஸில் ஏற்றினார்கள். எங்களில் ஒருவரை வருமாறு கேட்டனர். முபாரக்கை அம்புலன்ஸில் செல்லுமாறு கூறியதுடன் அவரிடம் இருந்து ரி56 ரக துப்பாக்கியை நான் வாங்கிக் கொண்டேன். பின்னர் பொலிஸ் நிலையத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்கினேன். அதிகாரி என்னைப் பொலிஸ் நிலையம் வருமாறும், பொலிஸ் குழுவை அனுப்புகின்றேன் என்றும் கூறினார் - என்றார்.

உயிரிழந்தவரின் தாய் வாக்குமூலமளித்தார். வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். அப்பொழுது வழியில் என்னைக் கண்ட சிலர், எனது மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்தனர். அதன் பின் மருத்துவமனை சென்று உயிரிழந்த என்னுடைய மகனைப் பார்த்தேன் என்று அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சகோதரி வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:

எனது சகோதரனிடம் மதியம் 2.30 மணியளவில் சாப்பிடக் கேட்டேன். அப்போது எனது தம்பி காளி கோவிலுக்குப் போய் வந்து சாப்பிடுவதாகக் கூறிச் சென்றுவிட்டார்.

அதன் பின்னர் மாலை 4.30 மணியளவில் எனது சகோதரன் விபத்தொன்றில் இறந்து விட்டார் என்று அயலவர்கள் மூலம் அறிந்து கொண்டேன். நான் மருத்துவமனை சென்று பார்த்தபோதுதான் எனது சகோதரன் மார்பில் குண்டு பட்டு இறந்ததை அறிந்து கொண்டேன் - என்றார்.

விசாரணைகளையடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

சம்பவ தினமன்று ஹன்ரர் வாகனத்தில் பயணம் செய்த ஏனைய நால்வரின் விவரங்களையும் நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். வழக்கை முன்னிட்டு நீதிமன்றில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ற-10,23,109)

# பயணிகளுடன் பேருந்து தொடருந்துடன் விபத்து

### சாரதி உட்பட 7 பேர் படுகாயம் வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஓக.5

வவுனியா, செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் நேற்று மாலை பயணிகள் பேருந்து தொடருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பேருந்தின் சாரதி உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து மாலை 4 மணியளவில் நடந்துள்ளது.

வவுனியாவிலிருந்து பயணிகளுடன் மனிக்பாமுக்குப் பயணித்த அரச பேருந்து ஒன்று தொடருந்துக் கடவையைக் கடக்க முயன்றது. மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த தொடருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் பேருந்தின் சாரதி உட்பட 7பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையிலேயே விபத்து நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)



# பாதுகாப்பற்ற கடவையில் காரைப் பந்தாடியது ரயில்



யாழ்ப்பாணம், ஓக.5

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்புறமாகவுள்ள தொடருந்துக் கடவையில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் காரொன்று கடும் சேதங்களுக்குள்ளானது. எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

கடவையின் குறுக்காக நின்ற காரை காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியது. அதனால் கார் தூக்கி வீசப்பட்டுச் சேதமடைந்தது. மருத்துவர் ஒருவரின் காரே சேதமடைந்தது.

தொடருந்துச் கடவையின் எதிர் எதிர் திசையில் காரும், முச்சக்கர வண்டி ஒன்றும் வந்துள்ளன. காரை ஓட்டி வந்தவர் கடவையைக் கடந்துள்ளார்.

அந்த நேரத்தில் தொடருந்து வருவதற்கான சமிக்ஞை ஒலி கேட்டுள்ளது. தொடருந்துக் கடவைப் பாதுகாப்பு ஊழியர் இருவரின் வாகனங்களையும் அப்புறப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். எனினும் காரை நகர்த்த முடியவில்லை. வேகமாகச் செயற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தொடருந்தை நிறுத்துவதற்கான சமிக்ஞையைக் காட்டியுள்ளார். தொடருந்தின் வேகத்தைக் குறைத்தபோதும் நிறுத்த முடியவில்லை. அது காரை மோதித் தள்ளியது. கார் சிறிதுதூரம் தூக்கி வீசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தொடருந்து கடவை சமிக்ஞைகள்தொழில்நுட்பக் கோளாறால் நீண்டகாலமாக இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-8,101,37)

## வீட்டிலிருந்தோர் விழித்ததால் திருடர்கள் ஓட்டம்

சாவகச்சேரி, ஓக.5

வீட்டில் திருட முயன்ற வேளையில் வீட்டிலிருந்தவர் விழித்துக் கொண்டதால் திருடர்கள் தமது திட்டத்தைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை சாலையில் இடம்பெற்றது.

நாய் தொடர்ச்சியாகக் குரைத்ததால் வீட்டுக்காரர் விழித்து வெளியே உள்ள மின்விளக்குகளை இயக்கினார். திருடர்கள் மதில் பாய்ந்து தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது..

இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் திருடர்களைப் பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற-10,9)

## பொலிஸ் பரிசோதகர் இடமாற்றம்

ஹற்றன், ஓக. 5
ஹற்றன் தலைமையக பொலிஸ் பரிசோதகர் டி.பி. கே.எம். ஹெட்டியாராச்சி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அக்கரைப்பற்றுப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் புதிய பொலிஸ்தலைமைபரிசோதகராக பொறுப்பேற்க உள்ளதாகவும் பொலிஸ் திணைக்களஉயர்அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.
எட்டு மாதத்துக்கு முன்னர் பதவியிலிருந்த பொலிஸ் பரிசோதகர் திகாவத்துர, ஹற்றன் சிகை அலங்கரிப்பாளர் ஒருவரைத் தாக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் போராட்டம் நடத்தினர் அதையடுத்து முன்னாள் தலைமையக பொலிஸ் பரிசோதகர் மாற்றப்பட்டு, பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி டி.பி.கே.எம். ஹெட்டியாரச்சி நியமிக்கப்பட்டிருந்தார். (ற-10,43)



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சமிக்ஞைப் பெயர்ப் பலகை வீதியின் குறுக்கே வீழ்ந்தது. இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றது. அதனால் பேலியகொடைப் பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 5
அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு நேற்று முதல் இரண்டாம் தவணைக்கான பாடசாலைவிடுமுறைவழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் தவணைக்கான பாடசாலை கற்றல்நடவடிக்கைகள்எதிர்வரும்செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
அதேவேளை ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 8ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முடிவடையும். ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில்பரீட்சைஎதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ற-10)

# சிறுநீரக நோய் அச்சுறுத்தலில் கிளி., முல்லை.

### வடக்குசுகாதார அமைச்சர்தெரிவிப்பு

வவுனியா, ஓக. 5
இலங்கையில் சிறுநீரக பிரச்சினையுள்ள 8மாவட்டங்களில்அதிக பிரச்சினையுள்ள மாவட்டங்களாக கிளிநொச்சியும் முல்லைத்தீவும் இனங்காணப்பட்டுள்ளன.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலத்துக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரம், மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன். வவுனியாவில் உள்ள கிணறுகளில் கனியுப்புகள் அதிகம். வயல்களில் பெரும்பாலானோர் கிருமிநாசினி, களைகொல்லிமருந்துகளைபயன்படுத்துகின்றனர். அதன் தாக்கம் குடி தண்ணீரிலும்ஏற்படுகிறது. கிணற்றுநீருக்கும்நஞ்சு செல்கிறது. இவற்றால் சிறுநீரக பிரச்சினனைகள் உருவாகின்றன.
வவுனியாவில்புதுக்குளம்சாஸ்திரிகூளாங்குளப்பகுதியிலும் அதிகமாக சிறுநீரகப் பிரச்சினையுள்ளவர்கள்இனங்காணப்பட்டுள்ளனர். இதற்குப் பிரதான காரணமாக இருப்பது எம்மில் பலர் தண்ணீர் குடிப்பது குறைவு. எங்களிடமிருந்து வெளியேறும் வியர்வைக்கு ஏற்ப நாங்கள் தண்ணீர் குடிப்பதில்லை. அதனாலும்சிறுநீரகநோய் ஏற்படுகிறது. உயர்குருதிஅழுக்கம், சலரோகம் போன்ற நோய்கள் நாள் கடந்து செல்லும்போதும் சிறுநீரக நோய் ஏற்படும்.
சிறுநீரக நோயின் ஆரம்பக்கட்டத்தை இனம் காண்பதற்கு செட்டிக்குளத்திலும், மாமடுவிலும்அதற்குரியசிறப்புஇயந்திரம் மருத்துவமனையில்உள்ளது. முல்லைத்தீவில் மல்லாவியிலும் மணலாற்றிலும் உள்ளது. ஒரு இயந்திரத்தின் பெறுமதி இரண்டரை கோடியாகும்.
இன்று இளம் வயதில் பலர் சிறுநீரக நோயால்இறந்துபோகிறார்கள் அதனைத் தடுக்கவேண்டும். பலர் கடன்களைப் பெற்று தொலைக்காட்சி, அன்ரனா போன்றவற்றை வாங்குகின்றார்கள். அவற்றை வாங்குவதைவிட தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தைவாங்கி வீட்டில்நீரை சுத்திகரித்துபருகுவதன்மூலம்சிறுநீரகநோயை தடுக்க முடியும் என்றார். (ற-10,402)



## கட்டுப்பாட்டை இழந்தது டிப்பர்: ஒருவர் படுகாயம்

வவுனியா, ஓக. 5
வவுனியா, ஏ9வீதிபுளியங்குளத்தில்இடம்பெற்றவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.
டிப்பர் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் புளியங்குளம் இராமனூர் பகுதியில் நடந்துள்ளது.
டிப்பர் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம்பொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (ற)

## சைட்டம் எதிர்ப்பு ஊர்வலத்துக்கு தடையுத்தரவு

கொழும்பு, ஓக.5
சைட்டம்மருத்துவக்கல்லூரிக்கு எதிராகப்பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் ஊர்வலத்துக்குகொழும்புநீதிமன்றம் நேற்றுத் தடையுத்தரவு பிறப்பித்தது.
கண்டியில் இருந்து கடந்த திங்கட்கிழமைஆரம்பிக்கப்பட்டஎதிர்ப்புஊர்வலம்நேற்றுக்கடவத்தையில்நிறுத்தப்பட்டு, இன்று காலை மீண்டும் கொழும்புக் கோட்டையை நோக்கிப் புறப்பட்டது.
இந்த நிலையில் அரச அலுவலகங்களுக்குள் பிரவேசித்தல்மற்றும்போக்குவரத்துக்கு இடையூறுகளை விளைவித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. (ற)



## வவு. வர்த்தக நிலையங்களில் நேற்றுத் திடீர்ச் சோதனை

வவுனியா, ஓக.5
வவுனியாவில்உள்ளவர்த்தகநிலையங்களில்நேற்றுத் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
வவுனியா மாவட்ட அளவைகள், நிறுவைகள், நியமங்கள்அளவீட்டுத்திணைக்களத்தின்ஏற்பாட்டில், வவுனியா நகர்ப்பகுதியில் வியாபார நிலையங்களின் அளவு தராசுகள் சோதனை செய்யப்பட்டன.
பதிவு செய்யப்படாத அளவுக் கருவிகளின் பாவனை தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.
வவுனியா சந்தை, உள்வட்ட வீதி, கடை வீதி, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு போன்ற பல பகுதிகளில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ற)

## கல்வி அலுவலகத்துக்குள் புகுந்தது சொகுசு பஸ்!

### *சாரதி உட்பட 6 பேர் காயம்; மின்சாரசபைக்கு ரூ.30 இலட்சம் இழப்பு*



கிளிநொச்சி, ஓக. 5
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் சொகுசுப் பேருந்து கிளிநொச்சியில் விபத்துக்குள்ளானது. அதில் 6 பேர் காயமடைந்தனர்.
இந்தவிபத்துநேற்றுஅதிகாலை3.20 மணிக்கு நடந்துள்ளது. கட்டுப்பாட்டை இந்த பேருந்து மின்சார கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள், வர்த்தக நிலையப் பெயர்ப் பலகைகள் என்பவற்றை உடைத்துக்குக் கொண்டு கிளிநொச்சிவலயக்கல்விஅலுவலகத் திட்டமிடல்கட்டடத்துக்குள்புகுந்தது.
விபத்தில் சாரதி உட்பட ஆறு பேர் காயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்தில் மின்கம்பங்கள் சேதமடைந்ததால் மின்சாரம் அந்தப் பகுதியில் தடைப்பட்டது. இந்த விபத்தால் தமக்கு 30 லட்சம் ரூபா செலவினம் ஏற்பட்டுள்ளது என்று மின்சார சபை பொலிஸாருக்கு அறிக்கையிட்டுள்ளது. வலயக் கல்விக் திணைக்களத்தின் கட்டடத்துக்கான சேதம் 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா என்றும், கணனி உட்படப் பொருள்களுக்கான சேதம்1லட்சத்து40ஆயிரம்ரூபாஎன்றும் பொலிஸாருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. (ற-10, 35,101)

# 10 ஆண்டுகள் தடுப்பிலிருந்த அரசியல் கைதி குற்றமற்றவர் என விடுதலை

கொழும்பு, ஓக. 5

இராணுவ அதிகாரிகளைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல்கைதியை கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

2006ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான வாசு கோபால் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க மற்றும் மேஜர் மஜீத் ஆகியோரை 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெடிகுண்டு வைத்து கொலைசெய்யத் திட்டமிட்டார் உள்ளிட்ட 2 குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. அது தொடர்பான குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் 2009ஆம் ஆண்டு கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைகள் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க முன்னிலையில் இடம்பெற்றன. எதிரி தரப்பில் மூத்த சட்டத்தரணி கே.வி. தவராசா முன்னிலையானார்.

"அரச தரப்பு சாட்சியாங்களை குறுக்கு விசாரணை செய்கையில் பல முக்கியமான முரண்பாடுகள் இந்த மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்பு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதும், சாட்சியத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினால் ஏற்படும் சட்ட விளைவுகளை தான் விள ங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்திய ட்சகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மேலும், தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் எதிரி மிகக் கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால் ஏற்பட்ட பல காயங்கள் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கையிலும் சாட்சியத்திலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எதிரி இந்த நீதிமன்றில் சாட்சியம் வழங்கிய போது, பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தன்னை சித்திரவதைப்படுத்தி வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதுடன் தனது சொந்த விருப்பத்தில் தான் எந்த வாக்குமூலமும் வழங்கவில்லையென சாட்சியமளித்துள்ளார்.

மூத்த அரச சட்டத்தரணி எதிரியை நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்தபோதிலும் அவரின் சாட்சியத்தின் நிலைப்பாட்டில் எந்த முரண்பாட்டையும் அரச தரப்பால் முன்வைக்க முடியவில்லை. மேலும் வேறு சாட்சிகளையும் அரச தரப்பு முன்வைக்கவில்லை.

எனவே எதிரியை சகல குற்றச் சாட்டுக்களிலிருந்தும் இந்த மன்று விடுவிக்கவேண்டும்" என்று மூத்த சட்டத்தரணி கே.வி. தவராசா மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் சமர்ப்பணங்களையடுத்து கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, எதிரியை 2 குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் மூத்த அரச சட்டத்தரணி வசந்த பெரேராவும் எதிரியின் சார்பில் சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, அனோமா பிரியதர்சினி ஆகியோரின் அனுசரணையில் மூத்த சட்டத்தரணி கே.வி. தவராசா முன்னிலையானார். (வ-5)

# கிளிநொச்சியில் குருதிக் கொடை

கிளிநொச்சி, ஓக. 5

கிளிநொச்சியில் நேற்றுக் குருதிக் கொடை வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கமக்கார அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குருதிக்கொடை நிகழ்வில் மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன், கமநல சேவை நிலையங்க ளின் பெரும்பாக உத்தியோகத்தர்கள் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (ற-10,35,6)

# ஆஸியில் இருந்து நாடு கடத்தப்பட்ட 13 பேர் கொழும்பில்

கொழும்பு, ஓக. 5

ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கையர்கள் 13 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான சிறப்பு வானூர்தி மூலம் இவர்கள் நேற்றுக் காலை பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு நுழைந்திருந்த சந்தர்ப்பத்தில் அந்த நாட்டு பாதுகாப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்களாவர். அவர்கள் அங்குள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்கள் வானூர்தி நிலைய குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-10)

# தீயது செய்வோரை அறிவுரைகளால் திருத்த முயலுங்கள்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

தீய செயல்கள், போதைப்பொருள் பாவனை, களவுகள் என்பவற்றில் ஈடுபடக்கூடிய மிகக் குறுகிய தொகுதியினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு அறிவுரை கூறி திருத்த முயலுங்கள். அதுமுடியாவிட்டால் சட்டரீதியாகவாவது அவர்களைத் திருத்தி அவர்களையும் இந்தச் சமுதாய நீரோட்டத்தில் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

காக்கைதீவு பொதுச்சந்தைக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினரா கக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த இலத்திரனியல் யுகத்தில் மாற்றங்கள் என்பது தவிர்க்க முடியாதவை. அவற்றுக்கு ஏற்ப நாமும் எமது விற்பனை நடவடிக்கைகளில் முன்னேற்றகரமான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் இந்தப் பகுதியில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் தமக்கிடையே கருத்து மோதல்கள், வீண் வாக்கு வாதங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டமையும், பிரதேச சபையின் அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்படாது தமது எழுந்தமானப்போக்கில் விற்பனை நடவடிக்கைகளைத் தீர்மானிக்க முயன்றதும் பொருத்தமற்ற செயல்கள்.

இந்த நவீன சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கு மானிப்பாய் பிரதேச சபை ஒருதொகை பணத்தை மூலதனச் செலவினமாக செலவு செய்துள்ளது. இந்தக் கட்டடத் தொகுதியை பராமரிப்பதற்கு தேவையான நீர் வசதிகளை ஒழுங்கு செய்து தருவதற்கும், கழிவுப் பொருள்களை முறையான கழிவகற்றல் முறை மூலம் கழிவகற்றுவதற்கும் பிரதேச சபை முன்வந்துள்ளது.

இந்தச் சேவைகளைச் செய்வதற்கான செலவினத்தில் ஒரு பகுதியாவது இந்த சந்தைத் தொகுதியில் இருந்து அவர்களுக்கு மீளக் கிடைக்க வேண்டும். சுயநல வர்த்தகத்தின் அடிப்படையில் உங்களுக்கே ஏகபோக உரிமை என்ற நிலையில் சந்தைக் குத்தகையை குழப்புவதோ அல்லது வேண்டுமென்றே ஒன்று சேர்ந்து குத்தகையைக் கோராது விடுவதோ சிக்கல்களை மேலும் சிக்கலாக்கும் செயலாக அமையுமே அன்றி தீர்வுக்கு வழிவகுக்காது.

இவையெல்லாம் நாங்கள் பிரதேசசபைகளையும், மாநகர சபைகளையும் எதிரிகளாகக் கணிப்பதால் வந்த விளைவு. பிரதேச சபைகளை, மாநகரசபைகளை நீங்கள் தான் நடத்துகின்றீர்கள். உங்களின் பிரதிநிதிகளே அவற்றை நடத்துகின்றார்கள். வெளி மாகாணங்களில் இருந்து நாம் அவர்களைக் கொண்டுவரவில்லை. சபைகளின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு நாங்கள் துணை போகக் கூடாது. என்றார். (ற-10)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திட்டவட்டம்

முல்லைத்தீவு, ஓக. 5

எங்கள் உறவுகள் தொடர்பாக அரச தலைவர் தீர்க்கமான பதிலை வழங்க வேண்டும். அதுவரை எங்கள் போராட்டத்தை ஒருபோதும் கைவிடப் போவதில்லை.

இவ்வாறு முல்லைத்தீவில் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீர்மானமாகத் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களை நடத்துகின்றனர். வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

போராட்டங்கள் ஆரம்பித்துப் பல மாதங்கள் ஆகின்ற போதும் அரசு இவர்களின் கோரிக்கை தொடர்பில் எந்தப் பதிலையும் வழங்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 150ஆவது நாளை எட்டியது. தங்கள் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று அறியாது தாம் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர். (ற)

# சமுர்த்திப் பயனாளிகள் அம்பகமுவவில் ஊர்வலம்

கொழும்பு, ஓக. 5

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு முன்பாக சமுர்த்தி உதவு தொகை பெறும் சுமார் 700க்கும் மேற்பட்டோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பகமுவ பிரதேச செயலகத்துக் குட்பட்ட பகுதிகளில் அரசால் வழங்கப்படும் சமுர்த்தி உதவு தொகைகள் சமுர்த்திப் பயனாளிகளுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. உதவு தொகைகள் நிறுத்தப்பட் டுள்ளன என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பகமுவ முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எலப்பிரிய நந்தராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அம்பகமுவ பிரதேச செயலகத்திலிருந்து ஊர்வலமாக கினிகத்தேனை நகரம் வரை சென்று மீண்டும் அம்பகமுவ பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தால் சில மணிநேரம் போக்குவரத்தும் பாதிப்படைந்திருந்தது.



சமுர்த்தி உதவுதொகையாக கினிகத்தேனை பகுதி பிரதேசவாசிகளுக்கு அரசால் 2 ஆயிரம் ரூபா தொடக்கம் 3 ஆயிரத்து 500 ரூபா வரை உதவு தொகைபணம் கூப்பனாக வழங்கப்பட்டுகின்றது. இந்த உதவு தொகையில் சமுர்த்திப்பயனாளிகளுக்கான நலன்புரி சேவைகளுக்காக ஒரு தொகை பணம் வெட்டப்பட்டு மிகுதிப் பணத்தை பயனாளிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது சமுர்த்தி உதவு தொகை பெறும் சில பயனாளிகளுக்கு இந்த உதவு தொகையை உரிய வேளையில் வழங்காமலும், நிறுத்தப்பட்டுள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-10, 43)

# மாகாணமட்ட புதிர்ப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஓக.5
இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் 20ஆவது ஆண்டுநிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையேநடத்தப்பட்டபுதிர்ப்போட்டிகளின் மாகாண மட்டத்துக்கான போட்டிகள் இன்று சனிக்கிழமை இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழுவின்யாழ்ப்பாணஅலுவலகத்தில்நடைபெறும். என அறிவிக்கப்பட்டது.

மனிதஉரிமைகள்தொடர்பானஅறிவை விருத்திசெய்வதற்கும், உணர்வைஏற்படுத்துவதற்கும் மற்றும் மாணவர்களிடையே மனித உரிமைகள் கலாசாரத்தைமேம்படுத்தும்நோக்கிலும்கடந்த ஜுலை மாதம் 12, 13, 14, 17, 19 ஆகிய தினங்களில் இந்தப்போட்டிகள்நடத்தப்பட்டன. இதில் வலய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டப் போட்டிக்காக யாழ்ப்பாண வலயத்தில் முத்துத்தம்பி மகா வித்தியாலயமும், வடமராட்சி வலயத்தில், வல்வைசிவகுருவித்தியாலயமும், வலிகாமம் வலயத்தில், மகாஜனக் கல்லூரியும், தென்மராட்சி வலயத்தில், சாவகச்சேரி மகளிர் கல்லூரியும், தீவக வலயத்தில், சென். அன்ரனிஸ் கல்லூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டன.

இந்தப் பாடசாலை அணிகளிலிருந்து 2 அணிகளை மாகாண மட்டப் புதிர்ப்போட்டிக்குதெரிவுசெய்வதற்கான போட்டிகளே இன்றையதினம் இடம்பெறவுள்ளன. என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப்பிராந்தியஇணைப்பாளர்தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து உருத்திரபுரம் மகா வித்தியாலயம் மற்றும் கனகபுரம் மகா வித்தியாலயம் என்பன மாகாண மட்டப் போட்டிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. என்றும் அவர் தெரிவித்தார். (21)

# நடுவர் சபை இடமாற்றம்

யாழ்ப்பாணம், வைத்தீஸ்வராக்கல்லூரியில்நடைபெற்றுவந்த யாழ்ப்பாணம் நடுவர்சபைநாளைஞாயிற்றுக்கிழமை முதல் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன்கத்தோலிக்கவித்தியாலயத்தில் நடைபெறும் என அதன் தவிசாளர் அறிவித்தார். ஒவ்வொருஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் 1 மணி வரை யாழ்ப்பாணம், வைத்தீஸ்வராக்கல்லூரியில்நடுவர்சபைநடைபெற்றுவந்தது. எனினும்வைத்தீஸ்வராக்கல்லூரியில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறுவதால் தற்காலிகமாக யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடுவர் சபை அமர்வுகள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (21)

## சிறுப்பிட்டிச் சுடலை விவகாரம்:

# பிணையில் வெளியே வந்து அடாவடியில் ஈடுபட்டவரை மறியலில் வைத்தது நீதிமன்று

மல்லாகம், ஓக. 5
புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப்பிட்டி சுடலையின் சுற்று மதிலை இடித்தனர் என்ற குற்றச்சாட்டில்நீதிமன்றில்சரணடைந்தவர்களில் 12 பேருக்கு கடந்த தவணையின் போது பிணை வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் தொடர்ந்தும்அடாவடியில்ஈடுபட்டதால் அவரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

அத்துடன், இந்த வழக்கில் மேலும் 33 பேரின் விளக்கமறியலும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி சுடலை அமைவிடம் தொடர்பில் சிலர் எதிர்ப்புத்தெரிவித்தனர். மற்றொரு தரப்பு அந்தச் சுடலை தொடர்ந்தும் அதில் இருக்க வேண்டும் என்றும் தமது பாவனைக்கு விடப்பட வேண்டும் என்றும் கோருகின்றனர். அது தொடர்பான முரண்பாடுகளின்போது, நீதிமன்றஅனுமதியுடன் அந்த மயானத்துக்கு அமைக்கப்பட்ட மதிலின் ஒருபகுதி உடைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

மயானத்தின் மதில் உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 45 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அச்சுவேலிப் பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் சமர்ப்பித்தனர். அந்த 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அவர்களில் அரசியல் கட்சி ஒன்றின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 6 பேர் முதலில் நீதிமன்றில் சரணடைந்தனர். அவர்கள் 6 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மேலும் 39 பேர் மல்லாகம் நீதிவான் மன்றில் கடந்த மாதம் சரணடைந்தனர். அவர்களில் 12 பேருக்கு மட்டும்பிணைவழங்கப்பட்டது. ஏனையோர் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டசந்தேகநபர்அடாவடியில் ஈடுபடுவதாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதனால் அவரை விளக்கமறியலில்வைக்குமாறுமல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜுட்சன் உத்தரவிட்டார். அத்துடன், இந்த வழக்கில் மேலும் 33 பேரின்விளக்கமறியல்எதிர்வரும் 18ஆம் திகதிவரை நீதிமன்றால் நீடிக்கப்பட்டது.

இதேவேளை, கிந்துப்பிட்டிச் சுடலைக்கு சுற்று மதில் மீள அமைக்கப்பட்டும்அங்குமிருகக்கழிவுகள் மற்றும் மனித மலம் என்பன சிலரால்கொட்டப்படுவதாகநீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. அதனை விசாரணைசெய்யுமாறுநீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (வ-37)

# சின்மயா மிஷனின் ஆன்மிக நிகழ்வுகள் நல்லைக் கந்தனில்

யாழ்ப்பாணம், ஓக.5
யாழ்ப்பாணம்நல்லூர்க்கந்தசுவாமிஉற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயாமிஷன்பல்வேறுஆன்மிகநிகழ்வுகளை நடாத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படிஆன்மிகஅருளுரைநாளைநாயிற்றுக்கிழமை தொடக்கம் 21ஆம் திகதி திங்கட்கிழமைவரைசின்மயாமிஷன்மண்டபத்தில் பல்வேறு தலைப்புக்களின் கீழ் மாலை 7.15 முதல் 8 மணிவரை நடைபெறவுள்ளது. அத்துடன் "எனது மனம் எனது பலம்" என்னும் கருப்பொருளிலானகண்காட்சியும், சின்மயா மிஷனில்மாலை 4 மணிமுதல் 9 மணிவரை இடம்பெறும். என அறிவிக்கப்பட்டது.

ஆலயஉற்சவகாலத்தில்காலையில்உள்வீதி உலாவின் போது காலை 10.45 முதல் 11.45 வரையிலும், மாலை வெளி வீதி உலாவின் போது மாலை 6 மணி முதல் 7 மணிவரை பஜனைகளும் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (21,ரி)

# திருப்பலி ஆராதனை

சாவகச்சேரி ஓக.5
சாவகச்சேரி கச்சாய் சாலை புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழாவின் திருநற்கருணை ஆராதனையும்திருப்பலிபூசையும் இன்று சனிக்கிழமை இடம்பெற்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருநாட்பாடற்பலிபூசையும்திருச்சொருபபவனியும்இடம்பெறுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. ஆலயபங்குத்தந்தை தலைமையில் திருவிழா வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (21,9)

# 25 ஆண்டுகளின் பின் யாழ். பல்கலை மாணவர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் 1990 - 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில்கற்றகலைவர்த்தக, முகாமைத்துவ பீட மாணவர்கள் இன்று சனிக்கிழமை ஒன்றாகச் சந்திக்கவுள்ளனர்.

உலகின்பல்வேறுபகுதிகளிலும் உள்ள இவர்கள் 25 வருடங்களின் பின்னர் இன்று ஒன்றாகச் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் ரில்ஹோ விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் முழுமையாகி உள்ளதாகவும் 1989 ஆண்டு ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரம் கற்றுத்தேறி 1990, 1991 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில்கல்விகற்றுத்தேறியமாணவர்கள் அனைவரையும் இதில் தவறாதுகலந்துசிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21,50)

# சைவ இளைஞர் மாநாட்டுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று

## நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், ஓக.05
சைவஇளைஞர்மாநாட்டுக்கான முன்னாயத்த ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சாலையிலுள்ள நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில்நடைபெறவுள்ளது.

சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞரின் பங்கும் பணியும் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் சைவ இளைஞர் மாநாடு யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்தமாநாடுதொடர்பானஇறுதித் தீர்மானங்களை எடுப்பதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டமாகவே இது இடம்பெறும்.

கூட்டம்நல்லைதிருஞானசம்பந்தர்ஆதீனமுதல்வர்சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள், தென்கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மாவட்டங்களிலும்இருந்துமாநாட்டுக்கான மாவட்ட இணைப்பாளர்களும்கலந்துகொள்ளவுள்ளனர். எனவே, இளைஞர்அமைப்புகளைச்சேர்ந்தவர்கள், சைவத்தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு மாநாட்டு ஏற்பாட்டாளர்களான அகில இலங்கை சைவமகாசபையினர்அறிவித்துள்ளனர். (21)

# திண்மக்கழிவுகளை அகற்றவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக.5
வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்டபகுதிகளில்உள்ள வீடுகளில் சேகரித்து வைக்கப்படும் திண்மக்கழிவுகள் குறிப்பிட்ட தினங்களில் பிரதேசசபையால் அகற்றப்படாமையால் பாதிக்கப்பட்டுள்ள நாம் வாரத்தில் 5 தினங்கள் வாகனத்தின் வரவைஎதிர்பார்த்துகாத்திருக்க வேண்டியநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம்எனவிசனம் தெரிவித்துள்ளமக்கள், குறிப்பிட்டதினங்களில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபைச் செயலாளரைக்கோரியுள்ளனர்.

வலி. தென்மேற்குபிரதேசசபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்எனநான்கு உபஅலுவலகங்கள் இயங்குகின்றன. இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களின்நலன்கருதிவீடுகளில் சேகரிக்கப்படும்திண்மக் கழிவுகளை வாகனங்களில்கொடுப்பதற்கு வசதியாகப் பிரதேசசபையால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களும் குறிப்பிட்ட தினங்களில் காத்திருந்து வாகனங்களில் திண்மக் கழிவுகளைக் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் சில இடங்களில் சாரதிகள் தங்கள் வசதிக் கேற்றவாறு குறிப்பிடப்படாத தினங்களில் சாலையால் செல்வதால் திண்மக்கழிவுகளைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. (21,115)

# வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை

வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்ப நிகழ்வு நாளைஞாயிற்றுக்கிழமைபொன்னாலையில் இடம்பெறவுள்ளது.

வெண்கரம் நிறுவனத்தின் செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகடென்மார்க்நாடாளுமன்ற உறுப்பினர் ரோல்ஸ்நாவன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்றஉறுப்பினர்ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க்உயர்நீதிமன்றசட்ட ஆலோசகர் தர்மகுலசிங்கம் தருமன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிகசெயலர்திருமதிசுகுணரதி தெய்வேந்திரம், வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரமௌலி ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் க.வேலாயுதம், உலக சைவதிருச்சபைத் தலைவர் கலாநிதி அ.விவேகானந்தா, வேள்ட்விசன்முகாமையாளர்வி.அனுராஜ், ஓய்வுபெற்றகல்விப்பணிப்பாளர் கா சந்திரபாலன் உட்பட பலர் கலந்துகொள்வர். (21,50)

# டெங்கு நோய்த் தொற்று யாழ். மாநகரில் தீவிரம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது. கடந்த ஜுலை மாதத்தில் மட்டும் 55 பேர்டெங்கால்பாதிக்கப்பட்டுள்ளனர். என்று மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. ஜுன்மாதத்தில்டெங்கினால் 39 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். கடந்தஜுலை மாதம் இது அதிகரித்துள்ளது. வண்ணார்பண்ணையில் 18 பேரும், நாவாந்துறையில் 12 பேரும், டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர். கொழும்பு சென்று வருவோரே இவ்வாறு டெங்குத் தொற்றுக்குக் கூடுதலாக இலக்காகி வருகின்றனர் என மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. பிரதேசத்தில் டெங்கு நுளம்பின் தாக்கம் மிக மிகக் குறைந்திருந்தது. எனினும் தற்போதுகொழும்பில்இருந்துகாய்ச்சலால்பீடிக்கப்பட்டுவருவோரினால் இதன் தாக்கம் கடந்த மாதத்திலிருந்து அதிகரித்துள்ளது. டெங்கு நோய் இனங்காணப் பட்ட பகுதிகளில்விழிப்புணர்வுநடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும்மாநகரசுகாதாரமருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. (21,17)

# கிளிநொச்சி மாணவர்களுக்கு வந்த சீருடைத் துணிகளால் கல்வி அதிகாரிகள் அதிர்ச்சி

கிளிநொச்சி, ஓக. 5
கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்குவதற்கென கல்வி அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்ட சீருடைத் துணிகள் உரப்பையில் பொதி செய்யப்பட்டு வந்துள்ளன. அவை துண்டு துண்டுகளாகக் காணப்படுவதுடன், அழுக்காவும் உள்ளன என்று கல்வி அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சால் கண்டிக்கு அனுப்பப்பட்டு அங்கு இருந்துதான் அந்தச் சீருடைத் துணிகள் கிளிநொச்சிக்கு வந்தன என்றும் கூறப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளுக்குப் பதிலாகத் தற்போது வவுச்சர்கள் மூலம் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அந்த வவுச்சரைப் பயன்படுத்தி மாணவர்கள், தனியார் வர்த்தக நிலையங்களில் சீருடைத் துணியைக் கொள்வனவு செய்ய முடியும். இந்த நடைமுறைக்கு மேலதிகமாக பின்தங்கிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளுக்கு மட்டுமே கல்வி அமைச்சால் சீருடைத் துணிகள் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு விநியோகிக்கப்படும் துணிகள் இதுவரை காலமும் தனித்தனியே பொதி செய்யப்பட்டு அதன் அளவுகள் குறிக்கப்பட்டே அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் துணிகளின் அளவுகளுக்கு ஏற்ப மாணவர்களுக்கு அவை வழங்கப்படும்.

'கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட துணிகள் அனைத்தும் துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளன. அவை பொதி செய்யப்படாது உரப்பைகளில் கட்டப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையால், அவற்றின் அளவுகள் கண்டுபிடிக்க முடியவில்லை. அதிக துணிகள் அழுக்கடைந்து பார்வைக்கு பழைய துணிகளாகக் காணப்படுகின்றன. மாணவர்களுக்கு விநியோகம் செய்ய முடியாத ளவுக்கே அவை உள்ளன' என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

"இதுவரையான காலமும் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெறவில்லை. இருப்பினும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள 21 ஆயிரத்து 140 துணிகளும் இவ்வாறே காணப்படுகின்றன. பொலித்தீன் பாவனையின் தடை காரணமாக இவ்வாறு நிகழ்ந்துள்ளதோ? என்ற கருத்தும் உள்ளது. இருப்பினும் அவற்றை மாணவர்களுக்கு விநியோகம் செய்ய முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாக உடனடியாக கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம்" என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார். (வ-101)

## நவாலி ஆரியம்பிட்டி சுடலைக்கு மின் விளக்கு பொருத்த நடவடிக்கை

நவாலியிலுள்ள ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு மின் விளக்கு பொருத்த வலி. தென்மேற்கு பிரதேச சபை முன்வந்துள்ளது. மயானம் வரை மின்னிணைப்பை விரிவுபடுத்துமாறு மின்சார சபைப் பொறியியலாளரிடம் அது கோரப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் நவாலியில் சங்கரத்தை. வட்டுக்கோட்டை வீதியில் அமைந்துள்ள ஆரியம்பிட்டி மயானம் ஆரம்ப காலத்திலிருந்து மின்சார வெளிச்சம் இன்றி இருளில் மூழ்கியிருக்கின்றது. இதனால் மாலை நேரத்தில் சடலத்தை எரியூட்டச் செல்பவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள். நவாலி வடக்கு, நவாலி தெற்கு மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் மேற்படி மயானத்தின் நிலைகுறித்துச் சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ள பொது அமைப்புக்கள், மக்களின் நலன் கருதி மயானத்துக்கு மின்விளக்குகள் பொருத்துமாறு இணைத்தலைவரைக் கோரியிருந்தனர். மக்களின் கோரிக்கையையடுத்தே மயானத்துக்கான மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இந்த மின்விளக்குகளை மயானம் வரை விரிவுபடுத்துமாறு மின்சாரசபைப் பொறியியலாளருக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார். (21,115)

## பட்டமளிப்பு விழா

மீசாலை பாரதி தனியார் கல்வி நிலையத்தில் இயங்கும் தஞ்சாவூர் பல்கலைக்கழக ஐந்தாவது பட்டமளிப்பு விழா இன்று மு.ப. 9 மணிக்கு சாவகச்சேரி டச்சுச்சாலை ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் கு. கோபிகிருஷ்ணா, மீசாலை பாரதி தனியார் கல்வி நிலைய இயக்குநர் க. ரஜனிகாந்தன் ஆகியோரின் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு தலைமை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துறைசார் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் திருமதி பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொள்வார். எனவும் அறிவிக்கப்பட்டது. (9)

## உரிமையை நிலைநாட்டவும்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப் பட்ட சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதால் ,அவற்றை உரிமை கோருபவர்கள் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிமையை நிலைநாட்டும்படி யாழ்ப்பாணம் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார். (21,ரி)

## கண்காட்சியும் சந்தையும்

யாழ்ப்பாணம், ஓக. 5
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் நடத்தப்படுகின்ற திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் சந்தையும் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திக்கம் மத்திய சனசமூக நிலைய உபதலைவர் க. சுதேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் சுரேஸ் சுதாஜினிதேவியும் கலந்துகொள்ளவுள்ளனர். (21)



*வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் சிறப்பான சேவைகளை வழங்கிய கூட்டுறவு அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெற்றது. கிட்டுப் பூங்காவில் நடைபெற்ற பனை அபிவிருத்திக் காட்சிப்படுத்தல் நிகழ்வின் போதே விருதுகள் வழங்கப்பட்டன. சங்கங்களால் நடத்தப்படும் கூட்டுறவு நகர் நிலையங்களில், தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கூட்டுறவு நகர் முதலிடத்தையும் சங்கத்தின் கிராமிய வங்கி மூன்றாமிடத்தையும் பெற்று விருதுகளைப் பெற்றுக் கொண்டன. இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர். (21,9)*

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 60 | 80 |
| கத்தரி | 80 | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 100 | 160 | 120 | 120 | 180 |
| பாகல் | 300 | 200 | 160 | 160 | 180 |
| க.கிழங்கு | 140 | 120 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 110 | 100 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 170 | 150 | 120 |
| பூசணி | 100 | 80 | 100 | 80 | 80 |
| தக்காளி | 150 | 140 | 160 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 10 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 300 | 200 | 400 | 360 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 150 | 140 | 100 |
| வெண்டி | 100 | 80 | 100 | 120 | 60 |
| போஞ்சி | 120 | 120 | 170 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 65 | 58 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 60 | 80 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 140 | 220 | 160 | 340 |
| கரட் | 180 | 200 | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 | 80 | 140 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | பருத்தித்துறை |
|---|---|---|
| இறால் | 700 | 1000 |
| நண்டு | 400 | 300 |
| கணவாய் | 600 | 1000 |
| பாரை | 600 | 700 |
| சுறா | 500 | 1000 |
| சீலா | 400 | 600 |
| விளை | 600 | 700 |
| முரல் | 400 | 400 |
| கும்பிளா | 300 | 400 |
| கிளாக்கன் | 800 | – |
| ஓரா | 350 | 400 |
| திரளி | 250 | 200 |
| நகரை | 250 | – |
| சூடை | 150 | 150 |
| ஒட்டி | 200 | 300 |
| திருக்கை | 300 | – |
| மதனம் | 200 | 500 |
| கொய் | 200 | 100 |
| பாலை | 250 | 400 |
| வாழை | 200 | 300 |



பெண்களுக்கான பஞ்சாபி வகைகள் சில தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 4ஆயிரத்து 900 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இறந்தார். வேறு இரு பொலிஸார் வாள் வெட்டில் காயமடைந்தனர்.

பொலிஸார் மீதான வாள்வெட்டைத் தொடர்ந்து நிலமையை அவதானிக்கப் பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணம் வந்தார். அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவித்தார். தேவைப்பட்டால் முப்படையினரின் உதவியையும் கேட்பார் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பல இடங்களிலும் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டை நடத்துகின்றனர். பலரை அவசர அவசரமாகக் கைது செய்கின்றனர். இப்படிக் கைது செய்யப்படுபவர்கள் ஏன், எதற்காகக் கைது செய்யப்படுகிறார்கள் என்கிற விவரங்கள் கூறப்படுவதில்லை என்றுகூறி அவர்களது தாய்மார், மனைவியர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். இது குடாநாட்டில் பதற்றத்தை அதிகரித்து வருகிறது.

இந்த நிலமைகள் தொடர்பில் அரச தலைவருடன் அவசரமாகப் பேச்சு நடத்த கூட்டமைப்பின் தலைமை முடிவு செய்துள்ளது. இதற்காக அரச தலைவரிடம் நேரம் கோரப்பட்டிருந்தது. அரச தலைவரின் இறுக்கமான நிகழ்ச்சி நிரலினால் சந்திப்புக்கான நேரம் இன்னமும் ஒதுக்கப்படவில்லை. எதிர்வரும் திங்கட் கிழமைக்குப் பின்னரான ஓரிரு நாள்களில் எப்படியும் நேரம் ஒதுக்கித் தருவதாக அரச தலைவரின் செயலகம் தெரியப்படுத்தியுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு நிலமையை விளக்குவார்கள் என்ற எதிர்பார்க்கப்படுகிறது. (உ,5,101)

## தாயைப் பார்க்க மறுத்ததால் நீதிமன்றுக்குச் சென்ற மகன்

தென்மராட்சி, ஓக. 5

பெற்ற தாயைப் பார்ப்பதற்குச் சகோதரியும்சகோதரியின்பிள்ளைகளும்அனுமதிக்காததால் நீதிமன்றின் உதவியை நாடினார் வெளிநாட்டிலிருந்து வந்த மகன்.

இந்தச்சம்பவம்சாவகச்சேரியில்அண்மையில் இடம்பெற்றது.

20வருடங்களின்பின்னர்வெளிநாட்டிலிருந்து வந்திருந்த மகன் நாவற்குளியில் உள்ளசகோதரியின்வீட்டில்தங்கியுள்ளதாயைப்பார்க்கச்சென்றுள்ளார். ஆனால் அவரது சகோதரியும் அவரது பிள்ளைகளும்தனதுவீட்டுவளவினுள் வரக்கூடாது எனத் தடுத்து தாயைப் பார்க்கஅனுமதிக்காமல்வெளியேதுரத்தியுள்ளனர்.

இதனால் கவலையடைந்த மகன் சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத்தில்முறையிட்டார். பொலிஸார் இந்த விடயம் தொடர்பாகச் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப்பார்வையிட்டநீதிவான் தாயை நீதிமன்றுக்கு அழைத்து வருமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

அன்று பொலிஸார் மகனையும் அழைத்துக்கொண்டுஅவரதுதாய்தங்கியுள்ள மகளின் வீட்டுக்கு மாலை 5 மணிக்குச்சென்றனர்.

பொலிஸார்தாய், சகோதரிமற்றும்சகோதரியின் கணவர் ஆகியோரை நீதிமன்றில் முற்படுத்தினர்.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த மகன் நீதிவான் முன்னிலையில் தாயாரைப் பார்த்துள்ளார். மறுநாள்லண்டனுக்குப் பயணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-9)

# இ.போ.ச வின் 24 பேருந்துகளுக்கு புதிதாக இயந்திரங்கள்

## வடபிராந்திய சாலைகளுக்குக் கிடைத்தன

யாழ்ப்பாணம், ஓக. 5.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின்வடபிராந்தியசாலைகளுக்குப் புதிதாக 24 இயந்திரத் தொகுதிகள்வழங்கப்பட்டுள்ளன. இயந்திரப் பழுது காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 53 பேருந்துகளைச்சீரமைக்குமாறு கோரப்பட்டபோதே இவைவழங்கப்பட்டுள்ளன.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் கேதீஸ் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின்சாலைகளில்தற்போது இயந்திரப் பழுது காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 53 பேருந்துகளைத் திருத்தித் தருமாறு கோரிக்கை விடப்பட்டது. வடக்கில்தற்போது 325பேருந்துகள்உள்ளபோதிலும்253பேருந்துகளே சேவையில் ஈடுபட்டுள்ளன. எஞ்சிய 72 பேருந்துகளில் தற்போது 53 பேருந்துகள் திருத்தம்காரணமாகநிறுத்திவைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 19 பேருந்துகள் ஆளணி இன்மைகாரணமாகநிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பழுதடைந்த பேருந்துகளின் இயந்திரங்கள் திருத்த முடியாதஅளவுபழுதடைந்தமை தொடர்பில் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அதனையடுத்து வடக்கு மாகாணத்தில் உள்ள சாலைகளுக்கு 24 புதிய இயந்திரத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இயந்திரத் தொகுதிகள் ஒவ்வொன்றும்சுமார்25லட்சம்ரூபா பெறுமதியுடையது. அதன் மூலமாகத் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள 53 பேருந்துகளில் 24 பேருந்துகளை இயக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (4.101)

# வீட்டுக்கு அனுப்பப்படவிருந்த அதிபருக்குமாற்றுப்பாடசாலை

## ஆளுநரின் செயற்பாட்டுக்கு சமூகநீதிக்கான அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 5

"வவுனியாமாவட்டத்தில்பலபாடசாலைகளில் ஊழல், அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர் கட்டாய ஓய்வூதியத்தில் அனுப்பப்படவிருந்தபோதும், அவரை வடக்கு மாகாண ஆளுநர்மீண்டும்பணியில்அமர்த்தியுள்ளார்.

இவ்வாறு வவுனியாமாவட்டசமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் செயலாளர் சு. டொன்பொஸ்கோ அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இன்றைய சூழலில் மாகாண சபையின் அதிகாரம் ஆளுநரிடமா? இருக்கின்றதுஎன்றகேள்விவடக்கு மாகாண மக்களிடம் எழுந்து நிற்கின்றது.

அது மட்டுமன்றி வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தால் உருவான மாகாண சபை அமைப்பானது கொழும்பு அரசின் அதிகாரிகளின் கெடுபிடி காரணமாக மக்களின் சாதாரண பிரச்சினைகளைக் கூடத்தீர்த்துவைக்கமுடியாதுஇருக்கின்றது. இந்த நிலைமை எந்தவகையிலும் நாட்டின் நல்லாட்சிக்கோ, நல்லிணக்கத்துக்கோ சார்பாக இருக்க முடியாது. மாகாண சபைக்குரியஅதிகாரங்களைப்பரவலாக்குவதன் மூலமே நல்லிணக்கம் சாத்தியமாகும்.

ஆளுநரின்ஆட்சிக்குஆலோசனை கூறவே மாகாண சபையின் முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் ஆளுநரால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களின்ஆலோசனையை ஏற்கவேண்டுமென்ற கட்டாயம்ஆளுநருக்குகிடையாது. ஆளுநரின் அதிகாரத்தை நிறைவேற்றவே ஒவ்வொரு துறைசார் செயலாளர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் அமைச்சர்களின் ஆலோ சனைப்படியல்ல ஆளுநரின் ஆணைப்படியே செயற்படுகிறார்கள்.

இந்த நிலைப்பாடானது மக்களின் ஆணைபெற்றமாகாணசபைஉறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சரின் கருத்துக்கு மாறான செயற்பாடுகள் நடைபெற இடமளிக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் மூலம் சொல்லப்படுகின்ற மக்களின் கருத்துக்கள், கோரிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாமல்உதாசீனம்செய்யப்பட்டு வருகின்றன.

இதன்காராணமாகஊழல், மோசடி, அதிகார முறைகேடுகளில் ஈடுபடும் அதிகாரிகள் மக்களின் ஆணைபெறாத தனிநபரான ஆளுநரின் ஆதரவு பெற்றால் பதவியைத் தொடர ஏதுவானநிலையும், மக்கள்கேள்வி எழுப்ப முடியாத நிலையும் காணப்படுகின்றது.

அண்மையில் வவுனியா தெற்கு வலயத்தைச்சேர்ந்தபலபாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய ஒருவர் மற்றும்கல்விவலயம்ஒன்றின்கல்விப்பணிப்பாளர்ஆகியோர் மீதான ஊழல் மோசடி மற்றும் அதிகாரமுறைகேட்டுக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன.

கல்விப்பணிப்பாளரிடம் சுமார் 3 லட்சத்து96ஆயிரம்ரூபாஅறவிடப்பட்டதுடன் அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதுமாத்திரமன்றி அதிபர்மீதான குற்றச்சாட்டுநிரூபிக்கப்பட்டது. அந்தக்குற்றங்களுக்காக அவருக்குஐம்பத்திஐந்துவயதுடன் கட்டாய ஓய்வு வழங்குவதாகக் கூறப்பட்டது. ஆனால் அவர் முறைகேடுசெய்தஅரசநிதிதிரும்பப்பெறப்படவில்லை. மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் அவர் பிரதி அதிபராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதுசட்ட விரோதமானது. அவருக்கு நியமனம் வழங்கப்படுவது முறைகேடானது என்று வடக்கு மாகாணக்கல்வி அமைச்சு வழங்கிய ஆலோசனையும்ஆளுநரால் புறக்க ணிக்கப்பட்டுள்ளது. மக்களால்தெரிவுசெய்யப்பட்டமாகாண சபைகளின் அதிகாரம்பரவலாக்கப்படவேண்டும்.

ஆளுநரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையோடு ஊழல் செயற்பாடுகளுக்கு எதிராக ஜனநாயக சக்திகளும், மக்களும், தொழிற்சங்கங்களும் அணிதிரள வேண்டும் - என்றுள்ளது. (4)



# 9ஆம் திருவிழா

## கோடிகரம் வேண்டும் வேலவா!

நல்லையில் வீற்றிருக்கும்
ஞானபண்டிதா!
உன் பாதம் வந்து பணிந்திட
நாம் செய்த புண்ணியம் என்னவோ!
தேவியின் செல்வப் புதல்வனே
எம் நெஞ்சினில் என்றும் நிலைத்தவனே!
கோடி மக்கள் வந்து உன்னைத் துதித்திட
ஓடிவிடும் எல்லா வினைகளும் முருகா!
கந்தவேலாயுதனே பரம்பொருளே!
என் மனமதில் குடிகொள்ளும்
குழந்தை வேலவனே! உனைத் தொழுதிட
கோடி கரங்கள் போதாதையா அப்பனே!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

## முத்தமிழில் முருகா நீ

முத்தமிழும் இனிக்குதையா
முருகா நின்
முத்தான முகம் கண்டு மொழி
பெருகுதையா
சொற்தமிழும் செந்தமிழ்
ஆகுதையா
இசையாய் நல்லைப்பதியிலே
பொழியுதையா
உள்ளமெல்லாம்
உறையுதையா முருகா
உன்னைக்கான மனம்
ஏங்குதையா வேலவனே
வள்ளி நாயகனே நின்
தரிசனம் தாருமையா

*அரியாலையூர்*
*செல்வி மிஷாந்தி செல்வராஜா*

## நமக்கு நிம்மதி நல்லூரே

"பட்டம் பதவி, பதக்கம் சங்கிலி
பாராட்டு நல்லூரில் ஆகாது
பாட்டு ஆட்டம் போட்டு சினிமாப்
பாடல்கள் நல்லூரில் ஆகாது
சட்டை பெனியன்
போர்வை போடும்
சண்டித்தனம்
நல்லூரில் ஆகாது
சஞ்சலம் வஞ்சகம் சூது வாது
சபலங்கள் நல்லூரில் ஆகாது
திட்டம் தீட்டும் சூழ்ச்சி களவு
தொந்தரவு நல்லூரில் ஆகாது
தோல்வி வெற்றி உயர்வு தாழ்வு
தோசங்கள் நல்லூரில் ஆகாது
நட்டம் இலாபம் நாட்டம்
நோட்டம்
நளினம் நல்லூரில் ஆகாது
நாடு வீடு நிம்மதி யாவும்
நமக்கு நல்லூரில் ஆகும்

*கே. எஸ். சிவஞானராஜா*



## சரியான ஊட்டச்சத்து ஆரோக்கியமான சமுதாயம்

★ஆரோக்கியமான உணவு ஆரோக்கியமான சமுதாயம் ஆறு வகையான உணவுக்கூறுகளும் கிடைக்கக் கூடியதாக ஒரு நாளுக்கான உணவைப் பதப்படுத்திய உணவுவகைகளைத் தவிர்த்தல் குறைதல்.

★அதிக சக்தி நிறைந்த உணவுகளைக் குறைத்தல் சீனி சேர்ந்த உணவுகள், கேக், பிஸ்கட்ஸ், மென்பானங்கள்,

வீட்டிலே தயாரித்த உணவுகளை உண்ணல். ★நாள்தோறும் 2.3 லீற்றர் தண்ணீர் அருந்துதல்.

★சமபல உணவுண்ணலை வழக்கப்படுத்திக் கொள்வோம்.

*தகவல்*

*சு.ம.அ.பணிமனை,*

*யாழ்.மாநகர சபை.*



## தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் தொடர்பில் திங்கட்கிழமை முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 5

வடக்கு மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் பற்றிய இறுதி முடிவு நாளை மறுதினம் திங்கட்கிழமை கிடைக்கப் பெறும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இது பற்றி சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது.

எமக்கான நிரந்தர நியமனத்தை கல்வி அமைச்சு இழுத்தடிப்பதாகத் தென்படுகிறது.

நேர்முகத் தேர்வு நிறைவடைந்து நீண்ட காலம் ஆகியும் இன்னமும் திட்டவட்டமான பதில் இல்லை. ஆகவே எமக்கான தீர்வைப் பெற்றுத் தரும்படி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சிலநாள்களுக்கு முன்னர் சந்தித்துக் கோரினோம்.

எமது கோரிக்கைகளைக் கேட்ட பின்னர் அரசின் தலைமை அமைச்சின் செயலாளருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு கதைத்தார்.

பின்னர் அது தொடர்பான இறுதி முடிவை எதிர்வரும் 7ஆம் திகதிக்குள் உங்களுக்கு வழங்குவேன் என்று உறுதியளித்துள்ளார் என்றனர். (4.ரி)

## வடக்கு சுகாதாரத் துறையின் கீழ்

# திறக்கப்படாத புதிய கட்டட விவரங்கள் தேடுகிறது அமைச்சு

யாழ்ப்பாணம், ஓக. 5

வடக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சு அமைத்த வைத்தியசாலைக் கட்டடங்கள் இதுவரையில் திறக்கப்படாமல் இருந்தால் அவை பற்றிய விவரங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகங்களுக்கு இவ்வாறு பணித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினரின் நிதிப் பங்களிப்புடனும் மற்றும் சிறப்பான செயற்றிட்டத்தின் மூலமாகவும் நோயாளர்களின் நன்மை கருதிஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது வைத்திய சாலையின் சேவையை அதிகரிப்பதற்காகப் புதிய கட்டடங்கள் பல நவீன மருத்துவ உபகரண வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பல்வேறு வகையான கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில கட்டடங்களின் வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அநேகமான கட்டடங்களின் வேலைகள் முடிக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டும் உள்ளன.

ஆனால் பல கட்டடங்கள் இன்னமும் திறந்து வைக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டு பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தேவைகருதி அமைத்துக்கொடுக்கப்பட்ட கட்டடங்கள் குறிப்பாக சவச்சாலை, சிறப்பு நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் விடுதிகள் போன்ற அனைத்துக் கட்டிடங்களும் அவற்றுக்குத் தேவையான உபகரணத் தொகுதிகளும் உள்ளடங்கலாக அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அந்தக் கட்டடங்களைத் திறந்து வைக்கவேண்டும்.

நடைமுறையைப் பாராமல் அதனைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும். என்று நாம் அனைத்து வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு வைத்தியசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்தால் கட்டடங்களின் எண்ணிக்கை, திறக்கப்படாமல் உள்ளமைக்கான காரணத்தைத் தெரியப்படுத்துமாறும் கோரியுள்ளோம்.

அதன்படி மன்னார் மாவட்டத்தில் 5 கட்டடங்கள் திறக்கப்படவில்லை என்று எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு கட்டடங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உள்ள வைத்திய சாலைகளில் இன்னமும் திறந்து வைக்கப்படாமல் உள்ள வைத்திய சாலைக்கட்டடங்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கை உடனே எடுக்கப்படும் - என்றார். (4.ரி)

## கந்தபுராண வாழ்வியல் 9ஆம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் 9ஆவது நாளாக இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

## பயணிகள் அதிகமான இடங்களில்

# குறியீட்டுப் பதாகைகளும் குடைகளும் அமைக்கலாம்

### மாகாண அமைச்சு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 5

பேருந்தில் பயணம் செய்யும் மக்கள் அதிகமாக ஏறி இறங்கும் இடங்களில் பேருந்தை நிறுத்துவதற்காக நிறுத்தல் குறியீட்டு பதாகைகள் அமைக்கப்படவுள்ளன.

முக்கியமான இடங்களில் பேருந்து நிழல் குடைகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பேருந்துகளின் நடத்துநர்கள் மற்றும் சாரதிகளின் கோரிக்கைக்கு அமைய இந்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களின் போக்குவரத்து மிக இலகுவானதாக அமைய வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் அதிகமாக ஏறும் மற்றும் இறங்கும் இடங்களில் தரிப்பிட வசதிகள் இல்லாமையால் பேருந்துச் சாரதிகளுக்கு எதிராக போக்குவரத்துப் பொலிஸாரால் வழக்குத் தொடரும் நிலை ஏற்படுகிறது.

ஆகவே இவ்வாறான இடங்களில் தரிப்பிடம் மற்றும் நிழல்குடை வசதிகள் இல்லாதுவிடின் அதுபற்றிய விவரங்களை அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

கோரிக்கை விடுக்கப்பட்டால் ஆராய்ந்து அவற்றை அமைத்துத் தர வழிவகைகள் செய்யப்படும்.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வைத்தியசாலைகள் உள்ளிட்ட மக்களின் தேவைகள் அதிகமாக உள்ள இடங்களில் இவ்வாறான பேருந்து தரிப்பிடங்கள் உடனடியாக அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4.ரி)

## ஆவுரஞ்சும் கல், கேணிகளை சீரமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 5

உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட சகல கேணிகளும், அதனுடன் இணைந்த ஆவுரஞ்சிக்கல், மடம் போன்ற விபரங்கள் திரட்டப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. மூதாதையர்களால் கட்டப்பட்ட கேணிகள், மடங்கள் பின்னர் கிராம சபை களால் பொறுப்பேற்கப்பட்டன. அவற்றில் 80 வீதமானவை சேதமுற்று அழிவடைந்துள்ளன.

வறட்சியான காலங்களில் கால்நடைகள் கேணிகளை பயன்படுத்த முடியாது தவிக்கின்றன.

இந்த நிலையில் அவற்றின் விவரங்களைப்பெற்று அவற்றைச் சீரமைக்க உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு பிராந்திய உள்ளூராட்சிஉதவிஆணையாளர் ஊடாகதகவல்களைத் திரட்டவுள்ளனர். (4,50)

## ‘ஆட்டிசம்’ பாதிப்பு உடையவர்களுக்கு சம வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்

### *மாகாண சுகாதார அமைச்சு வலியுறுத்துகிறது*

யாழ்ப்பாணம், ஓக. 3

ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் பொருத்தமான சேவைகளைப் பெறும் சமவாய்ப்புகளை வழங்கி, அவர்களின் உரிமையை நிலைநிறுத்தும் மாகாணமாக வடக்கு மாகாணம் இருக்கவேண்டும். அதற்கு கல்வி, சுகாதாரம், விளையாட்டு போன்ற பல்வேறு துறையினரும் ஒத்துழைக்கவேண்டும். அதற்கேற்ற அடிப்படையில் ஆட்டிசம் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆட்டிசத்தால் பாதிப்படைந்தவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கான சகல சிகிச்சைகளையும் வழங்கி அவர்களைச் சமூகத்தில் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த நோக்கில் 5 வருட செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆட்டிசம் தொடர்பான கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இவை மீண்டும் 2022 ஆம் ஆண்டு மீள் பரிசீலனை செய்யப்படும். அதில், சமூகத்தில் ஆட்டிசம் தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. இதனால் ஆட்டிசம் நோயாளர்கள் தவறாகப் பார்க்கப்படுவதுடன் அவர்கள் சமூகத்தில் தனித்துவிடப்படல், மற்றும் அவர்களை வித்தியாசமாகப் பார்த்தல் என்பன பின்விளைவை அதிகரிக்கச் செய்யலாம்.

சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் தொடர்பான சேவைகளைப் பெறுவதில் தடங்கல், சமூகத்தில் கௌரவத்துடன் வாழ்வதில் தடங்கல் உட்பட்ட பல பிரச்சினைகளை ஆட்டிச பாதிப்பு உள்ளவர்களுக்கு ஏற்படுத்தலாம்.

இந்த நிலமையில் இருந்து சமூகத்தை மாற்றி அமைத்து இவர்களுக்கான சுமுகமான வாழ்வை ஏற்படுத்த வேண்டும். ஆட்டிச நிலமைகளுள்ள ஒருவர் எந்தவொரு விருத்தி நிலையிலும் எல்லாவிதமான கல்வி மற்றும் கற்றல் அனுபவங்களில் உற்சாகத்துடன் பங்குபெறச் சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும்போது, பொருத்தமான நிபுணர்கள், கவனிப்பாளர்கள் மற்றும் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட வர்களைவேலைக்கமர்த்தும் பல்திறன் உள்ளீர்ப்பு முறை பயன்படுத்த வேண்டும்.

இலங்கையில் உள்ள நிபுணர்களுக்கும், பராமரிப்பாளர்களுக்கும், உதவி வழங்குபவர்களுக்கும் ஆட்டிசம் தொடர்பான பயிற்சி அவசியமாகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4.ரி)

# திருமண பந்தத்தில் கெஹலியவின் மகன்



கொழும்பு, ஒக 5
முன்னாள் அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல்லவின் புதல்வரான கிரிக்கெட் வீரர் ரமித் ரம்புக்வெல்ல திருமண பந்தத்தில் இணைந்துள்ளார்.

அமெரிக்காவில் வசித்து வரும் இலங்கைப் பெண்ணான நட்டாலி செனல் என்ற பெண்ணையே ரமித் திருமணம் செய்துகொண்டுள்ளார்.

மணமகளின் தாய் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் ராஜாங்க உதவிச் செயலாளராகப் பதவி வகித்து வருகிறார்.

கம்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள் குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறி வசித்து வருகின்றனர்.

கொழும்பு காலிமுகத் திடல் ஹோட்டலில் நடந்த திருமண நிகழ்வில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட அரசியல்வாதிகள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த)

## புத்தளம் முதல் கல்முனை வரை கடற் கொந்தளிப்பு

கொழும்பு, ஒக 5
புத்தளம் முதல் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக கல்முனை வரையான கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நேரங்களில் கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 கிலோ மீற்றராக இருக்கும். ஏனைய கடற்பிரதேசங்களும் சற்றுக் கொந்தளிப்பாக இருக்கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனக் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (த)

# பிரபலத்துக்காக செயற்படுகிறது மகிந்த தரப்பு

## சு.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 5
அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மகிந்த அணி தனது பிரபலத்துக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை எனச் சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டிய ஒன்று தான் என்றாலும் அதற்கான காலம் இன்னும் உள்ளது எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிணை முறி விவகாரம் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை முடிவடைந்த பின்னர், அதன் அறிக்கைக்கு அமைய நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம்.

யாழ்ப்பாண நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சிறிய தரப்பினரின் தேவைக்காக மீண்டும் நாட்டை இருள் சூழ்ந்த யுகத்துக்குக் கொண்டு செல்ல முயற்சித்து வருகின்றனர்- என்றார். (த)

## வடகொரியாவுக்குக் கண்டனம்;

# அயலுறவு அமைச்சின் அறிக்கையால் சர்ச்சை

## விசாரணைக்கு மைத்திரி பணிப்பு



கொழும்பு, ஒக 5
வடகொரியா நடத்திய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைக்குக் கண்டனம் தெரிவித்து, இலங்கை அயலுறவு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து விசாரணை நடத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்ததாவது:
இலங்கை அயலுறவு அமைச்சின் கண்டன அறிக்கை தொடர்பாக அரச தலைவருக்கோ தலைமை அமைச்சருக்கோ எதுவும் தெரியாது. அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க கூட இதனை அறிந்திருக்கவில்லை. இது குறித்து விசாரணை நடத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் உத்தரவிட்டுள்ளார்- என்றார்.

அனைத்துலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான வடகொரியாவின் ஆத்திரமூட்டும் செயற்பாட்டை இலங்கை கண்டிப்பதாக அயலுறவு அமைச்சு கடந்த ஜூலை 28ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# உயிரிழந்த மெய்க்காவலரின் மனைவி பொலிஸ் சேவையில்

கொழும்பு, ஒக 5
நீதிபதி இளஞ்செழியனின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலரின் மனைவியை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்குத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸ் அதிகாரியின் மனைவியான கெ.ஜீ.பி குமுதினி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தராவார். அவர் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் பொலிஸ் சேவையிலிருந்து விலகியிருந்தார்.

இந்த நிலையில் பொருளாதாரப் பிரச்சினை காரணமாகத்தன்னை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு அவர் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த பின் பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைப்படி பொலிஸ் ஆணைக்குழு இந்த அனுமதியை வழங்கியுள்ளது. (த)

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
01. மேசன் சம்பளம் ரூ.1500/=
02. உதவியாளர் ரூ.1200/=
தேவையேற்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்பு-076 310 1597

**வீடும் காணியும் விற்பனைக்கு**
மானிப்பாய் உடுவில் வீதியிலுள்ள நிலப்பரப்பு ஐந்தும் (05) குளி 15.5 உம் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவை இல்லை.
தொடர்பு-077 775 5175

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
01) Technical Officer (Experience with Preparing BOQ & Bills)
02) Technical Assitant (Minimum 1 Year Experience)
03) Accounts Assitant (Female)
Email : shaganaconstruction@hotmail.com
தொடர்பு - 076 310 1597



**ஸ்ரீ சம்மக்கா சாறக்கா ஜோதிடம்**
இந்தியாவின் பிரபல ஜோதிடர்
ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி
நேரம்:- காலை 8.00 தொடக்கம் மாலை 7.00 வரை
இல.276/1, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ:- 076 720 6899
எத்தனையோ ஆள்களிடம் ஜோதிடம் பார்த்திருப்பீர்கள். ஆனால் இவர்களிடம் பார்த்தல் நூற்றுக்கு நூறு வீதம் எல்லாப் பரிகாரமும் கிடைக்கும். கைரேகை, ஜாதகம், கல்வி, தொழில், வியாபாரம், வாஸ்து சாஸ்திரம், வெளிநாட்டு பயணம், வெளிநாட்டு, உள்நாட்டுப் படிப்புகள் இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.
இந்தியாவின் பிரபல ஜோதிடர்
ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி.

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையில் 7பரப்புக் காணி இரண்டு பக்கமும் வீதியுடன் 12அறைகளுடன் கூடிய நாற்சார வீடு, கிணறு விற்பனைக்கு.
(AKN 119) (14)
077 677 2459

**வாடகைக்கு**
நல்லூர் செட்டித் தெருவில் வீடு வாடகைக்குண்டு.
075 070 0185
(CS 6475) (14)

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் அலுமினிய பிற்றிங் வேலை செய்வதற்கு வேலை தெரிந்தவர்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி மற்றும் போதியளவு சம்பளம் வழங்கப்படும்.
077 646 8452

**விற்பனைக்கு**
U.K இல் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய பாவித்த நிலையிலுள்ள Drillers, Jigsaw, Sanders, V.Recorder, Handycam camera , இறைச்சி அரைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு.
(CS 6462) (14)
076 615 1837

**இறைச்சிக் கோழி விற்பனை**
புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 1kg- 450/= மட்டும்.
கூடுதல் கொள்வனவுக்கு - 430/= மட்டும்.
U.S.A பாம்
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
077 8689 500



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும். நல்லூர் 25நாள் திருவிழாவை முன்னிட்டு பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**யாழ் மாநகரில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்**
பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைநது வழங்கும் மாபெரும் திரை இசை நிகழ்ச்சி



இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில் (வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்
தொடர்பு
077 550 4910
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
K.T. பிரசாத்
Ceylon Art Creation

## துருக்கியின் முன்னாள் தலைமை அமைச்சர் இலங்கை வருகை

துருக்கியின் முன்னாள் தலைமை அமைச்சர் பேராசிரியர் அஹமட் டவுடொக்லு இலங்கை நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இலங்கை வந்தார். பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தை வந்ததடைந்த துருக்கியின் முன்னாள் தலைமை அமைச்சரைத் துருக்கி யின் இலங்கைக்கான தூதுவர் துங்கா ஒச்சாடர்மற்றும்தேசிய ஊடக மத்திய நிலையத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் வரவேற்றனர்.

துருக்கியின் முன்னாள் தலைமை அமைச்சர் பேராசிரியர் அஹமட் டவுடொக்லு, எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் அல் ஹாஜ் பாக்கிர் மாக்காரின் 20ஆவது நினைவுதின நிகழ்வில் 'பல்கலாசாரமே சமாதானத்திற்கான அடிப்படை' எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 17.06.1927

மறைவு 07.07.2017

கடந்த 07.07.2017 அன்று சிவபூமி முதியோர் இல்லத்தில் (வடக்கம்பராய்) சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த

**அமரர் சீனியப்பா சண்முகம்பிள்ளை** (நவரத்தினம் - மாஸ்ரர்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறி உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (06.08.2017) ஞாயிற்றுக் கிழமை பகல் குளத்தடி நாச்சிமார் கோயில் பலாலி றோட், புன்னாலைக்கட்டுவன் வடக்கு முகவரியில் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

மகன் - விக்னேஸ்வரன், சிவனேஸ்வரன்,
விஜயலட்சுமி பூபதிதாஸ் - குடும்பத்தினர்.

22ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் அறிமுகம்
19 . 01 . 1935

தெய்வத்துள் சங்கமம்
08 . 08 . 1995

**அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா**

திதி : திரயோதசி (05.08.2017)

*பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்*
*எங்களுக்கு எல்லாம் அன்பு காட்டி*
*அரவணைத்த எம் அன்புத் தெய்வமே !*
*நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து*
*இருபத்தி இரண்டு ஆண்டுகள் அல்ல*
*எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை*
*விட்டு என்றும் மாறாதையா !*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மைத்துனர்கள்,
மைத்துனிகள், சகோதரிகள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்தையடி,
மானிப்பாய்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**நல்லதம்பி சிவஞானலிங்கம்**

தோற்றம் 12.03.1940

மறைவு 17.07.2016

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும்..... வாழும்..... வாழும்

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்.**

டாக்ரர் சுப்பிரமணியம் வீதி,

# குழந்தைத்தனமாக பேசுகின்றார் ரவி

## சாடுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 5

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக் குழு முன்னிலையில் அயலுறவு அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துகள் குழந்தைத் தனமானவை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ விமர்சித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:

2015 ஜனவரி 8ஆம் திகதி நல்லாட்சி மலர்ந்துவிட்டதாக மார்தட்டியவர்களுக்கு அப்படி எதுவும் நடக்கவில்லையென நாம் சுட்டிக்காட்டினோம். எமது கருத்தை நம்பாது மக்களையும் அவர்கள் தவறாக வழிநடத்தினர். எனினும், இன்று உண்மை அம்பலமாகியுள்ளது. இதனால், நல்லாட்சிக்காகப் பாடுபட்டதாகக் கூறுபவர்கள் கதிகலங்கிப் போயுள்ளனர்.

மகிந்த அரசுதான் நாட்டில் பெரும் கொள்ளைகளில் ஈடுபட்டது. அதற்கு இடமளிக்கக் கூடாது என வீரவசனம் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது செய்வது என்ன? பெரும் திருட்டுக்கள் வெளிவந்தவ ண்ணமுள்ளன.

இந்நிலையில், அரச தலைவர் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க, தான் வசிக்கும் வீடு அலோசியஸின் பெப்பச்சுவலர் ட்ரசரீஸ் நிறுவனத்தின் நிதியால் வாங்கப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்று கூறியிருந்தார். அப்படி தெரிந்திருந்தால் அங்கு சென்றிருக்கமாட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தான் வாங்கிய வீடு பற்றி ரவியின் மனைவி அவருக்குக் கூறவில்லையா? இரவிலாவது இருவரும் சந்தித்துக்கொள்வது இல்லையா? எனவே, மக்களை முட்டாளாக்கும் வகையில் குழந்தைத்தனமாகவே ரவி கருணாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

இப்படிப்பட்ட ஒருவர் எப்படி இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அயலுறவு அமைச்சர் பதவியை வகிக்க முடியும்? இதனால் நாட்டுக்கே பாதிப்பு ஏற்படும்-என்றார். (த)

# துட்டகைமுனு கட்டிய விகாரையில் கொள்ளை

## தேரரையும் காவலாளியையும் கட்டிவைத்துவிட்டுக் கைவரிசை

கொழும்பு, ஓக 5

பூண்டுலோயா கற்பிட்டி, புசுல்பிட்டிய இரஜமகா விகாரையில் தேரரைக் கட்டி வைத்துவிட்டு அங்குள்ள புனித பொருள்களை இனந்தெரியாத நபர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் விகாரைக்குள் நுழைந்த நபர்கள் கொள்ளையில் ஈடுபட்டதுடன் புத்தர் சிலையையும் சேதப்படுத்தியுள்ளனர்.

1044 வருடம் பழமை வாய்ந்த துட்டகைமுனு மன்னனால் கட்டப்பட்ட புசுல்பிட்டிய இரஜமகா விகாரைக்குள் நுழைந்த இனம் தெரியாத நால்வர் தேரர் மற்றும் விகாரையின் காவலாளி ஆகியோரைக் கட்டி வைத்துள்ளனர்.

பின்னர் விகாரையின் சைத்தியைத் சேதப்படுத்தியுள்ளதுடன் புத்தரின் சிலையையும் சேதப்படுத்தி வெள்ளி, தங்கம் போன்ற பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இரவு 9 மணி முதல் அதிகாலை 1 மணிவரை அவர்கள் விகாரைக்குள் இருந்ததாகவும் விகாரையில்பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி கமராவும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தேரர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் விகாரையின் தேரர் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்ததையடுத்து, மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளதாகப் பூண்டுலோயாப்பொலிஸார்தெரிவித்தனர். (த)

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

திதி : ஆடிமாத பூர்வபக்க திரயோதசி (05.08.2017)

மலர்வு 22.04.1942

உதிர்வு 19.07.2005





வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் சேர்ந்து விட்ட தம்
பசுமையான நினைவுகள் நாம் இம்மண்ணில்
உள்ளவரை நெஞ்சில் நிலைத்திருக்கும்

உமது பிரிவால் வாடும்
அன்புக் கணவர், பேறாமகன் சஞ்சீவன்,
சகோதரர்மார், சகோதரிமார், மைத்துனர்மார்,
மைத்துனிமார், பேறாமக்கள், மருமக்கள்,
மற்றும் உறவினர்கள் நண்பர்கள்

ஆ.சுந்தரலிங்கம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)
85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
077 742 0240

(த)

# புலிகளின் யோசனையை ஏற்றிருந்தால் ரணிலே அன்று அரச தலைவர்

## நாட்டு நலனுக்காகவே அதனை அவர் நிராகரித்தார் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஓக 5
விடுதலைப்புலிகளின் இடைக் கால அரசு யோசனையை ஏற்றிருந்தால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2005 ஆம் ஆண்டே அரச தலைவராகியிருப்பார் என்றும், எனினும், நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு அந்தத் திட்டத்தை அவர் நிராகரித்தார் என்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் வாழ்வில் 40 வருடங்களை நிறைவுசெய்த தலைமை அமைச்சர் ரணிலுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
1977 இல் அரசியலுக்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்க நுண்ணறிவும், துணிவும், பொறுமையும், நிதானமும் கொண்டவராக அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய குணாம்சங்களைக் கொண்டவராகத் திகழ்கின்றார்.

நேர்மையாகச் செயற்படக்கூடிய அரசியல்வாதி அவர். முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கொள்கைப்பற்றுடனும், தன்நம்பிக்கையுடனும் கட்சியை வழிநடத்தி இறுதியில் வெற்றியின் வழிக்கு இட்டுச்சென்றார்.

குறிப்பாக விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால அரசு கோரிக்கையை அவர் ஏற்றிருந்தால் 2005 இல் அரச தலைவர் ஆகியிருப்பார். எனினும், நாட்டின் நலனை முன்னிறுத்தி அதை அவர் நிராகரித்தார். உலகநாடுகளிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், மக்கள் நலனை முன்னிறுத்தி அவர் செயற்பட்டார்.

கடந்த அரசில் (மகிந்த அரசில்) நான் அமைச்சராக இருந்தேன். போர் வெற்றியை அடிப்படைவாத முறையில் கொண்டாடினர். இனங்களுக்கிடையில் குரோதத்தைத் தூண்டினார்கள். குடிமக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்த அரசில் அமைச்சராக இருந்ததையிட்டுக் கவலை அடைகின்றேன்.

அவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சியில் இருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க குரலை முப்பி இன ஒற்றுமையை மையப்படுத்திச் செயற்பட்டார். அவருக்கு எமது கட்சி மற்றும் மக்கள் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்கின்றேன் -என்றார். (த)

# பொலிஸ் முன்பாக மனைவியை கத்தியால் குத்திய கணவர் கைது



கொழும்பு, ஓக. 5
இங்கிரிய பொலிஸ் நிலையத்துக்குள் குத்திகுத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.
குடும்ப பிணக்குக் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கணவனுக்கு எதிராக முறைப்பாடு செய்ய மனைவி பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். அங்கு சென்ற கணவன் மனைவியைக் கத்தியால் குத்தியுள்ளார்.
பொலிஸார் தலையிட்டுப் பெண்ணை ஹொரண வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் இங்கிரிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த)

# தூதரகத் தலையீடு

## விசாரணைக்கு ரணில் பணிப்பு

கொழும்பு, ஓக. 5
அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் தொடர்பில் விவாதம் நடத்தப்படுவதைக் குழப்பிய வெளிநாட்டுத் தூதரகம் குறித்து விசாரணை நடத்துமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க உத்தர விட்டுள்ளார்.
மகிந்த அணியின் கோரிக்கைக்கு அமைய அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தைக் குழப்புவதற்கு வெளிநாட்டுத் தூதரகமொன்றின் அழுத்தங்கள் இருந்ததா என விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் அயலுறவு அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
மகிந்த அணியின் முக்கிய பிரமுகர் ஒருவரின் ஊடாக இவ்வாறு நாடாளுமன்ற விவாதம் சீர்குலைக்கப்பட்டதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியிருந்தார்.

(மற்றொரு செய்தி 13 ஆம் பக்கத்தில்)



# ரவி குறித்து மைத்திரி விரைவில் இறுதி முடிவு

## சு.க. வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஓக. 5
இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரத்தில் வசமாகச் சிக்கியிருக்கும் அமைச்சர் ரவி கருணாநாயக்க பற்றிய அரச தலைவரின் நிலைப்பாடு இன்னும் ஓரிரு தினங்களில் வெளிவருமெனச் சுதந்திரக் கட்சியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
அமைச்சர் ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராக இருந்த காலத்தில் நடந்துள்ள இந்தப் பிணைமுறி மோசடி சம்பவத்தால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கை அரசின் எதிர்காலத்தை பெரிதும் பாதிக்கும் என்பதை அரச தலைவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார் எனவும், எனவே, இது தொடர்பில் அவரது நிலைப்பாடு பற்றிய அறிவிப்பு முக்கியத்துவம் பெறும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பிணைமுறி மோசடி பற்றி விசாரணை செய்யத் தன்னால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகளில் வெளியாகியிருக்கும் திடுக்கிடும் தகவல்களால் அரச தலைவர் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளார் எனவும், இந்த நிலையில் ரவி கருணாநாயக்க பற்றிய தீர்க்கமான முடிவொன்றை அவர் எடுக்கவேண்டியது முக்கியம் எனவும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (த)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை கணேசபவன்



மண்ணில் 18.07.1966 | விண்ணில் 27.07.2017

மட்டக்களப்பு கல்முனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்சை வசிப்பிடமாகவும் பிரித்தானியா Coventry ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கணேசபவன் 27.07.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் சிறுப்பிட்டியை சேர்ந்த பொன்னம்பலம் திரவியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் பவிஷன், ருர்சிகா, கேனுர்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராசா, புஸ்பராணி, புஸ்பாதேவி, புஸ்பாகாந்தி, விக்னேஸ்வரன், இந்திராகாந்தி, சிறிஸ்கந்தராஜா, சாந்திமதி, மதிவர்ணன், ஜெயவாணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அனுசியாதேவி, பிறேம்குமார், கதிர்காமநாதன், ஜெசிகலா, முருகதாஸ், சுஜித்ரா, தயானந்தம், ராஜி, தவராஜா, வசந்தாதேவி, காந்தராசா, தயாளினிதேவி, ஸ்ரீமுருகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஷ்மி, அட்சயா, மதுஷ், பிரித்திகா, கீர்த்திகா, நமிஜா, ஷரன் ஆகியோரின் பெரியதந்தையும் சதிஸ்ராஜ், கமல்ராஜ், சஜித்தா, கோகுலராஜ், யானுராஜ், சஜிவினி, புவிதராஜ், இன்பராஜ், கஜப்பிரியன், லக்சிபன், வரலக்ஸ்மி ஆகியோரின் அன்பு சிறியதந்தையும் பிரணுஜன், சனுஜன், கீர்த்திகா, கிரனுஜா, டிலனுஜா, சறுனுஜா, பிரேமியா, ஜோஷிக், நுக் ஷாந், கேஷாந், மதுஷா, அபிராம், நிதுராம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை 08.08.2017 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

ஸ்ரீ (லண்டன்) +447400761213
காந்தன் (இலங்கை) 0776941345

# ரணிலை வாழ்த்தும் அமர்வை நேற்று புறக்கணித்த ஜே.வி.பி., மகிந்த அணி

கொழும்பு, ஓக 5
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி தொடர்ச்சியாக 40 வருட காலச் சேவையைப் பூர்த்திசெய்தமைக்காக வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற சிறப்பு நாடாளுமன்ற அமர்வை மகிந்த அணியும், ஜே.வி.பியும் புறக்கணித்தன.
நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.
சபாநாயகர் அறிவிப்பு முடிவடைந்த பின்னர், தலைமை அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பிரேரணையை முன்வைத்துச் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல உரையாற்றினார்.
பிரேரணையை வழிமொழிந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றினார்.
அதன்பின்னர் நிமல் சிறிபாலடி சில்வா, ரவூப் ஹக்கீம், திகாம்பரம், மனோ கணேசன், டக்ளஸ் தேவானந்தா, ரிசாத் பதியுதீன் ஆகியோர் கட்சிகளின் சார்பில் தலைமை அமைச்சரை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.
மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவுக்கும், ஆளுங் கட்சியின் முதன்மைக் கொறடா என்ற வகையில் அமைச்சர் கயந்த கருணாதிலகவுக்கும் உரையாற்ற வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.
எனினும், மகிந்த அணி மற்றும் ஜே.வி.பியின் சார்பில் எந்தவொரு உறுப்பினர்களும் சிறப்பு நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை.
முதன்மை எதிர்க்கட்சியான கூட்டமைப்பு பங்கேற்றிருந்தது.
மகிந்த அணியினதும், ஜே.வி.பியினதும் இந்த நடவடிக்கையை அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் வன்மையாகக் கண்டித்தனர்.
அதேவேளை, நேற்றைய தினம் நாடாளுமன்ற வளாகத்தில் தலைமை அமைச்சருக்காகச் சிறப்புப் பூசை வழிபாடும் நடைபெற்றது.
அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் உட்பட மேலும் பலரும் நேற்று நாடாளுமன்றம் வந்திருந்தனர்.
பார்வையாளர் கலரியும், சபாநாயகர் விருந்தினர் கலரியும் நேற்று நிரம்பியிருந்தன.
காலை 10.30 மணிக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவைக்குள் வரும்போது அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று வரவேற்பளித்தனர்.
தலைமை அமைச்சரின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் சபாநாயகர் விருந்தினர் கலரியில் அமர்ந்திருந்தவாறு சபை நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். (த)

# அலோசியஸின் கணக்கு முடக்கம்

கொழும்பு, ஓக 5
இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மருமகனான அர்ஜுன் அலோசியஸின் அப்பிள் கணக்கில் உட்புகத் தடைவிதிப்பதாக மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி குறித்து விசாரணை செய்துவரும் அரச தலைவர் ஆணைக்குழு சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்தது.
அர்ஜுன் அலோசியஸின் மனைவியின் அப்பிள் கணக்கு மூலம் அர்ஜுன் அலோசியஸின் கணக்கில் உட்புகுந்து அதில் உள்ள தகவல்களை அழிக்க முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறி அரச தலைவர் சட்டத்தரணி யசந்த கோதாகொடி அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு வழங்கிய கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தச் சிறப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
இந்தக் கணக்கில் உட்புகுந்து அதில் உள்ள தகவல்களை அழிக்க முற்பட்டிருந்தாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அரச தலைவர் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (கு)

# மேற்குலகின் தேவைப்பாடு கூட்டாட்சியே

## தனிநாட்டைக் கொடுக்கவே புதிய அரசமைப்பு என்கிறார் வீரவன்ஸ



கொழும்பு, ஓக 5
நாட்டை இரண்டாகப் பிரித்து கூட்டாட்சி அடிப்படையில் புலிகளுக்குத் தனி நாட்டைக் கொடுக்கும் ஒரேயொரு நோக்கத்துக்காகத்தான் அரசமைப்பு தயாரிக்கப்படுகிறது. மேற்கு நாடுகளின் தேவை இதுதான்.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசமைப்புச் சபையில் இருந்து எமது கட்சிகளின் ஐந்து உறுப்பினர்களும் விலகிவிட்டோம். அதேபோல் வழிநடத்தல் குழுவிலும் நாம் உறுப்பினர்களாக இல்லை. உப குழுக்களிலும் எமது உறுப்பினர்கள் இல்லை. பன்னாட்டுச் சக்திகளின் தேவையைநிறைவேற்றும் நோக்கில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படவுள்ளதால் நாம் இதில் இருந்து விலகிக்கொண்டோம்.
அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்த வழிநடத்தல் குழு இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்தாலும் இதற்கு வெளியில் இருந்து திருட்டுத்தனமாகத் தயாரிக்கப்படும் அறிக்கையே புதிய அரசமைப்பாக மாறும். அது தான் பன்னாட்டுச் சக்திகளால் தயாரிக்கப்படும் அரசமைப்பு.
உண்மையில் இந்த நாட்டு மக்களின் தேவைக்காக அரசமைப்பு தயாரிக்கப்படமாட்டாது நாட்டை இரண்டாகப் பிரித்து கூட்டாட்சி அடிப்படையில் புலிகளுக்குத் தனி நாட்டைக் கொடுக்கும் ஒரேயொரு நோக்கத்துக்காகத்தான் அரசமைப்பு தயாரிக்கப்படுகிறது. மேற்கு நாடுகளின் தேவை இது தான்.
ஜெனிவா பிரேரணையும் இதை வலியுறுத்துகிறது. ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்கான நிபந்தனைகளும் இதை வலியுறுத்துகின்றன.
மேற்கு நாடுகள் இந்த நாட்டுக்கு இப்போது எத்தனை உதவிகளை செய்தாலும் அவற்றின் ஒவ்வொன்றினதும் நோக்கம் நாட்டை இரண்டாகப் பிரிக்கும் அரசமைப்பைக் கொண்டு வருவது தான்.
இந்த அரசமைப்பை பௌத்த பீடங்களும் எதிர்க்கின்றன. யோசனைகள் பலவற்றை முன்வைத்துள்ளன. பௌத்த பீடங்களின் ஆலோசனைகள் புறக்கணிக்கப் பட்ட நிலையில் புதிய அரசமைப்பு கொண்டு வரப் பட்டால் லட்சக்கணக்கான மக்களின் போராட்டத்தின் ஊடாக அது தோற்கடிக்கப்படும் - என்றார். (கு-3)

> “ பௌத்த பீடங்களின் ஆலோசனைகள் புறக்கணிக்கப் பட்ட நிலையில் புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட்டால் லட்சக்கணக்கான மக்களின் போராட்டத்தின் ஊடாக அது தோற்கடிக்கப் படும். ”

# கூட்டாட்சியை தக்க வைக்க அரசு கொலை புரியவும் தயார்

## கூறுகின்றது மகிந்த தரப்பு

கொழும்பு, ஓக 5
கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வந்துள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபயகுணவர்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இந்த அரசு இரண்டு வருடங்களை வீணாகக் கழித்துவிட்டது. மீதி வருடங்களையாவது நல்ல முறையில் கழிக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். அமைச்சரவை மாற்றம் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவரும். அந்த மாற்றத்தோடு நல்ல நிலைமை ஏற்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.
அமைச்சரவை மாற்றத்தில் சில பொறுப்புகள் மாற்றப்பட்டதோடு சரி. எதுவும் நடக்கவில்லை. அந்த அமைச்சரவை மாற்றத்தின் பின்தான் நாட்டின் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுகின்றனர். யாராலும் இதைச் சகிக்க முடியாது.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. அடுத்து மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திப்போடப்படும். சப்ரகமுவ. வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆயுட்காலம் இந்தவருடம் செப்ரெம்பரில் நிறைவடைகின்றது. அந்தச் சபைகளுக்கான தேர்தலும் ஒத்திப்போடப்படும்.
அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து இதைச் செய்யப் பார்க்கின்றது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதென்றால் நாட்டில் அசாதாரண நிலைமை ஏற்படவேண்டும். அந்த அசாதாரண நிலைமையை இந்த அரசு இப்போது உருவாக்குகின்றது. கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வந்துள்ளது. இதன் விளைவுகளை நாம் விரைவில் அனுபவிக்க நேரிடும் - என்றார். (கு-3)

# மாகாணத் தேர்தல்கள் ஒரே நாளில் நடக்கும்

## இழுத்தடிப்புகள் இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக 5
மாகாண சபைகளுக்குரிய தேர்தல் ஒத்திவைக்கப்படாது என்றும், அனைத்து மாகாணங்களிலும் ஒரே தினத்தில் தேர்தல் நடைபெறும் என்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார். சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கலப்பு முறையிலேயே நடத்தப்படும். 70 வீதம் தொகுதிவாரியாகவும், 30 வீதம் விகிதாசார முறைமையாகவும் இருக்கும். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம நடத்தப்பட்டு உள்ளூராடசிச சபைகள தேர்தல திருததச சட்டவரைவு நிறைவேற்றப்படவுள்ளது. அதன் பின்னர் தேர்தல் நடத்தப்படும்.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது. வேட்பாளர் தேர்வின்போது ஒழுக்கமுள்ள நன்மதிப்புள்ள வேட்பாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
மாகாண சபைகள் தேர்தலை தனித்தனியாக நடத்துவதால் பணவிரயம் ஏற்படுகின்றது. எனவே, ஒரே நேரத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. தற்போது சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். தேர்தலுக்கான திகதியை நாடாளுமன்றமே தீர்மானிக்கும். உள்ளூராட்சி சபைத் தேர்தல்போல் இழுத்தடிப்புகள் இடம்பெறாது - என்றார். (கு)



# செப்ரெம்பரில் போராட்டம்

## லொத்தர் முகவர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக 5
சீட்டு ஒன்றுக்குத் தங்களுக்கு வழங்கவேண்டிய 50 சதவீத தரகுப்பணம் தரப்படாவிட்டால் மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டமொன்றில் ஈடுபடப்போவதாக இலங்கை லொத்தர் முகவர்கள் சங்கம் நிதி அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலர் பீ.எஸ்.எஸ். மதரசிங்க தெரிவித்ததாவது:
சீட்டு ஒன்றுக்கு எங்களுக்கு 50 சதவீதம் தரகுப் பணம் வழங்கப்படுமென 2015 இல் உறுதியளிக்கப்பட்டபோதும் இதுவரை அது கிடைக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் கடந்த ஜனவரி மாதம் நிதி அமைச்சின் செயலரைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தார். எனினும், அவரது வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாங்கள் இந்த வியாபாரத்தைச் செய்துவருகிறோம். எங்களது விற்பனைக் கூடங்களை அகற்றப்போவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மிரட்டிக்கொண்டிருக்கிறது.
கடந்த இரண்டு வருடங்களில் எத்தனையோ புதுச் சீட்டுக்களை லொத்தர் சபை அறிமுகம் செய்துள்ளது. அவற்றால் முன்பைவிட பல மடங்கு வருமானம் அவர்களுக்குக் கிடைத்தபோதிலும் எங்களுக்கு வழங்கவேண்டிய அற்பசொற்ப தரகுப் பணத்தை வழங்க மனம் வரவில்லை.
எனவே. எங்களது கோரிக்கை நிறைவேறாவிட்டால் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் - என்றார். (கு)

# அயலுறவு செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது அமைச்சர் ரவி

கொழும்பு, ஓக 5
அமைச்சர் ரவி கருணாநாயக்க மீதான விசாரணைகள் முடியும் வரையில் அவரை அயலுறவு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்த [illegible] கம்மன்பில கோரியுள்ளார்.
அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்பித்தமை தொடர்பாக நேற்று முன் தினம [illegible] நடைபெற்ற [illegible] லேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அவரை அயலுறவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது நாட்டினது எதிர்காலத்தைப் பாதிக்கும்.
எனவே நாட்டு நலனைக் கருத்திற் கொண்டு அவர் மீதான நடவடிக்கைகள் முடியும்வரை அவரது செயற்பாடுகள் குறித்து அரசு தீர்மானிக்க வேண்டும் - என்றார். (கு)

அம்பாந்தோட்டை ஒப்பந்தம்;

# வெளிநாட்டு தூதரகமே விவாதத்தை குழப்பியதாம்



கொழும்பு, ஓக 5
அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடக்கவிருந்த விவாதம் குழப்பப்பட்டதன் பின்னணியில், சக்தி வாய்ந்த நாடு ஒன்றின் தூதரகமே இருந்தது என்று இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது.
கொழும்பில் நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர இதனைக் கூறியுள்ளார்.
அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தின் வரைவு ஆவணம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை விவாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.
எனினும், மகிந்த அணி அன்று நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்ததால், விவாதம் நடத்தப்படவில்லை.
இதனால், நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படாமலேயே கடந்த சனிக்கிழமை சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
இது குறித்து நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தகவல் வெளியிட்ட அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர, "உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்வதற்கான வாய்ப்புகளை மகிந்த அணியினர் தவறவிட்டு விட்டனர். குறிப்பிட்ட ஒரு வெளிநாட்டு இராஜதந்திரத் தூதரகத்தில் இருந்து மகிந்த அணி உறுப்பினர் ஒருவருக்கு வந்த தொலைபேசி அழைப்பை அடுத்தே, எல்லாக் குழப்பங்களும் ஆரம்பமாகின. இதனால், திருத்தங்கள் ஏதும் செய்யப்படாமலேயே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது" என்று கூறினார். (த)



# கொழும்பு வரும் சீனாவின் மிதக்கும் வைத்தியசாலை

கொழும்பு, ஓக 5
சீனக் கடற்படையின் மிக நவீன வைத்தியசாலைக் கப்பலான, ஆர்க் பீஸ் நல்லெண்ணப் பயணமாக நாளை இலங்கைக்கு வரவுள்ளது.
இந்தக் கப்பல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.
எதிர்வரும் 8 ஆம் திகதி, இந்த மிதக்கும் மருத்துவமனையில் இலங்கையர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆர்க் பீஸ் கப்பல், சீனாவினால் கட்டப்பட்ட மிகப் பெரிய வைத்தியசாலைக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## உமா ஓயாவால் 50 வீடுகள் அபாய நிலையில்

கொழும்பு, ஓக 5
உமா ஓயாத் திட்டத்தின் பாதிப்புக் காரணமாகப் பண்டாரவளை திக்அராவ பிரதேசத்தின் 50 வீடுகள் அபாய நிலைக்குள்ளாகியிருப்பதாகத் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
கடந்த சில தினங்களில் திக்அராவ, அலுத்கம போன்ற பிரதேசங்களில் நடத்திய பரிசோதனைகளின்போதே இது கண்டறியப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.
குறித்த வீடுகளில் உள்ளவர்களை வேறிடங்களுக்குச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# குறைந்தளவான நிதி ஒதுக்கீட்டில் நிறைவான சேவை

### கிழக்கு சுகாதார அமைச்சர் பெருமிதம்

திருமலை, ஓக. 5
கிழக்கு மாகாணத்துக்கு இந்த முறை குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டது. ஆனாலும் சுதேச வைத்தியத்துறை அபிவிருத்தியடைந்து வருகின்றது. நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் எனக் கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் ஏ.எல் முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது..
அரசினால் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்காகச் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் மாகாண சுகாதார அமைச்சர்களுக்கான மாநாடு நடைபெற்றது.
மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்துவதற்காகச் சிறப்புத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன.
குறிப்பாகக் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வருகிறோம். கிழக்கு மாகாணம் முழுவதும் சுகாதார அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (த-ய-40)

# தமிழருக்கு கூட்டாட்சி வழங்கவே சிலர் சதி

### இது மக்கள் ஆணையை மீறும் செயல் என்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஓக 5
ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழருக்குக் கூட்டாட்சியை வழங்கி அதனூடாக நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு இந்த அரசில் உள்ள சிலர் சதி செய்கின்றனர். இது இரண்டு முதன்மைக் கட்சிகளுக்கும் மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலாகும் .
இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள ஒரு சிலர் கூட்டாட்சியை ஆதரிக்கின்றபோதிலும் கூட.ஜே.ஆர்.ஜெயவர்தனவினதும் டீ.எஸ். சேனநாயக்கவினதும் பரம்பரையில் வந்தவர்கள் ஒற்றையாட்சியையே ஆதரிக்கின்றனர். அந்தக் கட்சியில் உள்ள பெரும்பான்மையினரின் நிலைப்பாடு ஒற்றையாட்சி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான்.
ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காகவே மக்கள் இரண்டு முதன்மைக் கட்சிகளுக்கும் வாக்களித்தனர். ஆனால்.ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழருக்குக் கூட்டாட்சியை வழங்கி அதனூடாக நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு இந்த அரசில் உள்ள சிலர் சதி செய்கின்றனர். மகிந்த ஆட்சியிலும் இவ்வாறானவர்கள் இருந்தனர்.திஸ்ஸ விதாரணவின் அறிக்கை இதற்கு நல்ல உதாரணம். மக்கள் ஆணையை ஒருபோதும் மீறமுடியாது.
உண்மையில்.இந்த இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஆரம்பத்தில் கூட்டாட்சி என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தன. நாங்கள் தான் இவர்களை ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்தோம். நாம் ஒற்றையாட்சி பற்றிப் பேசியபோது சந்திரிகாவும் மகிந்தவும் கூட்டாட்சி நிலைப்பாட்டில் இருந்தனர். கோத்தா அமெரிக்காவில் இருந்தார். விமல் வீரவன்ஸ வேறொரு சிந்தனையில் மூழ்கி இருந்தார்.
2005 இல் மகிந்த ஆட்சிக்கு வந்தபோது அவர் புலிகளுடன் போர் செய்ய எண்ணவில்லை.பேச்சு நடத்தவே திட்டமிட்டார். டிரான் அலசின் ஊடாகப் புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தினார். ஜெனிவாவில் புலிகளுடன் பேச்சைத் தொடங்கினார். ஆனால்,நாம் தான் மகிந்தவைப் போருக்குத் தள்ளினோம்.
இவ்வாறு கஷ்டப்பட்டுக் காப்பற்றிய இந்த நாட்டை கூட்டாட்சித் தீர்வின் ஊடாக மீண்டும் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு இந்த அரசில் உள்ளவர்கள் முயற்சிப்பது கவலைக்குரிய விடயம். - என்றார். (த-3)

## சைட்டம் மாணவர் அனுமதியை நிறுத்துக

### 8 பீடாதிபதிகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக 5
மாலபே சைட்டம் தனியர் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் அனுமதிப்பதை நிறுத்துமாறு கோரி 8 அரச பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதிகள், 4 பரிந்துரைகளைக் கொண்ட கடிதம் ஒன்றை உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கு அனுப்பியுள்ளனர்.
இந்தப் பரிந்துரைகள் மூலம் சைட்டம் தனியார் பல்கலைகழக பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும் என்றும், அதனூடாக மருத்துவபீட மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பை நிறுத்த முடியும் என்றும் தாம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். (த)

# முழு நாட்டையும் விற்பார் மைத்திரிபால

### இறுதியில் அதுவே நடக்கும் என்கிறார் மகிந்த

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடக்கம் ஒவ்வொரு அரச வளத்தையும் விற்று வரும் இந்த அரசு இறுதியில் முழு நாட்டையும் விற்கும் என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். கல்கிசையில் நேற்று முன் தினம் அமரபுர பீடத்தின் தலைமைத் தேரர் தம்மவாசவின் ஆசிர்வாதம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்ற பின்னர் அதனை நியாயப்படுத்த அரசு முயல்கிறது. சங்கரி லா ஹோட்டல் அமைக்க அரச காணியை வழங்கியதாக எம் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். சங்கரி லாவுக்குக் காணி வழங்கியதும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வழங்கியதும் ஒன்றாக முடியுமா? பெரும் நிலப்பரப்புடன் துறைமுகம் விற்கப்பட்டுள்ளது. சங்கரி லா ஹோட்டலுக்குக் காணி வழங்கியதால் நாட்டின் பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படுமா? ஹோட்டலுக்காகக் காணி வழங்கியதால் தான் முதலீடுகள் அதிகரித்தன. அரச காணி உரித்தை வெளிநாட்டவர்களுக்கு வழங்குவதைத் தடுக்கும் சட்டத்தை நாம் தான் கொண்டு வந்தோம். ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்தமன்றி வேறு ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டுள்ளது. மக்கள் நீதிமன்றத்தில் இந்த அநியாயங்களுக்குத் தீர்ப்பு கிடைக்கும் - என்றார். (த)

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

# International Movement for Tamil Culture

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 13ஆவது பன்னாட்டு மாநாடு

**நாள் : சனி, ஞாயிறு 05, 06 ஆகஸ்ட் 2017**

**இடம் : யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை & ரில்கோ விடுதி, யாழ்ப்பாணம், இலங்கை.**

அன்புடையீர் வணக்கம்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 13 ஆவது பன்னாட்டு மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது. தமிழர்கள் குடியேறாத நாடுகளே இன்று இல்லை என்றுரைக்கும் வகையில் உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் குடியேறியுள்ளனர். அவர்களை ஒருங்கிணைக்கும் முதன்மை நோக்கினை இம்மாநாடு முன்னெடுக்கிறது. இம்மாநாடு ஒரு சடங்காக இல்லாமல் புலம் பெயர்ந்த நாடுகளில் எதிர்கொள்ளும் குடியுரிமை சவால்கள், தாமும் தமிழ் பயின்று அயலவரையும் தமிழ் பயில ஊக்குவித்தல், தமிழர் பண்பாடுகளை அனைவரும் அறியும் வகையிலான முன்னெடுப்புகளைக் காலத்திற்கு ஏற்ற வகையில் அமைத்தல், அயலகத் தமிழ்க் கல்வி மேம்பாடு போன்ற சவால்களை எதிர்கொள்ள ஒருமித்த கருத்தொற்றுமையை உருவாக்குதல் முதலான சீரிய நோக்கங்களைக் கொண்டு செயலாற்ற இருக்கிறது. இன்றைய சூழலில் தமிழர் மொழி, பண்பாடு எதிர்நோக்கும் சவால்களையும் முன்னெடுப்புகளையும் மையமாகக் கொண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது பன்னாட்டு மாநாடு ஆய்வரங்கங்கள் இலங்கை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்குகளில் அயல்நாடுகளில் இருந்து 300 பேராளர்களுக்கும் மேலாகப் பங்கேற்க உள்ளனர்.

இம்மாநாட்டுப் பேராளர்களின் கவியரங்கம், கருத்துரையாடல், கலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ரில்கோ விடுதி அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தாங்களும் தங்கள் நிறுவனத்தைச் சார்ந்தவர்களும் இப் பன்னாட்டு மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

**அன்புடன் மாநாட்டுக் குழுவினர்.**

## நிகழ்ச்சி நிரல்

**நாள் : 05.08.2017, சனிக்கிழமை**

**இடம் : கைலாசபதி அரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாண்ம், இலங்கை.**

காலை 8.30 மணி பேராளர் பதிவு
காலை 9.30 மணி தொடக்க விழா
மங்கல இசை : ஈழநல்லூர் பாலமுருகன்
பரதநாட்டியம் : திருமதி கஸ்தூரி மாசிலன், பின்லாந்து
தமிழ் வாழ்த்து
வரவேற்புரை : இ.இராஜசூரியர் (தலைவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யேர்மனி)
குத்து விளக்கு ஏற்றுதல்
மாநாடு தொடங்கி வைப்பவர் : கௌரவ V.S.இராதாகிருஷ்ணன் (இலங்கை கல்வித்துணை அமைச்சர்)
தலைமையுரை : முனைவர் பாஞ்.இராமலங்கம் (தலைவர், 13 ஆவது பன்னாட்டு மாநாடு)
நோக்கவுரை : திரு.வி.சு.துரைராஜா
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தலைமையகம், கனடா
இணைப்பாளர் உரை : பேராசிரியர் சுபதினி றமேஸ் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
முதன்மை விருந்தினர் : பேராசிரியர் ரத்னம் விக்கினேஸ்வரன் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சிறப்பு விருந்தினர்கள் : கௌரவ நீதியரசர் C.V.விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடமாகாண சபை, யாழ்ப்பாணம்
கௌரவ J.ரெஜிநோஸ்ட்குரே ( வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாணம்)
கௌரவ மாவை சோ.சேனாதிராஜா MP (இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்)
கல்வி நிதியுதவி அளிப்பவர் : திரு.மதன் சண்முகராஜா கனடா
இயக்க அறிக்கை : திரு.துரை.கணேசலிங்கம்
செயலாளர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜேர்மனி
பன்னாட்டு மாநாட்டு மலர் வெளியீட்டுச் சிறப்புரை : கௌரவ விஜயகலா மகேஸ்வரன்
சிறுவர் & மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர், இலங்கை
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க விருதுகள் வழங்கிச் சிறப்புரை
: கௌரவ S.K.தேவமணி (பிரதமர் அலுவலகம் துணை அமைச்சர், மலேசியா)
வாழ்த்துரை : தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவர் (ஆசிரியர், தமிழ்ப்பணி இதழ், சென்னை.)
நன்றி நவிலல் : பேராசிரியர் தி.வேல்நம்பி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நண்பகல் 12.00 மணி – ஆய்வரங்கங்கள்**

**முதல் அமர்வு : கடல் கடந்த தமிழர்ப் பண்பாடு**
தலைமை : பேராசிரியர் குணசேகரன் கருப்பண்ணன்
இணைப்பேராசிரியர், சிலங்கூர் பல்கலைக்கழகம், மலேசியா
முன்னிலை : திருமதி பொன்னி வீரப்பன், மலேசியா
திரு சு.தியாகலிங்கம் தலைவர் நோர்வே கிளை
அகிலத் துணைத்தலைவர் தலைமையகம் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.
ஆய்வுரை : திரு. நர்தவனம் சந்திரசேகரன், சென்னை
திரு.கே.வெங்கடேசன், அந்தமான்

**இரண்டாம் அமர்வு : தமிழர்ப் பண்பாட்டு இலக்கிய ஆய்வு**
தலைமை : பேராசிரியர் இராச.குழந்தைவேலனார் (தலைவர், தமிழ்ச்சங்கம், கடலூர்.)
முன்னிலை : பேராசிரியர் கி.விசாகரூபன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை,
திரு.க.சுபாஸ்கரன் (உபதலைவர், பிரான்ஸ் கிளை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம்)
ஆய்வுரை : திரு. முருக தயாநிதி, தேதசியக் கல்வி நிறுவகம், கொழும்பு.
திரு.சிவமகிழி, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் அமர்வு : புலம் பெயர்ந்த தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**
தலைமை : டத்தோ டாக்டர் S. சுப்பிரமணியன் (தலைவர், தமிழ்ச்சங்கம், மலேசியா)
முன்னிலை : திரு.இரா.பாலேந்திரநாதன் பிரித்தானியா (U.K)
திருமதி சத்தியமூர்த்தி பாமினி
பொருளாளர், சுவிற்சர்லாந்து, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.
ஆய்வுரை : முனைவர் வீ. செல்வப்பெருமாள்
அறிஞர் அண்ணா அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால்.
திரு மார்க்கண்டன் ரூபவதனன், இலங்கை

**நான்காம் அமர்வு : உலகத் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**
தலைமை : டாக்டர் வி.முத்து தலைவர், புதுச்சேரி தமிழ்ச்சங்கம்
முன்னிலை : திரு.சிவா கணபதிப்பிள்ளை
தலைவர், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், அமெரிக்கா ஒன்றியம்
திரு.குணபதி கந்தசாமி (கலை பண்பாட்டுப் பொறுப்பாளர், உலகத் தமிழ்பண்பாட்டு இயக்கம்)
ஆய்வுரை : கவிஞர் நெடுஞ்சேரலாதன் விருதுநகர்
திரு. நட ராஜ்குமார் கனடா

**ஐந்தாம் அமர்வு : உலக நாடுகளில் தமிழ்க்கல்வி**
தலைமை : முனைவர் இல.சுந்தரம் (தமிழ்ப் பேராயம், S.R.M. பல்கலைக்கழகம், சென்னை)
முன்னிலை : திரு.சு.பிரசாந்தன் (செயலாளர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கை.)
திரு.சாமி அப்பாத்துரை கனடா
ஆய்வுரை : திரு. T.சபாலிங்கம் சித்தன்கேணி.
திரு.A. நித்திலவர்ணன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

**உணவு இடைவேளை 1.30 -2.30 மணி**
**பிற்பகல் 2.30 மணி**

**ஆறாம் அமர்வு : பன்னாட்டளவில் தமிழர் வாழ்வாதாரங்கள்**
தலைமை : திரு.மா.இரவிச்சந்திரன் (தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா கிளை.
முன்னிலை : திரு.குகதாஸ் நவநீதராஜா ( விக்ரோறியா கலாச்சாரக்கழகம், ஆஸ்திரேலியா)
திரு.V.வேணுகோபாலன் PK, மலேசியா
ஆய்வுரை : திரு. நீலம், அருள்செல்வி, புதுச்சேரி ( முனைவர் அகத்தியா)
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

**ஏழாம் அமர்வு : ஐரோப்பியத் தமிழர்கள்**
தலைமை : திரு.அ.இளஞ்செழியன் (தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரித்தானியா)
முன்னிலை : திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)
திரு.தியாகராஜா சௌந்தரராஜன் கனடா
ஆய்வுரை : முனைவர் அரங்க முருகையன் (புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி)

**எட்டாம் அமர்வு : இணையவழித் தமிழர் உறவுகள்**
தலைமை : திரு.மு.இளங்கோவன் (காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி.)
முன்னிலை : பேராசிரியர் இ.இராவேஸ்கண்ணா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)
ஆய்வுரை : திருமதி T.உமாதேவி MS, மலேசியா

**ஒன்பதாம் அமர்வு : ஊடகமும் தமிழர் தொடர்புகளும்**
தலைமை : திரு.லோகன்.லோகேந்திரலிங்கம் கனடா
முன்னிலை : திரு.தே செந்தில்வேலவர் இலங்கை.
திரு.குணபதி மைந்தன் புதுச்சேரி.
ஆய்வுரை : முனைவர் இலட்சுமி தத்தை (புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி)

**பத்தாம் அமர்வு : இலங்கைத் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்**
தலைமை : திரு.முரளிதரன் (இயக்குநர் - தமிழ்த்துறை, கல்வி அமைச்சகம், இலங்கை)
முன்னிலை : முனைவர் மு. திருமாவளவன் (சென்னை)
ஆய்வுரை : திரு.M.A.M சமீம் மட்டக்களப்பு
திரு.ச.லலீசன் (ஆசிரியர் கலாசாலை – யாழ்ப்பாணம்)

**மாலை 4.00 மணி கவியரங்கம் - I**
தலைப்பு : தாய் மண்ணை மறவாத தமிழர்களாய் வாழ்வோம்
தலைமை : கவிஞர். மலையன்பன் லோகேந்திரலிங்கம் , கனடா
முன்னிலை : பாவலர். கதிர்.முத்தையன் (தலைவர், பாவாணர் உலகத் தமிழ் மன்றம், கடலூர்.)
பங்கேற்போர்: கவிஞர்.கோவிலூர் செல்வராஜன் நோர்வே
கவிஞர். நல்லை அமிழ்தன் இலங்கை
திருமதி சத்தியமூர்த்தி பாமினி சுவிசர்லாந்து

**மாலை 5.00 மணி யாழ்ப்பாணச் சுற்றுலா**

### இரண்டாம் நாள் நிகழ்வுகள்

**நாள் : 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை**
**இடம் : ரில்கோ விடுதி அரங்கம், யாழ்ப்பாணம்.**

காலை 9.00 மணி கவியரங்கம் - II
**தலைப்பு உலக மாந்தர் நேய உரிமை**
தலைமை : பெருங்கவிக்கோ முனைவர் வா.மு.சேதுராமன், சென்னை
முன்னிலை : கவிஞர் செ.சி.இளந்திரையன் ( உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், சேலம்)
பங்கேற்போர்: கவிச்சிங்கம் கண்மதியன்

| | |
|---|---|
| கவிஞர். கா.முருகையன் | கவிஞர். தகுதி.திவாகரன் |
| கவிஞர். சோ.கருப்புசாமி | கவிஞர். நிலவு.முத்துகிருட்டிணன் |
| கவிஞர். பரிமளா திருவள்ளுவர் | தமிழரசி.முத்துகிருஷ்ணன் |
| திரு. எழிலரசன் | கவிஞர். முனைவர் வள்ளம் கோபி (திருச்சி) |

காலை 10.00 மணி பன்னாட்டு பேராளர் கருத்தரங்கம்
தலைமை: திரு. சந்திரசேகரன் கோவிந்தசாமி (கல்வி துணை அமைச்சரின் சிறப்பு அதிகாரி, மலேசியா)
முன்னிலை : திரு. T. கணேசன் (முதன்மைச் செயல் அலுவலர், சமூக வியூக அறவாரியம் மலேசியா)
பங்கேற்கும் நாடுகளின் பேராளர்களின் கருத்துரைகள்

**காலை 11.00 மணி சிறப்பரங்கம்**
வரவேற்புரை: திரு.தே.செந்தில்வேலவர் (ஊடகப் பொறுப்பாளர், 13 ஆவது பன்னாட்டு மாநாடு)
முதன்மை விருந்தினர் : கௌரவ R. சம்பந்தன் M.P. (நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை.)
கௌரவ விருந்தினர் : கௌரவ A. நடராஜன், (இந்தியத் துணைத் தூதுவர், இலங்கை.)
: கௌரவ விஜயகலா மகேஸ்வரன் (சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர்-இலங்கை)
: கௌரவ சீ.வி.கே. சிவஞானம் (தலைவர், வடமாகாண சபை, யாழ்ப்பாணம்)
: கௌரவ ஈ. சரவணபவன் (இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ அரியரத்தினம் கவிந்திரன் கோடீஸ்வரன்
இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்

**பகல் 01.00 மணி உணவு**

**பிற்பகல் 2.00 மணி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முன்னெடுப்புகள்**
தலைமை: டத்தின் முனைவர் தாமரைச்செல்வி, மலேசியா
முன்னிலை : திரு.நா.இ. விக்கிரமசிங்கம் (தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அவுஸ்திரேலியா)
செல்வி பிரதிஷ்டா ராமமூர்த்தி M.A.M,Sc.,LLB., வழக்கறிஞர்,
உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கம், பெங்களூர்
பங்கேற்போர்: முனைவர் இராமநாயகம் திரவியம் (தலைவர், மலேசிய மகளிர் இயக்கம், மலேசியா)

**மாலை 4.00 மணி நிறைவு விழா**
வரவேபுரை : திரு.சு.பிரசாந்தன் (செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கை)
தலைமை : திரு.வி.சு. துரைராஜா (தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா)
முன்னிலை : பேராசிரியர் சி. இராமமூர்த்தி (உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெங்களூரு)
மாநாட்டுத் தீர்மானங்கள் : முனைவர் பாஞ். இராமலிங்கம்(தலைவர் 13 ஆவது பண்பாட்டு மாநாடு – 2017)
பேராளர்களுக்கு சான்றிதழ் வழங்கி மாநாட்டு நிறைவுரை
: கௌரவ மாவை சோ.சேனாதிராஜா M.P. (இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்)


**மாலை 5.00 மணி திரைப்படம்**
தலைமை முன்னிலை : திரு. அ.சத்தி ஆனந்தன் (தலைவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கை)
: திரு.சேஷன் குமார் M.A., LL.B., (உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெங்களூரு)
திரு.குணவதி மைந்தன் எழுதி இயக்கிய
"திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு"
இலக்கியத் திரைப்படம் (ஒரு மணி நேரம்)

**மாலை 6.00 மணி கலை நிகழ்வுகள்**
நடனம் : கலாநிதி உஷாந்தினி நேச காந்தனின் மாணவர்கள்
தமிழிசை : ஆரூரன் அருணந்தி
இசைநிகழ்வு : ராகம்ஸ் இசைக்குழு
மங்கல இசை : கலைமாமணி புதுவைச் சித்தன் ஜெயமூர்த்தி ( திரைப்பட பின்னணிப் பாடகர்)
கிராமியச் சங்கமம் : காவடி, கரகம், ஒயிலாட்டம்
அருணோதயக் கல்லூரி மாணவர்கள்
தாதாகிட : கலை நிகழ்வு (இசை நடனம்) (மகாஜானக் கல்லூரி, தெல்லிப்பழை)
நன்றி நவிலல் : திரு.துரை கணேசலிங்கம் (அகிலச் செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜேர்மனி)

## உலகத்தமிழ்மாமணிவிருது - 2017

1. டத்தோ ஸ்ரீஎஸ். கே.தேவமணி, (பிரதமர்அலுவலகத்துணைஅமைச்சர், மலேசியா)
2. டத்தோ டாக்டர்சு. சுப்ரமணியன், (தலைவர், தமிழ்ச்சங்கம், மலேசியா)
3. திருமதிபொன்னிவீரப்பன், மலேசியா
4. கௌரவவி. எஸ். இராதாகிருஷ்ணன், கல்விதுணைஅமைச்சர், இலங்கை
5. கௌரவமாவை. சோ. சேனாதிராஜா, இலங்கைநாடாளுமன்றஉறுப்பினர்
6. கௌரவஇரா. சம்பந்தன், இலங்கைநாடாளுமன்றஎதிக்கட்சித்தலைவர்,
7. கௌரவசி. வி. விக்னேஸ்வரன், வடமாகாணசபைமுதல்வர்
8. ஸ்ரீமதன்சன்முகராஜா, நிறுவனர் ரூ தலைவர், டெக்னோமீடியா, கனடா
9. ஸ்ரீகருணாகரன்ராசன்கனடா
10. ஸ்ரீகிருஷ்ணப்பிள்ளைகலாமோகன், இலங்கை
11. ஸ்ரீநாகலிங்கம்வேதநாயகம், இலங்கை
12. பேராசிரியர் சி.இராமமூர்த்தி, பெங்களூரு
13. பெருங்கவிக்கோ வ. மு.சேதுராமன், சென்னை
14. முனைவர்வி. முத்து, தலைவர், புதுவைத் தமிழ்ச்சங்கம், புதுச்சேரி
15. முனைவர்உஷாந்தினிநேஷகந்தன், இலங்கை
16. திருசுப்புசாமிபாலமுருகன், இலங்கை
17. திருசுப்புசாமிசெந்தில்நாதன், இலங்கை
18. திருதே. செந்தில்வேலவர், ஊடகப்பொறுப்பாளர், உலகத்தமிழ்ப்பண்பாட்டுஇயக்கம், இலங்கை
19. திரு இ. இராஜசூரியர், தலைவர், உலகத்தமிழ்ப்பண்பாட்டுஇயக்கம், ஜெர்மனி
20. திருமாவை. சோ. தங்கராஜா, ஆலோசகர், உலகத்தமிழ்ப்பண்பாட்டுஇயக்கம், ஜெர்மனி
21. புலவர் திரு கிறேசியன்யேம்ஸ் அல்ஸ்ரன், நிருவாகச் செயலர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜெர்மனி
22. Association for Educational Development of the Underprivileged, London, UK

## ரவுஹானி பதவியேற்பு





தெஹ்ரோன், ஓக. 5
ஈரானில் கடந்த மே மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற தற்போதைய அதிபர் ரவுஹானி மீண்டும் அதிபராக நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.
ஈரானின் அதிபர் தேர்தல் கடந்த மே மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. இதில் தற்போதைய அதிபர் ஹசன் ரவுஹானி மற்றும் இப்ராகிம் ராய்சி ஆகியோர் போட்டியிட்டனர். ரவுஹானி வெற்றிபெற்றார். இந்த நிலையில் ஈரான் நாட்டின் அதிபராக தொடர்ந்து இரண்டாவது முறையாக அவர் நேற்றுமுன்தினம் பதவியேற்றார். (ம)

## தாய்லாந்தில் கனமழை: 23 பேர் சாவு

பாங்கொக், ஓக. 5
தாய்லாந்தில் பெய்து வரும் கனமழைக்கு இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர்.
தாய்லாந்தில் கடந்த ஒருமாத காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடகிழக்கு தாய்லாந்து மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
இதற்கு முன்னதாக கடந்த 2011ஆம் ஆண்டுஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 900 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)







நியூயோர்க் நகரில் உள்ள மனித மூளை வங்கியின் ஒளிப்படமே இது. இங்கு சுமார் 100 வரையிலான மனித மூளைகள் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

### பொருளாதாரத் தடை விவகாரம்

# அமெரிக்காவுக்கு ரஷ்யா வெளிப்படைக் கண்டனம்

மொஸ்கோ, ஓக. 5
வடகொரியா, ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்துள்ள நிலையில், இந்தத் தடைகளுக்காக அமெரிக்கா நிச்சயம் வருத்தப்படும் என்று ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்தது.
ரஷ்யா, ஈரான் மற்றும் வடகொரியா மீது தொடர் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா சுமத்தி வந்தது.
ரஷ்யா, கடந்த வருடம் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் நேரடியாகத் தலையிட்டது என்றும், ஈரானும், வடகொரியாவும் பன்னாட்டுசட்டதிட்டங்களை மீறி அணுவாயுதச் சோதனைகளை நடத்தின என்றும் குற்றஞ்சாட்டி வந்த அமெரிக்கா இந்த மூன்று நாடுகளின் மீதும் பல பொருளாதாரத் தடைகளை நிரந்தரமாக விதிக்கத் தீர்மானம் மேற்கொண்டது. இது தொடர்பில் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட சட்டத்துக்கு ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார் என்றுவெள்ளைமாளிகைநேற்றுமுன்தினம் அறிவித்தது. இதையடுத்தே தன் மீதான தடைக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்தது.



"அமெரிக்கா எங்கள் மீது முழுமையான வர்த்தகப் போரை தொடங்கி உள்ளது. அது மட்டும் அல்லாமல் எங்கள் நாட்டை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்டுள்ளது. இதன் காரணமாக அமெரிக்காவுடனான எங்களுடைய நட்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது, இருநாடுகளின் உறவை கடுமையாக பாதிக்கும். அது மட்டும் அல்ல, ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு மீது எங்களுக்குள்ள நம்பிக்கையும் முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்கா எங்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் இப்போது மட்டும் அல்ல, இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இதற்காக அமெரிக்கா நிச்சயம் வருத்தப்படும்" என்று ரஷ்ய தலைமை அமைச்சர் திமித்ரி மெட்வதேவ் தெரிவித்தார். (ம)

## சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவி

### துருக்கி ஊடகம் குற்றச்சாட்டு

டமஸ்கஸ், ஓக. 5
சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆயுத உதவிகளைச் செய்து வருகிறது என்று துருக்கிப் பத்திரிகை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.
சிரிய அதிபர் அல் அசாத், ஷியாப் பிரிவைச் சேர்ந்தவர். அவரைப் பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்று தெரிவித்து சன்னிப் பிரிவு கிளர்ச்சிக் குழுக்கள் அங்கு போரிட்டு வருகின்றன. இந்தக் குழுக்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இராணுவ உதவிகளை அளித்துவந்தது. அசாத் தலைமையிலான அரசுக்கு ரஷ்யா உதவி செய்தது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிய இராணுவ உதவிகளை நிறுத்தி உத்தரவிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இந்த உதவிகள் "வீண் வேலை" என்றும் அவர் குறிப்பிட்டார்.
'ட்ரம்ப் வெளியுலகை ஏமாற்றுவதற்காகவே இந்த உத்தரவைப் பிறப்பித்தார். ஆனால் தற்போதும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு இராணுவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன' என்று துருக்கிப் பத்திரிகை ஒன்று நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டது. எனினும் இந்தத் தகவலை துருக்கியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று மறுத்துள்ளது.
'சிரியாவில் உள்ள எந்த ஆயுதக் குழுவுக்கும் நாங்கள் எந்த உதவியும் செய்யவில்லை. சிரியாவில் நடமாடும் அமெரிக்கா வாகனங்களைப் பார்த்துவிட்டு, அவை ஆயுதங்களை வழங்குவதற்காகச் செல்கின்றன என்று முடிவெடுத்தல் தவறு' என்று அமெரிக்கத் தூதரகம் மேலும் குறிப்பிட்டது. (ம)



## ஏமனில் பட்டினிச்சாவை எதிர்கொண்டு 200,000 குழந்தைகள்

ஏமனில் சுமார் 2 லட்சம் குழந்தைகள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று 'சேவ் த சில்றன்' அமைப்பு எச்சரித்துள்ளது.
அரபு நாடுகளில் ஒன்றான ஏமனில் 2 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அங்கு அரசின் கட்டுப்பாட்டில் சில பகுதிகளும், ஹௌதி ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில் சில பகுதிகளும் உள்ளன. அங்கு உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களாகவே கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுமார் 2 லட்சம் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று 'சேவ் த சில்றன்' அமைப்பு எச்சரித்துள்ளது. தொண்டு நிறுவனங்கள், ஐரோப்பிய நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகள் ஏமன் குழந்தைகளைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டும் என்று 'சேவ் த சில்றன்' அமைப்பு கோரிக்கையும் விடுத்துள்ளது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தீயினால் சுட்ட புண்...

முன்னாள் போராளிகளை இந்தச் சமூகம் கையாளும் விதம் குறித்த கேள்வி மீண்டும் எழுந்துள்ளது. படைகளில் இருந்து தப்பியோடியோர் தெற்கில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைப்போன்று, வடக்கிலும் ஆயுதப் பயிற்சி பெற்றோர் குற்றங்களில் ஈடுபடலாம் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியதைத் தொடர்ந்து சமூகத்தில் மீளிணைக்கப்பட்ட போராளிகள் குறித்த விவாதங்கள் எழுந்துள்ளன.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சென்றபோது நல்லூரில் அவரது மெய்ப் பாதுகாவலர்களான பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் கொக்குவிலில் இரு பொலிஸார் துரத்தித்துரத்தி வெட்டப்பட்ட தாக்குதல் என்பவற்றில் முன்னாள் போராளிகளே தொடர்புபட்டிருக்கிறார்கள் என்கிற செய்திகள் வெளிவந்திருந்தன. இந்தப் பின்னணியிலேயே முதலமைச்சர் மேற்கண்ட தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்னாள் நீதியரசர். எனவே அவரது நீதியின் முன்பாக எல்லோரும் சமமானவர்களே. அதில் இன, மத, வர்க்க வேறுபாடுகள் இருக்காது. அந்த அணுகுமுறையோடுதான் அவர் ஆயுதப் பயிற்சி பெற்ற இளைஞர்கள் வடக்கில் குற்றங்களில் ஈடுபடலாம் என்ற ஆருடத்தைக் கூறிவிட்டார். குற்றங்களில் ஈடுபடுபவர்கள் படையினராக இருந்தால் என்ன, போராளிகளாக இருந்தால் என்ன அது தவறு என்பதுதான் அவரது நீதி. அதன்படியே அவர் தனது கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டார்.

ஆனால், இந்த விவகாரம் வெறும் நீதியின் பாற்பட்டது மட்டுமல்ல. அது உணர்வுபூர்வமானது. குறைந்தது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை நேரடியாகவும், அதைப் போன்று மூன்று மடங்கினரை மறைமுகமாகவும், இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்களை ஏதோவொரு வகையிலும் தாக்கக்கூடியது. அதன் வெளிப்பாட்டையே முதலமைச்சருக்கு எதிராகச் சீறிக் கிளம்பும் கருத்துக்கள் வெளிக்காட்டுகின்றன.

முன்னாள் போராளிகளைப் பொறுத்தவரையில் போருக்குப் பின்னரான காலத்தில் தாம் சமூகத்தால் நடத்தப்பட்ட, அணுகப்பட்ட விதம் குறித்துப் பெரும் கவலையும் ஆதங்கமும் இருக்கிறது. போர் நடந்தகொண்டிருந்தபோது சமூகத்தில் மிக மிக உயர்ந்த இடம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் புனிதர்களாகப் போற்றப்பட்டார்கள். தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடப்பட்டார்கள். அதிகார மையங்களாக அண்ணாந்து பார்க்கப்பட்டார்கள். அவர்களோடு தொடர்பைப் பேணுவதே பெருமை, மதிப்பு என்று பலர் எண்ணுமளவுக்கு நிலமை இருந்தது.

போர் முடிந்தபோது என்ன செய்வது என்று தெரியாத குழப்பநிலை அவர்களிடமே இருந்தது. போதாக்குறைக்கு அவர்களுடன் தொடர்பு இருப்பதாகக் காட்டுவதே பெரும் பாவம் என்று கிட்டத்தட்ட ஒட்டுமொத்தச் சமூகமும் நினைக்கும் கையறு நிலையும் இருந்தது. இது, மலையில் இருந்து மடுவுக்குள் வீழ்ந்தவனின் வலியைப் போராளிகளுக்குத் தந்தது. அவர்கள் ஒதுக்கப்பட்டார்கள், புறக்கணிக்கப்பட்டார்கள், வேண்டத்தகாதவர்களாகப் பார்க்கப்பட்டார்கள்.

ஒவ்வொருவரும் தமக்குள்ளே போராளிகள் குறித்த நல்லெண்ணத்தையும் மதிப்பையும் கொண்டிருந்தார்கள் என்றாலும்கூட, தமது இருப்பைப் பாதுகாத்துக்கொள்வதற்காக போராளிகளைப் புறக்கணிப்பதை ஒரு கவசமாகப் போர்த்துக்கொண்டார்கள். நெஞ்சுரம்கொண்ட ஒருசிலர் மட்டுமே அப்போது அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள்.

அத்தகையதொரு நிலையில், பெரும் மாற்றம் எதனையும் ஏற்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபையோ, தமிழ் அரசியல்வாதிகளோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்ற மன வருத்தம் போராளிகள் பலரிடம் இன்றும் இருக்கிறது. சமூகமும் அரசியல்வாதிகளும் தம்மைப்பற்றி அக்கறைப்படவில்லை, தமது வாழ்வாதாரத்துக்காக உதவவில்லை, சமூகத்தில் மீளிணைக்கப்பட்டதாகக்கூறப்பட்டபோதும் சமூகம் தம்மை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற உண்மை அவர்களைச் சுட்டது.

உண்மையும் அதுதான். முன்னாள் போராளிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நன்கு செம்மைப்படுத்தப்பட்ட முழுமையான ஒரு திட்டம் செயற்படுத்தப்படவேயில்லை. முக்கியமாக, தமது இளமைக் காலக் கல்வியையும் வாழ்க்கையையும் இந்த மக்களுக்காகத் தொலைத்த அவர்கள், திரும்பி வந்தபோது அவர்களின் பொருளாதாரம் குறித்துக்கூட எவரும் அக்கறைப்படவில்லை. சிறுகடன்கள் வழங்கப்பட்டதேதவிர, அவர்களுக்கென ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை.

இப்படி தம்மீது அக்கறையற்று இந்தச் சமூகம் இருக்கிறதே என்ற கவலையில் அவர்கள் இருக்கும்போது, அவர்களே எதிர்காலத்தில் குற்றவாளிகளாகக்கூடியவர்கள் என்று முத்திரை குத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அவர்களைத் தனிமைப்படுத்தி நாமே அவர்களுக்குக் குற்றப்பாதைகளை போட்டுவிடக்கூடாது. உதவாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

அதிலும் அரசியல் தலைவர்கள் தமது வார்த்தைகளின் ஆழ அகலம் புரிந்து பேசவேண்டும். வார்த்தைகள் எப்போதும் கூர் வாளை ஒக்கும். அதனைப் பயன்படுத்தும்போது காரண காரியம் அறிந்து பயன்படுத்துவதே தலைவர்களுக்கு அழகு.



# மூதூர் படுகொலைக்கு நீதி எப்போது வழங்கப்படும்?

(மூதூர் படுகொலைகளது 11 ஆண்டுகள் நிறைவுநாள் (04.08.2017) நேற்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.)

மு.ஈழத்தமிழ்மணி

பன்னாட்டின் கவனத்தை ஈர்த்த இரண்டு படுகொலைச் சம்பவங்களுக்குரிய நீதிவிசாரணைகள் இன்றுவரையில் நடத்தப்படாது மகிந்த ஆட்சியாளர்களாலும், இன்றைய நல்லாட்சி அரசினாலும் மறைக்கப்பட்டு மறக்கடிக்கப்படுவதாக தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி இரவு, திருகோணமலை நகரில் காந்தி சதுக்கத்துக்கு அருகில் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட 5 தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும், 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மூதூரில் இயங்கிய 'அக்சன் பெய்ம்' தொண்டு நிறுவனத்தில் பணிக்காகச் சென்றிருந்த பணியாளர்கள் பதினேழு பேர் நிறுவன அலுவலகத்தினுள் வைத்துப் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொடூரச் சம்பவங்களாகும். குறித்த இரண்டு படுகொலைச் சம்பவங்களும் ஈழத்தமிழ் மக்களை மட்டுமன்றி பன்னாட்டு ரீதியிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன.

இந்த இரண்டு படுகொலைச் சம்பவங்களும் திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதப் படையினரால் மாறுபட்ட கோணங்களில் நடத்தப்பட்டவையாகும். இந்த இரண்டு கொடூர சம்பவங்களுக்கான நீதிவிசாரணைகளும் உரியவகையில் முன்னெடுக்கப்படாது, உரிய நீதி வழங்கப்படாது புதைக்கப்பட்டதாகவே தெரிகின்றது. மூதூரில் 'அக்சன் பெய்ம்' பணியாளர்கள் மீதான படுகொலைகள் மற்றும், ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலைகள் என்பவற்றுக்கான பொறுப்பிலிருந்து மகிந்த அரசும் தப்பித்துக் கொண்டது போல, இன்றைய கூட்டாட்சி அரசும் தப்பித்துக் கொள்ளும் முனைப்பிலேயே இருப்பதாகக் கருத முடிகின்றது.

### மூதூரில் படையினரது பரவலான தாக்குதல்கள்

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி மூதூரில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமான போர் முனை திறக்கப்பட்டு சண்டை நடைபெறுகின்றது. முதலாம் இரண்டாம் திகதிகளில் மூதூர் நகர்ப்பகுதி போர் சூனியப் பிரதேசமாக மாறுகின்றது. ஒகஸ்ட் 4 ஆம் திகதி மூதூர்ப் பிரதேசத்தைப் போர் மேகம் சூழ்ந்து கொண்டிருந்தது. மூதூர்க்கிராமங்களில் பாரம்பரியமாக வாழ்ந்தமக்களை அது நிலைகுலையச் செய்தது. மூதூர் கிழக்குப் பகுதியான வெருகல், ஈச்சிலம்பற்று போன்ற கிராமங்கள் போர் நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதியான வெள்ளிக்கிழமை காலையிலிருந்து மூதூர் நகரிலுள்ள பொதுமக்களும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறத் தொடங்கினர். ஏழாயிரம் பொது மக்கள் வெளியேறினர் என்று செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது. மூதூரிலிருந்து கால் நடையாகப் புறப்பட்ட மக்கள், பள்ளி வாசல்களிலும், பாடசாலைகளிலும், பொதுக் கட்டடங்களிலும் தஞ்சமடைந்திருந்தனர். பாடசாலையொன்றில் தஞ்சமடைந்த மக்கள்மீது ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 5 முஸ்லிம் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் பலர் படுகாயமடைந்தனர் என்றும் ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

### 'அக்சன் பெய்ம்' தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் படையினரால் சுட்டுப் படுகொலை

சேனையூர் நாவலடிக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்களில் 50 க்கு மேற்பட்டவர்கள் எறிகணைத் தாக்குதல்களில், 3ஆம் 4 ஆம் திகதிகளில் உயிரிழந்தனர்.

அக்சன்பெய்ம் எனசுருக்கமாக அழைக்கப்படுகின்ற பிரான்ஸ் தொண்டர் நிறுவனப் பணியாளர்களின் படுகொலையும் ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்றுதான் இடம் பெற்றிருந்தது. மூதூர் தளவைத்தியசாலைக் கருகில் உள்ள கட்டடமொன்றில் இயங்கிவந்த பிரான்ஸ் தொண்டர் நிறுவனத்தில் பணியாற்றிவந்த 17 பேரும் அன்றைய போர்ச் சூழ்நிலையில் இடம் பெயர்ந்த மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்குடன்



நிறுவனத்தினரால் பணிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.
பணியாற்றிய 17 தொண்டர்களும் தாம் 'அக்சன் பெய்ம்' நிறுவனத்தில் பணிபுரிகின்றவர்கள் என்பதை அடையாளப்படுத்துவதற்காக அதற்கான குறியீட்டுடன் வடிவமைக்கப்பட்ட ரீ சேர்ட்டுக்களை அந்த நேரத்தில் அணிந்திருந்தனர். இடம் பெயர்ந்த மக்களுக்காக போர்க்காலச்சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் பணி செய்து கொண்டிருக்கையில் அந்த நிறுவனத்துக்குள் புகுந்த படையினர், அவர்களை வெளியே அழைத்து வந்து முற்றத்தில் முகம் குப்புறப்படுக்க வைத்து தலையில் பின்பக்கமாக சுட்டுக் கொன்றனர் என்று பத்திரிகைகளும், சாட்சியங்கள் அளித்திருந்தவர்கள் வழங்கிய தகவல்களும் தெரிவித்திருந்தன. மூடிய அறைக்குள்ளிருந்தே உயிரிழந்த 17 பேரினது சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன என்றும் செய்திகள் தெரிவித்திருந்தன.
குறித்த படுகொலைகள் குறித்து பல்வேறு. பன்னாட்டு அமைப்புக்களும், பன்னாட்டு நிறுவனங்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் ஐக்கியநாடுகள்அகதிகளுக்கானதூதரகம், ஐரோப்பிய ஒன்றியம், உட்பட பல அமைப்புக்கள் இந்தப் படுகொலைகளை மிக வன்மையாகக் கண்டித்திருந்தன. கண்டித்ததோடு மட்டு மன்றி உரிய விசாரணை நடத்தப்பட்டுதகுந்த நீதி வழங்கப்பட வேண்டுமென்று இலங்கை அரசுக்கு அழுத்தங்களும் மேற்கொண்டன.
கடந்த கால் நூற்றாண்டில் இப்படியான மோசமான படுகொலைச் சம்பவமெதுவும் உலகின் வேறெங்கும் நடக்கவில்லை என்று பிரான்ஸ் நாட்டைத் தளமாகக்கொண்டுஇயங்கிவரும்பட்டினிக்கு எதிரான செயற்பாட்டு அமைப்பு தெரிவித்திருந்தது.
இலங்கையில்போர் இடம்பெற்றவேளை மூதூரில் உள்ள 'அக்சன் பெய்ம்' பணியகத்தில் வைத்து அதன் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், அதற்கான நீதி பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளிலிருந்து பன்னாட்டுச் சமூகம் ஒதுங்கிக் கொண்டுள்ளதா? என்று கொல்லப்பட்டவர்களது உறவினர்களால் கடும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.
'அக்சன் பெய்ம்' நிறுவனத்தின் மனிதாபிமான சட்ட ஆலோசகர் போலின் செற்கியூற்றி அளித்துள்ள செவ்வியொன்றில் "பணியாளர்கள் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கபபட வேண்டியது முக்கியமானது. இலங்கையில் எமக்கு உண்மையான அமைதி, நல்லிணக்கம், நீதி. தேவையென்றால், எந்தவொரு விசாரணையும் வெளிப்படையானதாக இருகக வேண்டும். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 'அக்சன் பெய்ம்' வரவேறகிறது" என்றும் கூறியிருந்தார்.

**தொண்டு நிறுவன ஊழியர்கள் படுகொலையில் கொலையாளிகளைப் பாதுகாத்த மகிந்த அரசு**

**படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 17**

பணியாளர்களின் படுகொலை தொடர்பான கொலையாளிகளை அன்று மகிந்த அரசு பாதுகாத்து வந்ததுபோல், தற்போதைய கூட்டாட்சி அரசும் பாதுகாத்து வருகின்றது. இது சம்பந்தமாக முன்னர் அரசைதலைவர் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் ஒழுங்கு விதிகளுக்கு புறம்பானவை, அர்த்தமற்றவை எனக் கூறி. சிவில் சமூக அமைப்பும். பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களுக்கான சட்டத்தரணிகளும் அந்தக் காலகட்டத்தில் விசாரணைகளைப் புறக்கணித்திருந்தனர்.
படுகொலை தொடர்பாக செய்மதி மூலமான சாட்சியங்களை அப்போதைய அரசதலைவர் மகிந்த ராஜபக்ச இடைநிறுத்தியதன் மூலம் ஆணைக்குழுவின் அடிப்படைச் சுதந்திரம் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் சகல சாட்சியங்களையும், ஆதாரங்களையும் விசாரணை செய்யும் வாய்ப்பு இல்லாமையால் விசாரணையை மேலும் முன்னெடுத்தல் என்பது பிரயோசனமற்றதாகி விட்டது. அப்போது சாட்சியங்களைப் பாதுகாக்கின்ற விடயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தடுப்பதற்கும் ஆணைக்குழு அந்த நேரத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கத்தவறிவிட்டது.
'அக்சன் பெய்ம்' நிறுவனம், தனது ஊழியர்களைப் படுகொலைசெய்த இராணுவத்தினர் மீது பன்னாட்டு விசாரணை தேவை என்று கோரியிருந்தது. ஏற்கனவே வழங்கப்பட்ட சாட்சிகள், குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள். என்பவற்றின் அடிப்படையில் அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு பொலிஸ் ஊர்காவல் படையைச்சேர்ந்த ஒருவர் தகவல் வழங்கியிருந்தார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் தான் இந்தப் படுகொலைகளைச் செய்தனர் என்று சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படுகின்ற நிலை உருவான போது, மகிந்த அரசு அதனைப் பெரிதாகப் பொருட்படுத்தவேயில்லை. குறித்த விசாரணை தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது அல்லது தற்போதைய அரச தலைவர் மைத்திரியின் கூட்டாட்சி அரசும் அதனை மறைத்துவிட்டது என்றே கருத முடிகிறது.



**தனது ஊழியர்கள் படுகொலை தொடர்பாக பன்னாட்டு விசாரணையைக் கோரியது தொண்டு நிறுவனம்**

சுயாதீன விசாரணையை 'அக்சம்பெய்ம்' நிறுவனம் அரசிடம் கோரியிருந்தது.

ஆதாரங்கள் யாவும் கைகளில் இருக்கின்றபோது படுகொலைகளுக்கான உண்மைகளையும். குற்றவாளிகளையும் ஏன் நிரூபிக்கமுடியாமல் இருக்கின்றது என்பது பென்னம் பெரிய கேள்வியாகமேலெழுந்துள்ளது. 'அக்சன் பெய்ம்' தொண்டு நிறுவன படுகொலைச் சம்பவம் தொடர்பாக மைத்திரியின் கூட்டாட்சி அரசும்அக்கறைஎடுக்கத்தவறிவிட்டது.
இலங்கை அரசமைப்பு. ஆட்சியாளர்களையும் அவர்களால் செயற்படுத்தப்படும் ஆயுதப்படைகள். துணை ஆயுதக்குழுக்கள். என்பவற்றுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. இதனால் நாட்டில் இடம்பெறுகின்ற படுகொலைச்சம்பவங்கள் மனித உரிமைமீறல்கள். என்பவற்றின் விசாரணையிலிருந்து ஆட்சியாளர்கள், ஆயுதப்படைகள் பாதுகாக்கப்படும் நிலை இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
**இலங்கை அரசமைப்பில் கூறப்பட்டுள்ள 18 அடிப்படை உரிமைகளும் பொது ஒழுங்கு உறுதித் தன்மையை**

> இந்தப் படுகொலை குறித்த விசாரணை 11 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரையில் எதுவித நீதியும் வழங்கப்படாத நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மூதூர் அக்சன் பெய்ம் நிறுவனத் தொண்டர்களின் படுகொலைகள் மீண்டும் விசாரணைக்கு வரவேண்டும். நீதி வழங்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது கூட்டாட்சியில் இடம்பெறுமா?

உருவாக்கும் செயற்பாடுகளின்போது அவை மீறப்பட்டன என்ற காரணத்தைக் காட்டி அரச ஆயுதப்படைகள் இலகுவாகத் தப்பிக்கின்ற சூழலை இந்த நாட்டு அரசுகள் மாறி மாறி உருவாக்கி வந்துள்ளன.
மனித உரிமைகள் பற்றிய அரசமைப்பின் பின்னிணைப்பில் போர் குறித்த 18 உரிமைகளும் மீறப்படலாம் எனவும், கூறப்பட்டிருக்கின்றமை இந்த அதிகாரத்தை ஆயுதப்படைகளுக்கு வழங்க ஏதுவாக அமைந்துள்ளது. இதனாலேயே போர்க்காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற படுகொலைகள், மற்றும் மனிதத்துக்கு அப்பாற்பட்ட முறையிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக் கூறல் என்பவற்றிலிருந்து இலங்கை அரசுகள் நழுவல் போக்கைக் கடைப்பிடித்துப்பாதுகாப்புப்படையினரைப்பாதுகாத்து வருகின்றன. இதுவரையில் 'அக்சம் பெய்ம்' படுகொலை தொடர்பில் எந்தப் பொறுப்புக்கூறலையும்முன்னைய மகிந்த ஆட்சியாளர்களோ. தற்போதைய ஆட்சியாளர்களோமேற்கொள்ளவில்லை.
'அக்சன் பெய்ம்' தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படுகொலை விசாரணைகள் ஆரம்பத்தில் வேகமான விதத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்திருந்த போதிலும் இன்று வரையில் நீதி வழங்கப்படவில்லை. மைத்திரி அரசும் பன்னாட்டுச் சமூகத்திடம் மழுப்பல் பதிலை வழங்கிக் காலம் கடத்துமா? இந்தப் படுகொலை தொடர்பான நீதி வழங்கலில் பன்னாட்டுச் சமூகமும் மௌனித்துள்ள நிலைமையையே காணமுடிகிறது. இந்தப்படுகொலைக்கு மகிந்த அரசே முழுப்பொறுப்புமாகையால் மைத்திரி அரசு 'அக்சன் பெய்ம்' நிறுவனத்தொண்டர்களின் படுகொலை மீதான விசாரணைகளைத் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். இதற்கான அழுத்தத்தை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும். எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மேற்கொள்ள வேண்டும்.
இந்தப்படுகொலைகுறித்தவிசாரணை 11 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரையில் எதுவித நீதியும் வழங்கப்படாத நிலையில் கிடப்பில் [illegible] மூதூர் 'அக்சன் [illegible] நிறுவனத் தொண்டர்களின் படுகொலைகள் மீண்டும் விசாரணைக்கு வரவேண்டும். நீதி வழங்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது நல்லாட்சியில் இடம்பெறுமா? தமிழ் மக்களின் இந்த நியாயமான கோரிக்கைக்கு அரசின் பதில்தான் என்ன?




## சமுர்த்தி முத்திரை மீளாய்வும் ஆர்ப்பாட்டமும்

சாவகச்சேரிபிரதேசசெயலகத்தின் கீழ்வரும் அறுபது கிராமஅலுவலர்கள் பிரிவுகளுக்கும் உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் மீளாய்வுப் பட்டியல் கடந்த 2017. 07.29 ஆம் திகதியன்று கிராம அலுவலர் பிரிவுகளில் வெளியிடப்பட்டன. குறித்த பட்டியலில் புதிதாகப் பலர் இணைக்கப்பட்டும் உள்ளனர். முன்பு முத்திரை பெற்று வந்த பயனாளிகள்பலரதுபெயர்கள்நீக்கப்பட்டிருந்தன. பெயர் நீக்கப்பட்ட பயனாளிகள் பலர்கடந்த 2017.07.31 ஆம்திகதியன்று வரணிப் பிரதேச சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டடத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒவ்வொரு மனிதனுக்கும், தனக்கு உரிய உரிமை விடயத்தில் சட்டதிட்டங்களுக்குஉட்பட்டுஜனநாயகவழியில்போராடுவதற்கு உரிமையுண்டு. இதை எவராலும் மறுத்துரைக்க முடியாது. அதையே அன்றைய ஆர்ப்பாட்டம் உறுதிப்படுத்தியது எனலாம். அதற்கு மதிப்பளிக்கலாம். ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இதுவரை காலமும் நிவாரண முத்திரை பெற்றுவந்த பயனாளிகள், தமது பெயர் நீக்கப்பட்டதற்காகஎப்படிக்கிளர்ந்துஎழுந்தார்களோ, அதைப் போல் கடந்த சுமார் ஏழு வருடங்களாக சமுர்த்தி முத்திரை பெறத்தகுதிபெற்றிருந்தவறுமைக்கோட்டுக்கு உட்பட்ட விதவைகள், தங்கி வாழ்வோர், நோயாளிகளுக்கு ஏன் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று எவராவதுகேள்விஎழுப்பினரா? அல்லது ஒரு ஆர்ப்பாட்டத்தையாவது முன்னெடுத்தார்களா? தாம் சமுர்த்தி நிவாரணம் பெறும்போது, அதைப்பெறத்தகுதியிருந்தும்அதுமறுக்கப்பட்டவர்களுக்காக இத்தகைய போராட்டத்தை அவர்கள் முன்னர் முன்னெடுத்திருந்தால், இன்று இந்த ஆர்ப்பாட்டத்திற்குமிகப்பெரியபெறுமதியும் மதிப்பும் கிட்டியிருக்கும். ஆனால் தமது முத்திரை நிவாரணத்தை நீங்கியவுடன் எப்படி மனம் நோகின்றனரோ, அதைப் போல்சுமார்ஏழுவருடங்களாகஇந்தபுதிய பயனாளிகள்மனம்வேதனைபட்டிருப்பார்கள்என்பதை இவர்கள் உணர்வார்களா?. தலையிடியும்காய்ச்சலும்தனக்குத்தனக்கு வந்தால்தான் அதன்வலி. வேதனை அவரவருக்குப் புரியும். அன்பான உறவுகளே, இனிவரும் காலங்களிலாவது பாதிக்கப்பட்டவரும் சரி பாதிக்கப்படாமல் உதவி பெறும் [illegible] ஏம் சரி. அரச சட்டவரையறை[illegible] உதவிகிடைபாமல் வறு[illegible]டுகின்றவர்களது உண்மை [illegible]யை உரிய அதிகாரிகளுக்குத் [illegible]டுத்துங்கள். அவர்களுக்காக [illegible] கொடுங்கள் அல்லது ஜனநாயக வழியில் போராடுங்கள் அதுவே உங்களுக்கான உண்மையான பொதுநல ஆர்ப்பாட்டமாகும்.

அ[illegible]

# 2016 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக அதிகரிப்பு

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கைத் தகவல்களில் சுட்டிக்காட்டு

கடந்த வருடம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 4.4 வீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ள தகவல் 2016 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி அறிக்கையில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் 4.8 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற தகவல்களும் சுட்டிக்கா ட்டப்பட்டுள்ளது.

மத்திய வங்கி அறிக்கையில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் வெளிப்படுத்தப்படும் புதிய விடயங்கள் குறித்தான தெளிவுபடுத்தல்களை வழங்கும் மாநாடு கொழும்பில் அண்மையில் இடம்பெற்றிருந்த போதே இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துரைத்த இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி யூதிகா இந்திரத்ன,

"அரச துறையின் பெரிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்திட்டங்கள் போலவே தனியார் துறையினரின் முதலீடுகள் காரணமாக இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை நாட்டில் நிலவிய வறட்சி நிலைமைகள் காரணமாக விவசாயத்துறையில் குறைந்தளவு வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது" - என்றார்.

இவைதவிர பல விடயங்கள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த வருடத்தில் விவசாயத்துறை சார்ந்து 4.2 வீத எதிர்மறை வளர்ச்சி காணப்படுகின்றது. நெல் உற்பத்தி 8.3 வீதமாகவும், தேயிலை உற்பத்தி 11 வீதமாகவும், இறப்பர் உற்பத்தி 10.7 வீதமாகவும், தெங்கு உற்பத்தி 1.5 வீதமாகவும் குறைவடைந்தமையே இதற்கான முக்கிய காரணங்களாகச் சொல்லப்படுகிறது.

தவிர, கடந்த வருடத்தில் நாட்டில் நிலவிய வறட்சி காரணமாக மின் உற்பத்தி மற்றும் மசகு எண்ணெய் பாவனை என்பன 104 வீதமாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமைகள் காரணமாக இலங்கை மின்சார சபையானது 13.2 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

> "2016 ஆம் ஆண்டு நாட்டின் ஏற்றுமதி 2.2 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இறக்குமதி 2.5 வீதமாக உயர்வடைந்துள்ளது. தொழிற்றுறை 6.7 வீதமாகவும் சேவைத்துறை 4.2 வீதமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது."

2015 ஆம் ஆண்டு பொற்றோலியக் கூட்டுதாபனமானது 20 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ள மற்றும் 2016 ஆம் ஆண்டு 69.6 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளதான தன்மைகளும் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்கள் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியானது கடந்த வருடத்தில் 3.7 வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2 மில்லியன் சுற்றுலாப்பயணிகள நாட்டுக்குள் வருகை தந்துள்ளதுடன் அதன் மூலம் 18 வீத வருமா [illegible]

# தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரி அசைவுகள்

| ஆண்டு | மாதம் | விலைச் சுட்டெண் | அனைத்துப் பொருள்களும் | | | உணவுப் பொருள் | | | உணவல்லாப் பொருள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பணவீக்கம் | | | பணவீக்கம் | | | பணவீக்கம் | |
| | | | மாதம் மீதான மாத மாற்றம் | வருடம் மீதான வருட மாற்றம் | அசையும் சராசரி (12 மாதம்) | மாதம் மீதான மாத மாற்றம் | வருடம் மீதான வருட மாற்றம் | அசையும் சராசரி (12 மாதம்) | மாதம் மீதான மாத மாற்றம் | வருடம் மீதான வருட மாற்றம் | அசையும் சராசரி (12 மாதம்) |
| 2016 | May | 111.5 | 1.8% | 4.8% | 2.7% | 1.6% | 7.4% | 3.7% | 1.9% | 3.9% | 2.2% |
| | June | 113.2 | 1.5% | 5.5% | 3.0% | 5.0% | 9.8% | 4.2% | 0.1% | 3.8% | 2.5% |
| | July | 113.9 | 0.6% | 5.8% | 3.4% | 2.3% | 11.7% | 5.0% | -0.1% | 3.5% | 2.8% |
| | August | 112.1 | -1.6% | 4.4% | 3.7% | -4.5% | 8.3% | 5.5% | -0.4% | 2.8% | 3.0% |
| | September | 111.8 | -0.3% | 4.2% | 3.9% | -1.6% | 7.5% | 5.9% | 0.4% | 2.9% | 3.2% |
| | October | 112.1 | 0.3% | 4.1% | 4.0% | 0.6% | 6.9% | 6.2% | 0.1% | 2.9% | 3.2% |
| | November | 113.6 | 1.3% | 4.0% | 4.0% | 0.6% | 4.3% | 6.1% | 1.6% | 3.9% | 3.2% |
| | December | 114.7 | 1.0% | 4.5% | 4.0% | 0.8% | 4.1% | 6.1% | 1.0% | 4.5% | 3.1% |
| 2017 | January | 116.1 | 1.2% | 5.5% | 4.3% | 1.6% | 4.5% | 6.4% | 1.1% | 6.0% | 3.5% |
| | February | 116.7 | 0.5% | 6.8% | 4.6% | 1.2% | 7.7% | 6.9% | 0.2% | 6.4% | 3.8% |
| | March | 116.5 | -0.2% | 7.3% | 5.0% | -0.7% | 9.2% | 7.4% | 0.1% | 6.5% | 4.1% |
| | April | 117.1 | 0.5% | 6.9% | 5.3% | 1.7% | 8.6% | 7.5% | 0.1% | 6.3% | 4.5% |
| | May | 118.2 | 0.9% | 6.0% | 5.4% | 2.3% | 9.3% | 7.6% | 0.3% | 4.6% | 4.5% |
| | June | 120.1 | 1.6% | 6.1% | 5.5% | 4.8% | 9.1% | 7.6% | 0.3% | 4.8% | 4.6% |
| | July | 119.4 | -0.6% | 4.8% | 5.4% | -1.7% | 4.8% | 7.0% | -0.2% | 4.7% | 4.7% |

கொழும்புநுகர்வோர் விலைச்சுட்டெண் அலகு மேற்கொண்ட மதிப்பீடுகளின் படி கடந்த ஜூலை மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கம் 4.8 வீதமாக அமைந்துள்ளது. அதேபோன்று கடந்த ஜூன் மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கமானது 6.1 வீதமாகக் காணப்படுகிறது.

உணவுப் பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து கடந்த ஜூன் மாதத்தில் காணப்பட்ட பணவீக்கமானது 9.1 வீதத்திலிருந்து குறைவடைந்து கடந்த ஜூலை மாதத்தில் 4.8 வீதமாகப் பதிவாகியுள்ளது.

உணவுப் பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து இதே காலப்பகுதிக்கான பணிவீக்கமானது 4.8 வீதத்தில் இருந்து கடந்த ஜூலை மாதத்தில் 4.7 வீதமாகப் குறைவடைந்து பதிவாகியுள்ளது. (ஒ)


# வாகன இறக்குமதியில் வீழ்ச்சி

## வரி அதிகரிப்புக் காரணமென சுட்டிக்காட்டு

இலங்கையில் மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த ஜூன் மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகன வகைகள் இதுவரைகாலமும் அண்ணளவாக 39 ஆயிரம் வரை இறக்குமதி செய்யப்பட்டு வந்ததாகவும் இந்த தொகையானது கடந்த மாதத்தில் 13 ஆயிரமாக குறைவடைந்துள்ளதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகூடிய இறக்குமதி வரி மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி என்பனவே இந்த இறக்குமதிக் குறைவுக்கு காரணமெனவும், அண்மைக் காலமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பெரிய பின்னடைவுகளின் விளைவுகளும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)



# பொருளாதார அபிவிருத்திக்கு பன்னாடுகளின் முதலீடு தேவை

## பொருளியல் துறை பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் கருத்து

இலங்கையின் பொருளாதரத்தை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகமான முதலீடு சார் நடவடிக்கைகள் வேண்டப்படுவதாகவும், அவை பன்னாட்டளவிலான முதலீடுகளாக அமைந்திருக்க வேண்டிய தேவை உள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் தனியார் செய்திச் சேவை ஒன்றுக்கு கருத்துரைக்கும் போதே இந்தவிடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், "இலங்கையின் பொருளாதர வளர்ச்சி தொடர்ச்சியாக கீழ்மட்டத்தில் இருந்துவருகிறது. உள்நாட்டு முதலீட்டு வீதத்தில் ஏற்பட்டுள்ள குறைவு மற்றும் உள்நாட்டு சேமிப்பு வீதம் குறைவாக காணப்படுவதே இதற்கான காரணங்களாக அமைந்துள்ளன. இந்த நிலைமைகளை சாதகமான முறையில் எதிர்கொள்வதற்கும் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கும் பன்னாட்டளவிலான நேரடி முதலீடுகள் தேவையாக உள்ளன. தவிர வளர்முக நாடுகளான வியட்நாம், தாய்லாந்து, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கான நேரடி முதலீடு குறைவாகவே காணப்படுகிறது.

போர்க் காலத்தின் பின்பான சுற்றுலாத்துறை அபிவிருத்தி வளர்ந்து வருகின்ற போதும் அந்த வளர்ச்சி போதுமானதாக இல்லை. அதேவேளை வட்டிக்கொடுப்பனவுகள் தொடர்பிலான வருமான வீதங்கள் நூறு வீதத்திலும் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக வரி மூலம் கிடைக்கின்ற வருமானத்தை பெற்றுக்கொண்ட கடனுக்கு வட்டியாக செலுத்துகின்ற நிலையில் அபிவிருத்திக்கான நிதி மூலங்கள் போதுமானதாக இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றகரமானதாக்க வேண்டுமெனில் பன்னாடுகளில் இருந்தான நேரடி முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும்" - என்றார். (ஒ)


CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

4/8/2017
www.cse.lk

| | | |
|---|---|---|
| [illegible] | [illegible]567.43 | 6,571.48 |
| [illegible] | [illegible]784.51 | 3,781.90 |
| [illegible] | [illegible]976,544 | 381,389,600 |
| [illegible] | [illegible]02,560 | 245,495,472 |
| [illegible] | [illegible]638,880 | 358,450,560 |
| [illegible] | [illegible]073,992 | 135,894,128 |
| [illegible] | [illegible]437,676 | 22,939,028 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 75.20 | 967,841 | 73,651,237 |
| சம்பத் வங்கி | SAMP.N | 280.00 | 257,251 | 71,949,992 |
| பிறவுன் கப்பிற்றல் | FLCH.N | 3.80 | 13,591,686 | 53,451,416 |
| செலான் வங்கி | SEYB.N | 96.00 | 426,736 | 40,966,398 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 169.50 | 123,687 | 21,015,515 |
| ரீஜே லங்கா | TJL.N | 40.60 | 373,803 | 15,209,302 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 139.80 | 90,283 | 12,726,908 |
| பீப்பிள் இன்சூரன்ஸ் | PINS.N | 22.50 | 537,664 | 11,890,591 |
| பெஸ் கப்பிற்றல் ஹோல்டிங்ஸ் | CFVF.N | 36.90 | 260,569 | 9,560,899 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 137.50 | 63,550 | 8,722,367 |



சம்பத் வங்கி Right issue 1 for 6 @ Rs.245

பங்குலாபம்

ஒன்னலி ஹோல்டிங்ஸ் - 2.10 சதம்

சேவ்ரோன் லுப்பிரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 221 |
| விலை உழைப்பு | 10.7 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளை | 3.1 |

# அன்பெனும் தாரக மந்திரம்

சேரலாதன்

> மனிதப் பிறவியை எடுப்பதென்பது சாதாரண விடயமல்ல. ஆண்டவன் எம்மைப்படைத்து ஆறாவது அறிவையும் வழங்கியிருக்கிறார். ஆனால் நாமோ மற்றவர்கள் மீது அன்பைச் செலுத்துவதற்கும் பதிலாக வன்மத்தையே பரிசாக வழங்குகின்றோம். மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்துவதில் ஆனந்தம் கொள்கின்றோம். அடுத்தவர் மீது கோபம் கொள்கின்றோம். வசை பாடுகின்றோம். இதுதான் மனிதப் பிறவி எடுத்ததன் பயன்களா?

அன்புக்கு ஈடாக இவ்வுலகில் எதனையும் கூறமுடியாது. உண்மையான அன்பு அடி மனதில் இருந்து உருவாகி வெளியே வரும்போது எமது அகத்தில் மட்டுமல்ல முகத்திலும் தெய்வீக ஒளி வீசிக் கொண்டிருக்கும். இந்த ஒளியால் எம்மைச் சுற்றியிருப்பவர்களும் கவர்ந்திழுக்கப்படுவார்கள். எமது வசமாகி விடுவார்கள். தெய்வப் புலவர் வள்ளுவர், தாம் வகுத்த உலகப்பொது மறையெனப் போற்றப்படும் திருக்குறளில் அன்புக்கு ஓர் அதிகாரத்தை ஒதுக்கியுள்ளார். இதில் காணப்படுகின்ற பத்துக் குறள்களும் அதன்பின் மகத்துவத்தை இயம்பி நிற்கின்றன. மனதில் அன்பு இல்லாதவர்கள் சகலதும் தமக்கு உரியன என்பார்கள். ஆனால் அன்புடையவர்கள் தம்மிடமுள்ள அனைத்தும் பிறர்க்கு உரியன என்று கூறுவார்களென வள்ளுவர் கூறியமை உலக வாழ்வியலின் உண்மைத்தன்மையை எமக்கு உணர்த்துகின்றது.

*'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்*
*அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'*

என்ற அந்தக் குறள் எந்தக் காலத்துக்கும் பொருத்தமான ஒன்றாகும்.

**எங்கும் எதிலும் அன்பு**

ஒருவர் தமது அன்பை எங்கும் எதிலும் காட்டலாம். வீட்டு முற்றத்தில் படர்ந்து காணப்படுகின்ற புல்லின் மீது கூட நாம் எமது அன்பை வெளிப்படுத்தலாம். அதன் மீது நீரைப் பாய்ச்சும் போது அது சிலிர்த்து எழுந்து நிற்கும் காட்சி கூட எமது கண்களுக்கு அழகாகத்தான் தெரிகின்றது. அதைத்தடவிக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எமது மனதில் தோன்றுகின்றது. இது கூட அன்பின் வெளிப்பாடு தான். அழகான மலர்களைக் கண்டதும் எம்மை மறந்து அவற்றை இரசிக்கின்றோம். தடவி மகிழ்கின்றோம். இவை கூட எமது அன்பின் வெளிப்பாடுகள்தான். மரங்கள் கூட எமது அன்பின் எல்லையிலிருந்து தப்பிவிட முடிவ தில்லை. வீட்டு வளவில் நின்று மாங்கனிகளைத் தருகின்ற மாமரமும் தேங்காய் மற்றும் இளநீரைத் தருகின்ற தென்னை மரமும் கூட எமது அன்பு கலந்த பார்வையிலிருந்து தவறுவதில்லை.

ஓர் ஆணும்,பெண்ணும் ஒருவர் மீது மற்றவர் அன்பு கொள்வது இயற்கையின் நியதியாகும். இதைக் காதல் என்று நாகரிகமாகக் குறிப்பிடுகின்றோம். ஆனால் அன்பும் காதலும் ஒரே பொருளையே குறிப்பிடுகின்றன. பிறக்கும் போது தாயின் அன்பும் அரவணைப்பும் எம்மை மெய் மறக்கச் செய்கின்றன. கள்ளம், கபடம் அற்ற உண்மையான அன்பு முதன் முதலாக அன்னையிடம் இருந்து தான் எமக்குக் கிடைக்கின்றது. நாம் முதியவர்களாகி எமது இறுதி ஊர்வலத்தை ஆரம்பிக்கும் வரையில் அன்னை எம்மீது பொழிந்த அன்பு எம்முடன் கூடவே இருக்கும். அதை அழித்து விட எவராலும் முடியாது. தாய்க்குப் பிறகு மனைவியின் அன்பில் திளைத்து மகிழ்கின்றோம். அதிலும் திருமணமான காலத்தின் ஆரம்பங்களில் சிலர் மனைவி சொல்லே மந்திரம் என மயங்கிக் கிடக்கின்றனர். இதை மனைவி மீது காட்டுகின்ற அன்பு எனவும் கொள்ளலாம், மயக்கம் என்றும் கூறலாம். ஆனால் தாய்க்குப் பின் தாரம் என்ற வகையில் எமது இன்ப துன்பங்களில்பங்கு கொள்பவள் மனைவி தான். வாழ்க்கையில் அவ்வப்போது கணவன் மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், ஒருவரையொருவர் நிரந்தரமாகப் பிரிந்து இருப்பதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள். இவர்களது ஆழ்மனதில் புதைந்து கிடக்கின்ற அன்பு ஒருவரின் இறுதிப் பயணத்தின் போது தெரிந்து விடும். மனைவிக்கு அடுத்ததாகப் பிள்ளைகளின் மீதும், பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப் பிள்ளைகள் மீதும் அன்பைச் சொரிகின்றோம். சகோதரர்கள், நெருங்கிய உறவுகள் ஆகியோர் மீதும் அன்பைக் காட்டுவதற்கு நாம் தயங்குவதில்லை. நண்பர்களிடம் நாம் காட்டுகின்ற அன்பு வித்தியாசமானது. உறவினர் அல்லாத ஒருவரையே நாம் நண்பன் என அழைக்கின்றோம். இவர் மதத்தாலும் இனத்தாலும் எம்மிடமிருந்து வேறுபட்டவராகவும் இருக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கின்ற அன்புதான் நண்பன் என்ற பெயரில் எம்மை இணைத்து நிற்கின்றது. நட்புக்கு ஈடாக எதையும் கூறமுடியாது. இதனால்தான் உயிரையும் கொடுப்பான் நண்பன் என்று கூறினார்கள். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.




**அன்புக்கு முதல் இடம்**

கௌதம புத்தர் தமது போதனைகளில் அன்புக்கு முதலிடத்தை வழங்கினார். அன்பினால் ஆகாதது எதுவுமே இல்லையென அவர் போதித்தார். ஞானிகளும்யோகிகளும் கூட அன்பைப் போதித்து வந்தனர். அன்பில்லாத உலகு வறண்ட பாலை நிலத்துக்கு ஒப்பானதென அவர்கள் கூறினர். ஒன்று மறியாத சிறு குழந்தையிடம் நாம் அன்பைக் காட்டும் போது அது சிரித்து மகிழ்க்கின்றது. எம்முடன் ஒட்டிக் கொள்கின்றது. ஆனால்அதே குழந்தையிடம் நாம் கோபத்தைக் காட்டும்போது அழுதுவிடுகின்றது. எம்மை வெறுத்து ஒதுக்கி விடுகின்றது.

நாம் வீட்டில் வளர்க்கின்ற நாய் எம்மைக் கண்டதும் வாலை ஆட்டியவாறு தனது அன்பை வெளிப்படுத்துகின்றது. அந்த வாயில்லாத ஜீவன் கூட அன்பைப் புரிந்து வைத்திருக்கின்றது. அதை வெளிப்படுத்தவும் தெரிந்து வைத்திருக்கின்றது.

மனிதப்பிறவியை எடுப்பதென்பது சாதாரண விடயமல்ல. ஆண்டவன் எம்மைப்படைத்து ஆறாவது அறிவையும் வழங்கியிருக்கிறார். ஆனால் நாமோ மற்றவர்கள் மீது அன்பைச் செலுத்துவதற்கும் பதிலாக வன்மத்தையே பரிசாக வழங்குகின்றோம். மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்துவதில் ஆனந்தம் கொள்கின்றோம். அடுத்தவர் மீது கோபம் கொள்கின்றோம். வசை பாடுகின்றோம். இதுதான் மனிதப் பிறவி எடுத்ததன் பயன்களா?

**ஆகாதது எதுவுமே இல்லை**

அன்பினால் ஆகாதது எதுவுமே இல்லை. நாம் அன்பை வெளிப்படுத்தும் போது உள்ளமும் உடலும் புதுப்பொலிவு பெறுகின்றன. அழகாகக் காட்சியளிக்கின்றன. இதைக் கண்டு மற்றவர்கள் எம்மை விரும்புகின்றனர். அன்போடு அரவணைக்கின்றனர்.

எம்மீது கோபப்படுகின்றவர்கள் மீது பதிலுக்கு நாமும் கோபப்படும் போது மோதல் வெடிக்கின்றது. கொலையில் கூட இது முடியலாம். ஆனால் மற்றவர் கோபப்படும் போது நாம் சில அன்பான வார்த்தைகளைக் கூறும் போது அதில் பயன் கிடைக்காமல் போகாது. கோபப்பட்டவர் மனம்மாறுவதற்கான சந்தர்ப்பமும் ஏற்படும்.

மிருகங்களும் பறவைகளும் கூட அன்பை வெளிப்படுத்துவதில் பின்நிற்பதில்லை. காகங்கள் தமது குஞ்சுகளுக்கு அன்புடன் உணவூட்டுகின்ற காட்சியைப் பார்க்கும் போது மெய் சிலிர்க்கின்றது. பசு தனது கன்றை அன்புடன் நக்கியவாறு பாலூட்டுகின்ற காட்சி அன்புக்கு ஓர் அடையாளமாகக் காணப்படுகின்றது. மிருகங்களும், பறவைகளுக்கும் அன்பை வெளியிட முடியுமென்றால் ஆறறிவு படைத்த மனிதர்கள் அதில் பின்னடைவாகக் காணப்படுவது ஏற்கத் தக்கதல்ல.

அன்பையே நினைப்போம். அன்பையே வெளிப்படுத்துவோம். அன்பாகவே வாழ்வோம். எமது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுக்கும் வரை துயரம் ஒரு போதுமே எமை அண்ட மாட்டாது.

ஆகவே அன்பையே தாரக மந்திரமாகக் கொள்வோம். வாழ்வை இனிமையாகக் கழிப்போம்.



# ஒகஸ்ட் மாத பலன்

## மேடம்
(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

தீவிர உழைப்பும், அதிக முயற்சியும் சேர்ந்து காரியங்களில் ஈடுபடும் மேட ராசியினரே! இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். எதிலும் சற்றுக் கூடுதலாக கவனம் செலுத்துவது நல்லது. திடீர்ச் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்ராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

**கலைத்துறையினருக்கு:** தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சக கலைஞர்களிடம் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். கோபத்தைக் குறைத்து தன்மையாகப் பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.

அரசியல் துறையினர் தேவையற்ற அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்யத் தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

**அஸ்வினி:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், குழப்பமும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம்.

**பரணி:** இந்த மாதம் எவரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். வீண் மனக்கவலை, காரிய தாமதம் உண்டாகலாம் கவனம் தேவை. பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். இலாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவார்கள். மதிப்புக் கூடும். நிலுவைத் தொகை வந்து சேரும். பதவி உயர்வு கிடைக்கலாம்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் நவகிரகத்தில் செவ்வாயை அர்ச்சனை செய்து தீபம் ஏற்றி வணங்குவது வாழ்வில் முன்னேற்றத்தை தரும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 05.08.2017

1100-முதலாம் ஹென்றி பிரிட்டனின் அரசராக முடி சூடினார்.

1860-15ஆம் சாள்ஸ் நோர்வேயின் அரசராக முடி சூடினார்.

1861-அமெரிக்க இராணுவத்தில் சவுக்கடித் தண்டனை இல்லாமல் செய்யப்பட்டது.

1874-அமெரிக்காவைப் பின்பற்றி ஜப்பானிலும் தபால் சேமிப்பு முறைமை தொடங்கப்பட்டது.

1884-சுதந்திரச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் சின் பெட்லோதீவில் நடப்பட்டது.

1940-இரண்டாம் உலகப்போரில் லத்வியாவை சோவியத் யூனியன் இணைத்துக் கொண்டது.

1949-ஈக்வடோரில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 50 வரையான நகர்கள் அழிவடைந்ததுடன் 6ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.



1949-ஈக்வடோரில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 50 வரையான நகர்கள் அழிவடைந்ததுடன் 6ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

1962-தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா, நிறவெறி ஆட்சியாளர்களால் சிறையிலிடப்பட்டார். 1990ஆம் ஆண்டு வரை இவர் விடுவிக்கப்படவில்லை.

1963-அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் ஒப்பமிட்டன.

1965-இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் தொடங்கியது. பாகிஸ்தானியச் சிப்பாய்கள் உள்ளூர் வாசிகள்போன்று உடையணிந்து எல்லைக் கோட்டைக் கடந்தனர்.

2010-கொபியாப்போ சுரங்க விபத்து: இதில் 33 வரையான சிலிநாட்டு சுரங்கத் தொழிலாளர்கள் 2 ஆயிரத்து 300 அடி ஆழமான சுரங்கத்துள் சிக்கிக் கொண்டனர்.

2016-கீரிமலையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு தீர்மானிக்கவில்லையென அமைச்சர் அமரவீர தெரிவிப்பு.

## நாளை
**06.08.2017**
ஞாயிற்றுக்கிழமை
**ஆடி - 21**

திதி: சதுர்த்தசி மு.இ. 11.16 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ. 03.14 வரை
சுபநேரம்: 09.04–10.34 வரை
ராகுகாலம்: 04.34–06.04 வரை

பட்டனத்தடிகள் குருபூஜை

# பத்தி எழுத்து

## குடாநாட்டின் பாதுகாப்பை பொலிஸ் தரப்பினர் உறுதி செய்வார்களா?

குடாநாட்டில் பொலிஸாரின் நடமாட்டங்கள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பொது மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் பொலிஸார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். பொது மக்கள் பாதிக்கப்படும் போது அதனைத் தடுக்க வேண்டியவர்களும் பொலிஸார்தான். ஆனால் இவர்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் பரவலாக எழுந்து நிற்கின்றது.

குறிப்பாகக் குற்றவாளிகளை ஒடுக்க வேண்டிய பொலிஸார் அவர்களுடன் நட்புரிமை கொண்டிருக்கின்றனர் என்றும், கையூட்டுப் பெற்றுக் கொண்டு அவர்களுக்குச் சார்பாக நடந்து கொள்கின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டால் குற்றச் செயல்கள் எவ்வாறு கட்டுக்குள் வரும்?

இந்த நிலையில், யாழ். குடாநாட்டில் அண்மைய நாள்களாக இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் இங்குள்ள மக்களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக மாற்றி விட்டன. வாள்வெட்டுச் சம்பவங்களையும், வேறு குற்றச் செயல்களையும் பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாததொரு நிலைதான் இங்கு காணப்படுகின்றது. நீதிபதி இளஞ்செழியன் மீதான கொலை முயற்சியையும், பொலிஸார் மீதான தாக்குதல் சம்பவங்களையும் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். இந்தச் சம்பவங்கள் தொடர்பான குற்றவாளி களைத் தேடுவதிலும், கைது செய்வதிலும் அவர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய ஆணையாளரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்வதில் தவறொன்றும் இல்லை. அதற்கான உரிமை அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பாவிகள் கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் ஏற்கத் தக்கதல்ல. இந்த விடயத்தில் பொலிஸார் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் பொலிஸார் பாராபட்சமின்றியும், பொறுப்புணர்வுடனும் தமது கடமைகளை ஆற்று வார்களாயின் நாட்டில் குற்றச் செயல்களை இலகுவாகக் கட்டுப்படுத்தி விட முடியும். குற்றவாளி களுடன் உறவுகளைப் பேணுவதையும், கையூட்டுப் பெற்றுக் கொண்டு பாரபட்சமான முறையில் நடந்து கொள்வதையும் அவர்கள் உடனடியாகவே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எப்போதுமே அமைதியை வேண்டி நிற்கின்ற குடாநாட்டு மக்கள் தற்போது இங்கு நிலவி வருகின்ற அசாதாரணமான சூழ்நிலையால் கலங்கிப் போய் நிற்கின்றனர். இதை உடனடியாகப் போக்க வேண்டியது பொலிஸாரின் தலையாய கடமையாகும். ஒரு ஜனநாயக நாட்டில் மக்களின் பாதுகாப்பே முக்கியமானது. மற்றவை எல்லாம் இதற்கு அடுத்த படியாகத்தான் வேண்டப்படுகின்றன. குடாநாட்டுப் பொலிஸார் இதை ஏற்படுத்துவார்களா?

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது அவசியம். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**இடபம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நண்பரின் வழிகாட்டுதல் நன்மை அளிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மிதுனம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தாராள பணச்செலவில் குடும்பத் தேவை நிறைவேறும்.

**கடகம்:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்கள் பேச்சு, செயலில் முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழிலில் உருவாகிற சிரமங்களை சரி செய்வது அவசியம் முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**துலாம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான அளவில் வளர்ச்சி பெறும்.

**விருச்சிகம்:** மற்றவர்களைக் குறை சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக பயணம் செல்வர்.

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழிலில் அதிக உழைப்பினால் இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சுய இலாபத்துக்காக சிலர் உதவ முன்வரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** தாமதமாகிய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த மறைமுகப் போட்டி குறையும். பிள்ளைகளின் செயல் மனதை மகிழ்விக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்ததை விட ஆதாயம் கூடும். சேமிப்பு உயரும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | |
| | | | | | 6 | 8 | | |
| | 1 | 9 | | | 4 | | 2 | |
| 1 | | | 6 | | 2 | 3 | 5 | |
| 6 | | 3 | | 7 | | | | |
| | | | 1 | | | | | 7 |
| 3 | 2 | | | 5 | | 1 | 7 | |
| 7 | | 5 | | 2 | 1 | 9 | | |
| 9 | 4 | 1 | | 6 | 7 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




கிடைக்காத இடங்களில்
அன்பை வெளிக்காட்டாதே
கடைசி வரை அடி வாங்கிக்
கொண்டே இருப்பாய்...!






மனைவி: ராத்திரி முழுவதும் தூங்காம ரயிலில் வந்தீங்க. ஒரு நாள் லீவு போட்டுட்டு வீட்டில தூங்கக் கூடாதா?
கணவன்: அதனாலதான் ஆபிஸ் போறேன். அது கூடப் புரியலையா?

உ
சிவமயம்

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 . 01 . 1944

உதிர்வு 05 . 07 . 2017



ஸ்ரீரங்கநாதன் இயற்கையின் நியதியில்
இயல்பு நண்ண இறைகழல் இணைந்தார்
உயர்ந்த வாழ்வின் உன்னத நெறியைத்
தழுவி நாம் வாழ்ந்த நன்மைசேர் பண்பை
அறியத்தந்து புவியினில் வாழ
வழியினைக் காட்டிய அமரரைத் தொழுவோம்

ஏவிளம்பி ஆண்டு ஆனித்திங்கள் 21 ஆம் நாள் (05.07.2017)
புதன்கிழமை வளர்பிறைத் துவாதசியில் வீடுறைந்த

**இராசையா ஸ்ரீரங்கநாதன்**

அவர்களின் வீடுறை வழிபாடு இன்று (05.08.2017) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று மதிய வேளை உபசரணை நிகழும் அத்தருணம் தாங்களும் சுற்றம் சூழப் பங்குபற்றி வழிபாட்டிற் சாந்திபெற உதவும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பபை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

23, பிளெச்சஸ் ஒழுங்கை,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

No. 23, Fletchers Land,
Chundukuli, Jaffna.
குடும்பத்தினர்.
078 69[illegible] 1955


# சகாரா பாலைவனம்



உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் சகாரா. இது ஆபிரிக்க கண்டத்தின் வட பகுதியில் உள்ளது. இதன் பரப்பு ஆபிரிக்காகக் கண்டத்தின் மொத்தப் பரப்பில் நான்கில் ஒரு பகுதிக்கும் அதிகமாகும். சகாரா முழுவதுமே மணற் பரப்பாக இல்லை. இங்கு மிக உயர்ந்த மலைகளும் பாறைகள் நிறைந்த பீட பூமிகளும் உள்ளன. பெரும்பாலான இடங்களில் புல்லும் புதர்களும் வளர்ந்திருக்கின்றன. பகலில் இங்கு வெப்பம் அதிகம். 70° வரை வெப்பநிலை உயரும். இரவில் மிகக் குளிராக இருக்கும். பனி உறையும் நிலைக்குக் கீழாக வெப்ப நிலை குறைந்து விடும். இவ்வாறு இங்கு அதிக வெப்பமும் அதிக குளிரும் மாறி மாறி நிலவுவதால் பாறைகள் வெடித்து சிதறி மணலாகி விடுகின்றன. காற்றினால் இம் மணல் அடித்துச் செல்லப்பட்டு அலை அலையாகப் பல பகுதிகளில் படிந்து விடுகிறது.

இங்கு மழை மிகக் குறைவு. இரவில் பனி பெய்யும். பகலில் மணல் புயலடிக்கும். சில இடங்களில் நீர் ஊற்றுக்கள் வெளிப்பட்டு தண்ணீர் தேங்கி நிற்பதுண்டு. இந்த இடங்களில் பேரீச்ச மரங்களும், பிற செடி கொடி வகைகளும் வளர்ந்து பசுமையாக இருக்கும். இப்படிப்பட்ட இடத்தை பாலைவனச் சோலை (Oasis) என்று அழைப்பார்கள். இங்குள்ள மக்கள் மணல் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். பேரீச்சம்பழம் இவர்களின் முக்கிய உணவு. இங்கு நாடோடிகளாக வாழ்வோரும் சிலர் உள்ளனர். இவர்கள் ஆடுகளை வளர்க்கிறார்கள். இங்குள்ளோர் பொருட்களைச் சுமந்து செல்ல ஒட்டகத்தையே பயன்படுத்துகிறார்கள். அதனால் ஒட்டகத்துக்கு 'பாலைவனத்துக் கப்பல்' என்று பெயர். தற்பொழுது சில இடங்களுக்கு பேருந்து வண்டிகள் பயன்பாட்டில் வந்துள்ளன.

# யார் குற்றவாளி?



ஒரு நாள் கடை வீதியில் மீன் வியாபாரியும் எண்ணெய் வியாரியும் பணப்பிரச்சினை தொடர்பாக வாக்கு வாதம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியால் வந்த வழிப்போக்கன் "சண்டை போட்டுக் கொள்ளதீர்கள். நீங்கள் இருவரும் பீர்பாலிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குவார்" என்றான். வழிப் போக்கன் சொன்ன படி இருவரும் பீர்பாலிடம் சென்றனர். பீர்பாலின் காலில் விழுந்து வணங்கிய எண்ணெய் வியாபாரி "ஐயா என் பணத்தை எடுத்துக் கொண்டு இவர் தர மாட்டேன் என்கிறார். நீங்கள் தான் வாங்கித்தரவேண்டும்" என்றான். மீன் வியாபாரியோ " ஐயா எண்ணெய்க் காரன் சொல்வதை நம்பாதீர்கள். பணம் என்னுடையது" என்றான். பீர்பால் " என்ன நடந்தது என்பதை முழுமையாகச்சொல்லுங்கள்" என்றார். மீன்வியாபாரி "ஐயா, இவன் எண்ணெய் வேண்டுமா? என்று கேட்டு என் கடைக்கு வந்தான். நான் எண்ணெய் வாங்குவதற்காக பாத்திரம் எடுக்க கடைக்குள் போனேன். அதற்குள் என் பணத்தை இவன் எடுப்பதைப் பார்த்தேன். உடனே பாய்ந்து வந்து அவனிடமிருந்த பணத்தைப் பறித்தேன். ஆனால் இவனோ அந்தப் பணம் தன்னுடையது என்று இங்கு நாடகமாடுகிறான்" என்றான்.

"ஐயா, இவன் சொல்வதை நம்பாதீர்கள். இவன்தான் நாடகமாடுகிறான்" என்றான் எண்ணெய் வியாபாரி. இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வழியை யோசித்தார் பீர்பால். சிறிது நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஒருவீரனை அழைத்துபாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். பீர்பாலின் அருகே வீரன் தண்ணீர்ப் பாத்திரத்தைக் கொண்டு வந்து வைத்தான். மீன்காரனின் பணப்பையில் இருந்த நாணயங்களைத் தண்ணீரில்கொட்டும்படி பீர்பால் கட்டளையிட்டார். பணப்பையில் இருந்த நாணயங்கள் தண்ணீருக்குள் கொட்டப்பட்டன. உடனே பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் மேற்பரப்பில் எண்ணெய் மிதந்தது. உடனே பீர்பால் "பணப்பை எண்ணெய்க் காரருக்குச் சொந்தமானது. நீ தான் திருடன்" என்று மீன் வியாபாரியைப் பார்த்து சொன்னார் பீர்பால். எண்ணெய் வியாபாரி நன்றியுடன் பீர்பாலை வணங்கினான்.

பீர்பாலிடம் மீன்வியாபாரி மன்னிப்புக் கேட்டான். பீர்பால் அவனைப் பார்த்து "எவருடைய பணத்துக்கும் ஆசைப்படாதே! உண்மை பேசி. உத்தமனாய் வாழ்" என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.

## இரு படங்களுக்கும் இடையே ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்



## I, II வட்டங்களுக்குள் இருக்கும் எழுத்துகளைக்கொண்டு சொற்கள் ஆக்குவோம்

I

க் ப் ல கு பு மோ று ங் டு த வ் டை ட் மா உ ம் க

ஐந்து சிற்றூண்டிகள்

..........................
..........................
..........................
..........................
..........................


II

தி க லு வா ல் ழ ரை மே டு ங் த ரி ட் வு அ த சை மா

ஐந்து தளபாடங்கள்

..........................
..........................
..........................
..........................
..........................

## பொருத்தமான குறியீடுகளை இணைப்போம்



- வீதிக்கடவை
- ஒளிச் சமிக்ஞை
- ஒலி எழுப்பத்தடை
- மின்சார சபை
- தொலைபேசி பாவிப்பது தடை
- பேருந்து தரிப்பிடம்
- நிறுத்துக
- வைத்தியசாலை

## உலக...

இன்றைய தினம் 10 அமர்வுகள் நடைபெறவுள்ளன.
காலை 9.30 மணிக்கு, ஈழநல்லூர் பாலமுருகனின் மங்கள இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். பின்லாந்தைச் சேர்ந்த திருமதி கஸ்தூரி மாசிலனின் பரதநாட்டியம், தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெறும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஜேர்மன் கிளைத் தலைவர் இ.இராஜசூரியர் வரவேற்புரை நிகழ்த்துவார். கல்வி இராஜாங்க அமைச்சர் எஸ்.இராதாகிருஸ்ணன் மாநாட்டை தொடக்கி வைப்பார்.
13ஆவது மாநாட்டுத் தலைவர் முனைவர் பாஞ். இராமலிங்கம் தலைமையுரையையும், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளைத் தலைவர் வி.சு.துரைராஜா நோக்க வுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுபதினி றமேஸ் இணைப்பாளர் உரையையும் நிகழ்த்துவர்.
முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரத்னம் விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே; நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
கனடாவைச் சேர்ந்த மதன் சண்முகராஜா, கல்வி நிதியுதவி வழங்கவுள்ளார். இயக்க அறிக்கையை, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஜெர்மனிக் கிளையின் செயலாளர் துரை.கணேசலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.
சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், மாநாட்டு மலர் வெளியீட்டுச் சிறப்புரையை நிகழ்த்துவார்.
மலேசியத் தலைமை அமைச்சர் அலுவலகத் துணை அமைச்சர் மதிப்புறு எஸ்.கே.தேவமணி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இணக்க விருதுகள் வழங்கிச் சிறப்புரையாற்றுவார். சென்னை தமிழ்ப் பணி இதழின் ஆசிரியர் தமிழ்மாமணி சே.திருவள்ளுவர் வாழ்த்துரை வழங்கவுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் தி.வேல்நம்பி நன்றியுரை நிகழ்த்துவார்.
இதன் பின்னர் பத்துத் தலைப்புகளில் பத்து அமர்வுகளும் நடைபெறவுள்ளன. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து இந்த மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன. (உ-5-50)

## மைத்திரி...

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தொடர்ந்தும் இணைந்து செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை துணிச்சலான நபர் என்று பாராட்டியதுடன் தமிழ் மக்கள் சார்பில் வாழ்த்தும் தெரிவித்தார்.
ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பிரேரணை மீதான சிறப்பு அமர்வு நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
ரணில் விக்கிரமசிங்க நான்காவது தடவையாக தலைமை அமைச்சராகப் பதவி வகிப்பதுடன், 40 வருடங்களாகத் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். 1977ஆம் ஆண்டில் நாம் இருவரும் தெரிவாகியிருந்தாலும் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அங்கம் வகிப்பதற்குரிய வாய்ப்பு ரணிலுக்குக் கிட்டியது. 1983ஆம் ஆண்டு நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க நேரிட்டது.
ரணிலை இலகுவில் குழப்பமடையச் செய்யமுடியாது. துணிச்சலான நபரவர். பரந்துபட்ட அறிவும் இருக்கின்றது. எதிராளிகளைத் துணிச்சலுடன் கையாள்வார். நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதித்துச் செயற்படும் இவருக்கு உலக நாடுகளிலும் வரவேற்பிருக்கின்றது.
2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக நியமிக்கும் முடிவையும் எடுத்து நாட்டுக்காக விட்டுக்கொடுத்தார். இப்படி இவரின் சிறப்பியல்புகளைக் கூறிக் கொண்டே போகலாம் என்றார்.
(உ-5)

வேலையாள்கள் தேவை

- பண வசூலிப்பாளர்
- பொதி ஏற்றி இறக்குபவர்
- சாரதி (AD)
- களஞ்சிய காப்பாளர்

தொடர்பு-
021 224 2570, 077 350 8952

## பொலிஸாரை...

போக்குவாத குழு அல்லது இளைஞர் குழு தங்களது சமூகத் தேவைக்காக சில பிழைகளைச் செய்வதற்கு உந்தப்படலாம். அதன் அர்த்தம் விடுதலைப் புலிகள் எனப்படாது"
இவ்வாறு இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.
பௌத்த மதத் தலைவர்களான மல்வத்துப் பீடம் மற்றும் அஸ்கிரியப்பீட மகாநாயகர்களை சந்திப்பதற்காக இராணுவத் தளபதி நேற்று கண்டிக்குப் பயணம் மேற்கொண்டார்.
மகாநாயக்கர்களை சந்தித்து கலந்துரையாடி ஆசி பெற்றுக்கொண்டார். அங்கிருந்து திரும்பிய இராணுவத் தளபதி செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டார்.
யாழ்ப்பாணம், கொக்குவிலில் இடம்பெற்ற பொலிஸார் மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, விடுதலைப் புலிகள் முழுமையாக அழிக்கப்பட்டதாகக் கூறினாலும், அதன் விதைகள் உயிருடனே-இருப்பதாகவும், இந்த மோதல்களைப் போன்றே புலிகளின் ஆரம்ப கால சூழ்நிலை இருந்ததாகவும் கூறியிருந்தார்.
இந்தக் கூற்றுத் தொடர்பில் செய்தியாளர்கள் இராணுவத் தளபதியிடம் கேள்வி எழுப்பினர்.
"தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு என்று கூறுவதற்கு நான் விரும்புவதில்லை. கடும்போக்குவாதக் குழு அல்லது இளைஞர் குழு தங்களது சமூகத் தேவைக்காக சில பிழைகளைச் செய்வதற்கு உந்தப்படலாம். அதன் அர்த்தம் விடுதலைப் புலிகள் எனப்படாது. விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை என்று நான் கூறவரவில்லை. ஆனால் அதன் அர்த்தம் முழுமையாக தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல. எனினும் இப்படிப்பட்ட அமைப்புக்களை எதிர்கொள்ள முப்படைக ளும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தயாராகவே இருக்கின்றோம்.
மது அருந்தும் இடத்தில் வாள் ஒன்றை வைத்துக்கொண்டு மது அருந்த முடியும் என்றால் வடக்குக்கும் சரி, கிழக்குக்கும் சரி அதற் கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மது அருந்துவதற்கு வேறொரு சட்டமும், மது அருந்தும்போது வாளை வைத்திருப்பதற்கு இன்னுமொரு சட்டமும் வித்தியாசமாகும்.
வாள் வைத்துக்கொண்டு வேறொரு வேலைக்குச் சென்றால் அதற்கு வோறொரு சட்டம். எனவே சட்டத்தை இந்த நாட்டில் சரியாக நடைமுறைப்படுத்தினால் மக்கள் ஒழுக்கத்தை கடைபிடித்தால் இந்த நிலை குறித்து என்னிடம் கேள்வி எழுப்பமாட்டீர்கள்" என்று ராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார். (வ-5)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**வி.பிரபாகரன்** இன் பாசமிகு தயார்
**திருமதி தவமணிதேவி விசுவலிங்கம்**
அவர்கள் 02.08.2017 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலை சமூகம்**
**யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**சரவணமுத்து சுப்பிரமணியம்**
(தருமு)
(ஓய்வு நிலை அஞ்சலர் - கோப்பாய்)
**அன்னைமடியில்** 13.12.1933
**இறைவனடியில்** 07.07.2017

வஞ்சனை இல்லா உள்ளம் யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந் தந்த ஞானமே பாசக்கயிறு வீசிப்பறித்துச் சென்றதேனோ ?
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாம் ஆற கடமை முடித்ததுவோ
காலைப்பொழுதில் எம்மைக்கலங்க வைத்த மாயமென்ன ?
விழி கசிந்து அங்கே வேதனையில் தவிக்கிறோமே எங்கள் ஞானமே எமைவிட்டு
ஏன் பிரிந்தீர்? காலன் அழைத்ததேனோ யாவும் கனவாகிப் போனதுவே...

எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்து 07.07.2017 வெள்ளிக்கிழமை எம்மைவிட்டுப்பிரிந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.08.2017) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் மறைவுச்செய்தி அறிந்து நேரடியாகவும் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மகிழடி வீதி, கோப்பாய் வடக்கு. 077 4533 608 **குடும்பத்தினர்.**

### 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**லோகேஸ்வரன் தயாவதி (மாலாக்கா)**

கடந்த 06.07.2017 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் "நவரசநாயகி" அமரர் லோகேஸ்வரன் தயாவதி (மாலாக்கா) அவர்களின் 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி கிரியையும் நாளை 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நேரில் அழைக்க சந்தர்ப்பம் கிடைக்காமைக்காக மனம் வருந்துவதுடன் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை **குடும்பத்தினர்.**

### 31 ஆம் நாள் நீங்கா நினைவஞ்சலி



மலர்வு 29 . 03 . 1975
உதிர்வு 05 . 07 . 2017

**அமரர் விக்னேஸ்வரமூர்த்தி குகரூபன்**
(சின்னத் தாளையடி - பளை)

**அப்பா !**
விடியாத இரவுகளில் உங்கள் ஒளிமுகம் தேடுகின்றோம்
கோடி கொடுத்தாயினும் மீளப் பெறமுடியுமா எம் அப்பாவை !
சாகும் வயதில்லையே உங்களுக்கு - அப்பா
வாழும் வழி தெரியவில்லை எங்களுக்கு அப்பா
உங்கள் பெயர் சிறக்க நாம் வாழ்வோம் இம் மாநிலத்தே !
துயரில் பங்கெடுத்த அன்புள்ளங்கள் அனைவர்க்கும்
என்றும் எம் நன்றிகள்.... !
ஓம் சாந்தி

உசன், மிருசுவில்.
நீங்கா நினைவுடன்......
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**திருமதி சிவபாக்கியம் செல்வரத்தினம்**



துறைமுகம் மாதகலைப் பிறப்பிட மாகவும், கோகுலவீதி, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் செல்வரத்தினம் சிவபாக்கியம் நேற்று (2017.08.04) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்புப்புதல்வி யும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் பரமேஸ்வரிஅம்மா, சிவராசா, தேவாமிர்தம் காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் ஜெயராணிஅம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, செல்லத்துரை மற்றும் செல்வநாயகி காலஞ்சென்ற விஜயபால சிங்கம் மற்றும் சந்திரமலர், லட்சுமி காந்தன், சுமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகுமைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2017.08.06) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
குமரன் (பேறாமகன்)

**PSP**
**Rent a Car**

Premio, Axio, Nissan, Alto, daweou, Indica கார்கள் நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.
- 0773777502

**பணிப்பெண்தேவை**

வயோதிபப்பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு.0752979497

## யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்
## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம், கோயம்புத்தூர் காலைக்கதிரவன் லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும் மேற்படி முகாமில் குழந்தைப்பேறற்ற தம்பதியினர் குழந்தையை பெற்றுக்கொள்வதற்கான இலவச பரிசோதனைகள், ஆரம்ப சிகிச்சை, ஆலோசனைகளும் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சனைகளுக்கான பரிசோதனைகள், ஆலோசனைகளும் வழங்கப்படும்.

| | |
|---|---|
| திகதி :- 05.08.2017<br>சனிக்கிழமை<br>இடம் :- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.<br>நேரம் :- 09 am - 03 pm | திகதி :- 06.08.2017<br>ஞயிற்றுக்கிழமை<br>இடம் :- Loyola's திருமணமண்டபம் சேன்பற்றிக் வீதி, யாழ்ப்பாணம்.<br>நேரம் :- 09 am - 03 pm |


குழந்தை பேற்றோருக்கான மருத்துவ நிபுணர்கள் :-
** Dr. Vasanti Nitinlad*
** Dr. Lad Nitin Laxmikant*

கண் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு மருத்துவ நிபுணர் :-
** Dr. Sarviya Divyagnan Bharatkumar.*

பயன்பெற விரும்பும் அனைத்து அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்பு கொள்ள *Tel No:-* 0770367136 / 0773657062

லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்
## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை



பிறப்பு 1932.05.15
இறப்பு 2017.08.03

கரம்பைக்குறிஞ்சி மேற்கு, வரணியைப் பிறப்பிடமாகவும், இடைக்குறிச்சி மேற்கு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (03.08.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம் வேலும் மயிலும் மற்றும் தனபால சிங்கம் (கனடா), தவமணி, வள்ளியம்மை (சித்திரா - கனடா), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி (பிரான்ஸ்) காலஞ்சென்ற தெய்வானை மற்றும் யோகேஸ்வரி (கனடா), சுதாசினி (பிரான்ஸ்), கிருஸ்ணகோபால், வேலானந்தன் (துயா - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(06.08.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் துன்னாலை கரவெட்டி இந்திரம்மன் கோயிலடியில் உள்ள எமது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தறளப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
குடும்பத்தினர்.
கிருஸ்ணகோபால்
இந்திரம்மன் கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி.
077 168 5559

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 588 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 04.08.2017
வெற்றி இலக்கங்கள்
16 29 49 64 M 04 19 33 36
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 31,734,975/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கொடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 171
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 04.08.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 96,816,400/-
Z 33 37 40 59 56 66 74 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 04.08.2017 | 2167 | சிவப்பு |

கன்னி
வெற்றி இலக்கங்கள்
06 48 55 59
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ- 2, 622, 892/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
08 18 42 60
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 25,000ம் வெல்ல முடியும்
06.08.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**சம்பந்தன்...**
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணிக்கு இடம்பெற இருக்கிறது. இந்தச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையே கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதற்கு அமைவாக இன்றைய தினம் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் இணைந்து இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது.
(வ-101)

## அல்வாய் வேவிலந்தை
## ஸ்ரீ முத்துமாரிஅம்மன் தேவஸ்தானம்




### தேர்த்திருவிழா உற்சவம்
**06.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்**
### தீர்த்தோற்சவம்
**07.08.2017 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரத்தீர்த்தம் நடைபெறும்.**

அம்பாளின் பரிவார மூர்த்திகள் சகிதம் தேருலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பாள். அடியார்கள் சமுத்திரத்தீர்த்தத்திலும் பங்கு பற்றி அம்பாளின் பரிபூரண கடாட்சத்தை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். பூஜை பொருட்களை உரிய நேரத்தில் ஆலயத்திற்கு கொண்டு வந்து தரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

**பரிபாலனசபையினர் அல்வாய் வேவிலந்தை**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

## குருத்துவ அருட்பொழிவு பெறும் குருக்களை வாழ்த்துகிறோம்



அருட்சகோதரன்
**P.விக்டர் சந்திரசேகர்**



அருட்சகோதரன்
**P.ஜோன்விஜயதாசன்**

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை, புனித பவுல் ஆலயம், முறிகண்டியில் 05.08.2017 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர் அருட்திரு. தேவசகாயம் தேவநேசன் அவர்களினால் குருக்களாக திருநிலைப் படுத்தப்படுகின்ற அன்பு குருக்களை வாழ்த்துகின்றோம். அவர்களின் இறைப்பணி வளர்ந்திட ஆசிக்கின்றோம்.

**குருமார் ஒன்றியம்**
**அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை,**
**ஆசிய இல்லம், மருதனார்மடம், யாழ்ப்பாணம்.**

## நியமன...

த்தாக கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பி வைத்திருந்தார்.

தமிழ் அரசுக் கட்சி தன்னிச்சையாக நடந்து கொள்கிறது என்றும் அந்தக் கடிதத்தில் சாடியிருந்தார். அதற்குப் பதிலளித்து ஒரு கடிதத்தை எழுதியுள்ளார் மாவை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி காத்துவருகின்ற பொறுமை, தலைமையின் ஜனநாயகப் பண்புகள், பொறுப்புக்கள் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் இடித்துரைத்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது"

**மதிக்கின்றோம்**

நாமோ இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியோ, சித்தார்த்தனும் புளொட்டும் எமக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் மதிக்காமலில்லை. வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்பு நடைபெற்ற கலந்துரையாடல்களின் இறுதியில் நியமன ஆசனப் பகிர்வு தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டது. அதில் ஒரு ஆசனத்தை நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்துக்கு வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. அதற்குப் புளொட்டின் ஒத்துழைப்பு உதவியாகவிருந்தது.

இரண்டாவது ஆசனத்துக்கு வீ.ஆனந்தசங்கரியின் பெயர் முன்வைக்கப்பட்டபோது அது பற்றிய உடன்பாடு எட்டப்படாத நிலையில் ந.சிறிகாந்தாவின் ஆலோசனையின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட பெண் வேட்பாளர் திருமதி மேரி கமலா குணசீலனை சுழற்சி முறையில் முதலாவதாக நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அவரது சமூகப் பின்புலத்தில் மாகாணசபை நிதியைப் பயன்படுத்த அவகாசம் தரவேண்டும் என்பதற்காக ஆறு மாதம் வரை உறுப்புரிமை நீடிக்கப்பட்டது. அதற்கு எல்லோரும் இணங்கியிருந்தனர்.

**புளொட் கோரிக்கை வைக்கவில்லை**

ஈபிஆர்எல்எவ் சார்பில் போட்டியிட்ட, வடக்கில் மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பீ.நடராஜ் என்பவர் அடுத்து நியமிக்கப்பட்டார். தனக்கு ஒதுக்கப்பட்ட மாகாண சபை நிதியை பயன்படுத்தி முடிக்காத நிலையில் மேலும் மூன்று மாதமேனும் உறுப்பினராயிருக்கும் அவகாசம் தரும்படி அவர் கோரினார். அதனால் அவருக்கும் 3 மாதங்கள் வழங்கப்பட்டது.

அடுத்து ரெலோவுக்கு ஒரு வருடம் வழங்குவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவாறு வழங்கப்பட்டது. அந்தக் கால அவகாசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வ.கமலேஸ்வரனை நியமிக்கத் தீர்மானம் இருந்தபொழுது நாடாளுமன்றத் தேர்தலில், மாகாணசபை உறுப்பினராக இருந்த சிவமோகன் வெற்றி பெற்றதால் வ.கமலேஸ்வரன் மாகாணசபைக்குத் தெரிவாகிவிட்டார். நாம் அவரை சுழற்சி முறையில் நியமிக்கத் தேவையிருக்கவில்லை.

அந்த இடத்திற்கு மன்னார் மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட சிவகரனை நியமிக்க எமது கட்சி நடவடிக்கை எடுத்த பொழுதும் ஏற்கனவே தீர்மானித்தது போல ரெலோவின் மயூரனுக்கே நியமனம் வழங்கப்பட்டது. இறுதி நியமனத்தில் முன்பே தீர்மானித்தவாறு சிவகரன் நியமிக்கப்பட விருந்தபோதும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை காரணமாக ஆர்.ஜெயசேகரனுக்கு அது வழங்கப்பட்டது. அப்பொழுதும் புளொட் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை.

**உண்மை நிலை இதுதான்**

இறுதியாக நியமிக்கப்படும் உறுப்பினருக்கு ஒன்றரை ஆண்டுகாலம் கொடுப்பது என்று ஏற்கனவே எடுத்த தீர்மானத்தின்படிதான் தமிழ் அரசுக் கட்சிக்கு உரித்தான சிவகரன் இடத்திற்கு ஆர்.ஜெயசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நீண்ட காலம் தமிழ் அரசுக் கட்சிக்காரராக இருந்தவர். வர்த்தக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாணசபைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தபடியாலும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இறுதி ஒன்றரை வருட காலத்துக்கு மன்னார் மாவட்டத்தின் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளரை நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டதேயன்றி நாமறிந்த வரையில் ஐந்தாவது வருடம் புளொட் அமைப்புக்கு வழங்கப்படுவதாக முடிவெடுத்ததாகத் தெரியவில்லை. இதுவே உண்மை நிலையாகும்.

**ஜெயசேகரன் ஈபிஆர்எல்எவ் ஆள் அல்லர்**

ரெலோ சார்பில் நியமிக்கப்பட்ட மயூரனின் பதவிக்காலம் ஜூலை 1ஆம் திகதி நிறைவு பெறுவதாக இருந்தபோதும் அவர் ஜூலை மாதமும் உறுப்பினராக செயற்பட அவைத் தலைவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆசனப் பங்கீட்டில் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு ஆசனம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையிலேயே யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் ஆர்.ஜெயசேகரனின் பெயர் முன்மொழியப்பட்டது.

ஜெயசேகரனுடைய குடும்பம் ஒரு பாரம்பரியம் வாய்ந்த தமிழ் அரசுக் கட்சிக் குடும்பமாகும். அவரைத் தேர்தலில் நிறுத்துகையில் அவர் ஈபிஆர்எல்எவ் கட்சியின் உறுப்பினராக இருக்கவில்லை என்பதை அந்தக் கட்சியினரே ஒப்புக்கொள்வர். அந்தக் கட்சிக்கு இரண்டாவது ஆசனம் வழங்கப்படுகின்றது என்ற கருத்தப் பொருத்தமற்றது.

தேர்தலில் இவ்வாறான நிலை எழுவது சாதரணமாகக் காணப்படுகின்றது. தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் பா.கஜதீபன், த.சித்தார்தனுடன் உடன்பட்டவாறு பொதுவாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

**வலிந்து குற்றம் சொல்லலாமா ?**

முல்லைத்தீவில் வீ.கனகசுந்தரசாமி தமிழ் அரசுக்கட்சியைச்சார்ந்தவராயினும் அவரை ரெலோ தமது வேட்பாளராக நியமித்தது. அவர் மறைந்த பொழுது ரெலோவின் தலைமை அடுத்து தங்கள் சார்பு வேட்பாளருக்கே இடம் தரவேண்டுமென வற்புறுத்தியது. இந்தப் பிரச்சினையில் இணக்கம் வராத நிலையில் தமிழ் அரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் ரெலோவுக்குச் சாதகமாக நியமனத்தைச் செய்யாமல் புளொட் அமைப்பின் க.சிவநேசனை நியமிப்பதற்கு வழிவிட்டிருந்தார். இதனையும் வலிந்து குற்றமாகச் செல்லலாமா?

புளொட் தலைமை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவப் பண்புகள் தொடர்பிலும் விமர்சனத்துடன் கருத்துரைத்துள்ளது. நல்லவை நல்லதாக இருக்கட்டும். இந்த விமர்சனங்கள் பொருத்தமற்றவை. ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்தச் சந்தர்ப்பத்தில் ஏனைய கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளின் தலைமைப் பண்புகள் பற்றி நாம் தற்போது விமர்சிக்க விரும்பவில்லை.

முல்லைத்தீவில் வடமாகாண் சபை அமைச்சராக வர வேண்டுமென மாகாணசபை உறுப்பினர்கள் அன்ரனி ஜெகநாதனைப் பிரேரித்த போதும் அவர் காலமானதன் பின் அந்த இடம் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் வர வேண்டுமென தமிழ் அரசுக் கட்சி வாதாடியிருக்கவில்லை என்பதையும் நினைவூட்டுகின்றோம். (உ-5)

## மூவின...

விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அரசியல் வாழ்வில் 40 வருடங்களை நிறைவு செய்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது. இந்தப் பிரேரணைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் போட்டியிடுமாறு மறைந்த அரச தலைவர் ஜெ.ஆர். ஜயவர்தனவே எனக்கு ஆலாசனை வழங்கினார். இதற்காக அவருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். அவரிடமிருந்து நிறைய அனுபவங்களை இளைஞராக இருந்த காலத்தில் எனக்கும் எனது சகாக்களுக்கும் பெறக்கூடியதாக இருந்தது. அதன்பிறகு முன்னாள் அரச தலைவர் ஆர்.பிரேமதாஸவின் கீழும் செயற்படக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இவ்விரு தலைவர்களிடமிருந்தும் பல விடயங்களைக் கற்கக்கூடியதாக இருந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவும் 40 ஆண்டுகளுக்கு முன்னரே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். மூத்த உறுப்பினர்களாக அவர்கள் இருவரும் இருக்கின்றனர். எனினும், என்னைப்போல் இந்த இருவரும் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் அங்கம் வகிக்கவில்லை.

கொள்கை அடிப்படையில் தனது கட்சியுடன் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் பதவியைத் துறந்து அன்று நாடாளுமன்றத்திலிருந்து சென்றார். இலங்கை இந்திய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் அவர் மீண்டும் நாடாளுமன்றம் வந்தார். பயங்கரவாதப் பிரச்சினை காரணமாக ஒரு தடவை அவர்களுக்குப் போட்டியிட வாய்ப்பளிக்கப்படவில்லை.

அதேபோல் காமினி ஜயவிக்ரமபெரேரா முதலமைச்சராக தெரிவாகிச் சென்றார். சிறந்த முதலமைச்சராகச் செயற்படுவது எப்படி என்று காண்பித்தார். ஒருவர் கொள்கைக்காகவும், மற்றையவர் அபிவிருத்திக்காகவும் இந்த அவையில் இருந்து சென்றனர்.

நாட்டில் போர் முடிவடைந்துவிட்டது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும், பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கூறியதுபோல் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகவே இருக்கின்றது.

எனவே, சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாம் இலங்கையராக பயணிக்கவேண்டும். அதற்குரிய அர்ப்பணிப்பை தேசிய அரசு செய்துள்ளது.

எந்தவொரு குடிமகனுக்கும் துளியளவேனும் பாகுபாடு இல்லாத வகையிலான அரசியல் தீர்வொன்றை இந்த நாடாளுமன்றத்துக்குள் அடையவேண்டும்-என்றார். (த)

## கூட்டமைப்புக்குள்...

என்பது எம்மால் ஏற்கப்படமுடியாத நிலமையாகும். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தா அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியாவில் நடந்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளினது சந்திப்புக்கு எமது கட்சியான ரெலோவும் அழைக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் பல்வேறு விடயங்கள் அங்கு பேசப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் மற்றும் ரெலோ ஆகிய மூன்று கட்சிகளோடு சில சிவில் அமைப்புக்களும் சேர்ந்து ஒரு தனி அணியாகச் சில அரசியல் நடவடிக்கைகளை மாவட்ட மட்டங்களில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் உண்மை நிலமைக்கு மாறானவை. எமது கட்சியைப் பொறுத்தமட்டில், தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரிலேயே, அதன் அங்கத்துவக் கட்சிகள் நான்கும் பரஸ்பரம் புரிந்துணர்வோடும் ஒற்றுமையோடும் செயற்படுவதே இன்றைய காலத்தின் கட்டாய தேவை என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம்.

கூட்டமைப்புக்குள் பல்வேறு பிரச்சினைகளும் சர்ச்சைகளும் நீடித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவை அனைத்தும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காக, சனநாயகக் கோட்பாடுகளின் வழியில் கூடிய விரைவாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டி நான்கு கட்சிகளும் மனந்திறந்து விவாதிப்பதன் ஊடாக நிகழ்காலத்தின் சவால்களை ஒற்றுமையாக நாம் அனைவரும் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இதற்குப் பதிலாக, கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சியைத் தவிர்த்து, ஏனைய மூன்று கட்சிகளும் கூட்டமைப்புக்குள்ளேயே ஒரு தனி அணியாகச் செயற்படுவது என்பது எம்மால் ஏற்கப்படமுடியாத நிலமையாகும். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் அங்கத்துவக் கட்சிகள் சந்தித்து விவாதிப்பது என்பது கட்சிகளின் தலைமைத்துவ மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கையே தவிர, மாவட்ட மட்டத்தில் கையாளப்படக் கூடிய ஒரு விவகாரம் அல்ல என்பதையும் இந்தச் சந்தர்ப்பதில் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றுள்ளது. (த-5)

## சத்தியலிங்கம்...

வும் கிளறியெடுத்து விவகாரமாக்கியிருக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை வெளிவந்ததிலிருந்து வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை சர்ச்சைக்குள்ளாகியிருந்தது. இரு அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். மற்றைய இரு அமைச்சர்களையும் குற்றவாளிகள் அல்லர் என்று விசாரணைக் குழு விடுவித்திருந்தாலும், அவர்கள் மீது மீள்விசாரணை வேண்டும் என்றும் அதுவரை கட்டாய விடுப்பில் இருக்கவேண்டும் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிக்க, அது அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வரை சென்றிருந்தது. கட்டாய விடுப்புக் கோரிக்கையை முதலமைச்சர் மீளப் பெற்றதும், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான மேல்நடவடிக்கை நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் ரெலோவின் கோரிக் கைக்கு அமைவாக அமைச்சர் டெனீஸ்வரனை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் சந்தித்த பின்னர் இந்த விவகாரங்கள் அமிழ்ந்து போயிருந்தன.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதில், நான் நியமிக்கும் விசாரணைக்குழு முன்பாகத் தோன்றமாட்டோம் என்றும், சட்ட ரீதியான சுயாதீன விசாரணைக்குழு முன்பாகவே தோன்றுவீர்கள் என்றும் நீங்கள் தெரிவித்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. அவை நீங்கள் கூறியவைதானா ? என்று கேட்டுள்ளார். (த-5-101)

## கூட்டாட்சி...

தமிழ் அரசுக் கட்சி சார்பில் மன்றில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முதல்நிலை ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தார். இந்த வழக்கின் தீர்ப்பு வரும் வரையில் ஏனைய வழக்குகள் திகதியிடப்பட்டு வந்தன.

முதலாவது வழக்கு தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது யாப்பில் சமஷ்டி (கூட்டாட்சி) என்ற சொல்லைப் பயன்படுத்தி வந்தது. 1981ஆம் ஆண்டு கட்சி யாப்பில் வடசொற்களுக்குப் பதிலாக தமிழ் சொற்கள் மாற்றப்பட்டன. இதன்போது சமஷ்டி என்ற சொல்லுக்குப் பதிலாக இணைப்பாட்சி என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

இது சமஸ்டிக்கும் அப்பாற்பட்டது என்று முறைப்பாட்டாளர்கள் மன்றில் சுட்டிக்காட்டியிருந்தனர். அது அப்படியல்ல என்று அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதங்களை முன்வைத்திருந்தார். முறைப்பாட்டாளர்கள் கூறுவதைப் போன்று இணைப்பாட்சி என்பது சமஷ்டிக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் அது பிரிவினை அல்ல. சமஷ்டியின் ஓர் அங்கமே என்று வாதம் முன்வைத்திருந்தார்.

கனேடிய உயர் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பு, கொசோவா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு தீர்ப்புக்களை மன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனடிப்படையில், தலைமை நீதியரசர் தீர்ப்பின் சாராம்சத்தை நேற்று அறிவித்தார். அதில், கூட்டாட்சிக் கோரிக்கை பிரிவினை அல்ல என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாட்டுக்குள் தனி நாடு உருவாக்கும் வகையில் செயற்படவில்லை என்பதையும் குறிப்பிட்டார். முழுமையான தீர்ப்பு இன்று வெளியிடப்படும்.

இதேவேளை, இந்த வழக்குகளின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருந்தால், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற, மாகாண சபை உள்ளிட்ட அனைத்துப் பதவிகளும் பறிக்கப்படும். நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு 7 ஆண்டுகள் சிறை வைக்கப்படலாம். அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5-101)

## புரிந்துணர்வில்...

மற்றைய கட்சிகளே என்று சாடியிருக்கிறார் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா.

கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சியே தடையாக இருக்கிறது என்று அண்மையில் சாடியிருந்தார் புளொட் தலைவர் த.சித்தார்த்தன்.

அதற்குப் பதிலளித்திருக்கும் மாவை, இப்பொழுதும் அத்தகைய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்குத் தமிழ் அரசுக் கட்சி தயாராகவே இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

"கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயத்தில் பதிவுக்குப் பதிலாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட இணங்கி நடவடிக்கையெடுக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி அதில் கைச்சாத்திட முன்வந்தது. அதனை கூட்டுக் கட்சிகளே தாமதப்படுத்தி விட்டன. அதனால் அந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வரவில்லை. இருப்பினும் இப்பொழுதும் அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறோம்"" என்று மாவை தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பதிவு செய்யப்படவில்லை என்று அதில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டி வருகின்றன. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் இந்த விவகாரம் பெரிதாகக் கிளம்பும். பின்னர் அடங்கிவிடும். (உ-5)




பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் கபடி அணிக்கான ஒரு தொகுதி ஜெர்சிகளை சிவன் அறக்கட்டளை நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன் நேற்றுமுன்தினம் வழங்கினார். (ம

# விண்மீன் - இளைஞர் இறுதியில் மோதல்

கரணவாய், ஓக. 5

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு இந்த இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்துக்கு முன்னதாக இடம்பெறும் காட்சி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

கழகத்தலைவர் அ.அற்புதரஞ்சன் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-108)



விண்மீன் வி.க.



திக்கம் இளைஞர் வி.க.



# ஐக்கியம் அன்ரனிஸ் வீனஸ் வென்றன

கரணவாய், ஓக. 5

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடந்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அரியாலை ஐக்கியம், பாசையூர் சென். அன்ரனிஸ், வீனஸ் அணிகள் வெற்றிபெற்றன.

ஐக்கியத்தின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தில் தனித்து ஆதிக்கம் செலுத்திய சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

தொடர்ந்து நடைபெற்ற பிறிதொரு ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றிபெற்றது வீனஸ் அணி. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவத் கழகங்களுக்கு இடையில் நடத்தும் வி.ரி. மகாலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன. இதன்படி காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து மணற்தறை றெஜின்போ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# பருத்தித்துறை பிரதேச செயலகம் கரம் தொடரில் சம்பியனானது



கரணவாய், ஓக. 5

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட பெண்களுக்கான கரம் தொடரில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் மோதின.

மூன்று தனிநபர் சுற்றுக்களையும், இரண்டு இரட்டையர் சுற்றுக்களையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. 3:2 என்ற செற் கணக்கில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ம-108)

# அச்சுவேலி தோப்புவாலிபர் முன்னேற்றம்

கரணவாய், ஓக. 5

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது புத்தூர் சென்றல் ஸ்ரார் அணி. அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:19, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய தோப்பு வாலிபர் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இலங்கை மீதான பிடியை வலுப்படுத்தியது இந்தியா



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளில், இலங்கை மீதான தனது பிடியை மேலும் இறுக்கியது இந்திய அணி.

கொழும்பில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. லோகேஸ் ராகுல், புஜாரா, ரகானே ஆகியோரின் சிறந்த ஆட்டத்தால் முதல்நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புஜாரா 128 ஓட்டங்களுடனும், ரகானே 103 ஓட்டங்களுடனும் இரண்டாவது நாளுக்கான நேற்றுக் களமிறங்கினர்.

133 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஜாரா. 132 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ரகானே. அஸ்வின், சகா இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச் சதம் கடந்தனர். 54 ஓட்டங்களுடன் அஸ்வினையும், 64 ஓட்டங்களுடன் சகாவையும் வீழ்த்தினார் கேரத். ஜடேயா பின்வரிசையில் அடித்தாடி 70 ஓட்டங்களைக் குவித்தார். 85 பந்துகளில் அவர் 70 ஓட்டங்களை எடுத்திருந்தார். இவற்றில் 3 சிக்சர்களும் அடங்குகின்றன. 9 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது இந்திய அணி.

பந்துவீச்சில் கேரத் 4 இலக்குகளையும், புஸ்பகுமார 2 இலக்குகளையும், கருணாரத்ன, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் தரங்க. வீழ்த்தியவர் அஸ்வின். ஆடுகளம் பந்துவீச்சுக்கு சாதகமாக மாறியதை பந்தின் தாறுமாறான திரும்பல்களில் இருந்து அறியமுடிந்தது. அஸ்வின் வீசிய ஒரு சில பந்துகள் சுமார் 30 முதல் 60 டிகிரி கோணங்களுக்கும் திரும்பின. கருணாரத்னவும் அஸ்வினிடம் சிக்கினார். நாள் முடிவில் இலங்கை 2 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடனும், சந்திமல் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## இலங்கை பாடசாலைகள் சங்கத்தின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 5

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தத் திட்டமிட்ட 12 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இன்று இடம் பெறவுள்ளன.

காலைமுதல் தொடரின் ஆட்டங்கள் நடைபெறும். இறுதியாட்டம் மாலை 4 மணிக்கு இடம்பெறும். இறுதியாட்ட நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுனத்தின் இயக்குனர் வேலாயுதம் கணேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக வலிகாம கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ஆர்.யுவராஜ், உடற்கல்வி படிஜோமா சங்கத் தலைவர் தர்மகுமாரன், வலிகாமம் வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஐ.சசி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

## அஸ்வின் அபாரம்

இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின், 200 இலக்குகள் 2 ஆயிரம் ஓட்டங்கள் என்ற அடைவை நிலைநாட்டினார்.

தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின் முதல் இன்னிங்ஸுக்காக 54 ஓட்டங்களைச் சேர்த்தார். அவர் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது டெஸ்ட் அரங்கில் 2ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டார். இந்திய அணியைப் பொறுத்த வரை இந்த அடைவை நிலைநாட்டிய ஏனைய வீரர்களாக கபில்தேவ், அனில் கும்ளே, ஹர்பஜன் ஆகியோர் உள்ளனர். (ம)

இந்த வார புதுவிதியில்
20.00




சன்னங்களின் திசை மாறல்
படிப்பினையாகும் முல்லை விவசாயிகள்
38 கண்டுபிடிப்புக்களின் நாயகன்
பலியாகும் முன்னாள் புலிகள்
கதவைத்திறந்தது காற்றுவரவா?
மற்றும்பல அம்சங்களுடன்...
தொடர்புகளுக்கு :- 021 4927 470
இன்று முதல் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும் !

# உதயன்

## நடத்தும்

**தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள்**



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றினை அதிகரிக்கும் நோக்கில் **உதயன்** நடத்தும் இலவச கருத்தரங்குகள்

**06.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி- 2.30 வரை**

**ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை / சாவகச்சேரி நகரசபை மண்டபம்**

**வளவாளர்கள்**

திரு.செ.அம்பிகைபாகன் (புலமை ஆசான்) திரு.சு.திலீப்குமார் (முன்னணி வளவாளர்)
திரு.P.பார்த்தீபன் (அச்சுவேலி ஆரம்ப பாடசாலை) திரு.என்.எஸ். தீபன் (பிரபல ஆசிரியர்)

**குறிப்பு:** அனைத்து மாணவர்களும் பெற்றோர், பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகை தரவும்

ஏற்பாட்டாளர்கள்: வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயம் | புலமைச்சுடர்


# 4 ஆயிரம் கோடிக்கு நெய்மர் ஒப்பந்தம்



பார்சிலோனா கழகத்தின் வீரரான நெய்மர், இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபா கொடுத்து பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக வாங்கப்பட்டார்.

5 வருட காலத்துக்கு நெய்மர் பரிஸ் செயின்ட் ஜேர்மன் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கால்பந்தாட்ட வரலாற்றில் அதிக தொகை கொடுத்து வாங்கப்பட்ட வீரர் என்ற பெருமையும் நெய்மருக்குக் கிடைத்துள்ளது. (ம)


**காரியாலய உதவியாளர் தேவை**

நெல்லியடியில் இயங்கும் உதயன் நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்துக்கு **காரியாலய உதவியாளர்** தேவை.
ஆர்வமுள்ளவர்கள் **06.08.2017 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நெல்லியடி கிளைக் காரியாலயத்துக்கு நேரில் சமுகம் தரவும்.**
**உதயன் நெல்லியடிக்கிளை, இல. 55 பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**

**வெளிநாட்டு கல்வி, வேலைவாய்ப்பு, நிரந்தர குடியுரிமை தொடர்பான வழிகாட்டல்**

இடம்

**WHITE LOTUS CAMPUS**
**Navalar Road, Jaffna**

காலம்

**05/08/2017 - 06/08/2017**
**சனி மற்றும் ஞாயிறு**

தொடர்புகளுக்கு : 0217223773 0779324255

ஆவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பா நாடுகள், மலேசியா, சிங்கப்பூர் என அனைத்து நாடுகளுக்குமான வழிகாட்டல்களும் வழங்கப்படும்

# ARUL STUDY CIRCLE

**111,Bonjean Road,Kotahena,Colombo - 13**
**T.P.: 011 233 1495, 011 247 0148**

**2017 - G.C.E. O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கொழும்பு அருள் கல்வி வட்டத்தினால் நடத்தப்படும் இலவசக் கல்விக் கருத்தரங்கு**

## இலவசக் கல்விக் கருத்தரங்கு

குறிப்பு - இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்
1. சகலபாடங்களும் அடங்கிய கையேடு
2. 2016 ஆம் ஆண்டு கடந்தகால வினாவிடை
3. 2016 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய விஞ்ஞான வினா விடைக்கொத்து (30 வருடம்)
4. கணிதபாடம் 5 மாதிரி வினாத்தாள்கள் பகுதி IA, பகுதி - IB

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 10.08.2017 (வியாழக்கிழமை) | வேலணை பிரதேச செயலகம் வேலணை (இருபாலாரும்) | காலை : 08.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| 11.08.2017 (வெள்ளிக்கிழமை) | தொழில்நுட்பக் கல்லூரி. யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 12.08.2017 (சனிக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம். யாழ்ப்பாணம் (பெண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 13.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம். யாழ்ப்பாணம் (ஆண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 14.08.2017 (திங்கட்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம். யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 15.08.2017 (செவ்வாய்க்கிழமை) | உருத்திரபுரம் தமிழ்மகா வித்தியாலயம் கிளிநொச்சி (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 16.08.2017 (புதன்கிழமை) | கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கற்சிலைமடு (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 17.08.2017 (வியாழக்கிழமை) | மன்னார் நகரசபை மண்டபம் மன்னார் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 18.08.2017 (வெள்ளிக்கிழமை) | வவுனியா நகரசபை மண்டபம் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |

| பாடங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | திரு. V.தேவசேனாதிபதி - திரு. K.வசந்தன் - திரு. S. மணிமாறன் - திரு. M.லிங்கேஸ்வரன் |
| விஞ்ஞானம் | திரு. V.சுந்தரேஸ்வரன் - திரு. V.பிரேம்குமார் - திரு. மகேந்திரன் - திரு. றூடானி |
| தமிழ் | திரு. S.நடராஜா - திரு. K. திவாகர் |
| வரலாறு | திரு. S.நடராஜா - திரு. S. ஐங்கரன் |

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் : சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதி LLB
T.P. 077 113 3400 / 011 232 7524

தொடர்புகளுக்கு : திரு. P.இளமுருகன் - 077 907 3593 - திரு. சக்திதரன் AD - 077 842 9649
திரு. சுந்தரேஸ்வரன் - 077 385 0841 - திரு. A. முருகானந்தன் - 071 856 1252
திரு. ஐங்கரன் - 077 715 7779

ஊடக அனுசரணையாளர்: உதயன்

அனைவரும் பாடசாலை சீருடையில் கலந்துகொண்டு பயன் அடையுமாறு வேண்டப்படுகின்றீர்கள்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.